










# மீள்பார்வை

මීල්පාර්වෙ


Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 387 • 02 பெப்ரவரி 2018 வெள்ளிக்கிழமை • ஜமாதுல் அவ்வல் 1439 • விலை 40.00







# முஸ்லிம் தனியார் சட்டத்திருத்த அறிக்கை ஒரு பக்கச் சார்பானதா?




கடந்த 9 வருடங்களாக இழுத்தடிக்கப்பட்டு வந்த முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தத்துக்கான அறிக்கை தற்போது நீதியமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த அறிக்கையின் நம்பகத் தன்மை தொடர்பில் பல்வேறு மட்டங்களிலும் கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்களை முன்மொழிவதற்காக நீதியரசர் ஸலீம் மர்சூப் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினரின் அறிக்கைக்கு மேலதிகமாக பெரும்பான்மை ஒப்புதல்களுடன் கூடிய மற்றுமொரு அறிக்கை அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் தலைவர் உள்ளிட்ட குழுவினரால் முன்வைக்கப்பட்டது.

ஏற்கனவே இந்தக் குழுவில் 18 பேர் உள்ளடங்கியிருந்த நிலையில் 9 பேர் ஜம்மியதுல் உலமா சார்பான அறிக்கையில் கையெழுத்திட்டிருந்தனர். கடைசியாக நீதியமைச்சிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையில் (பக். 14)



ஒற்றுமையாய் போராடி சகல இனங்களுக்குமாகப் பெற்ற இலங்கையின் சுதந்திரத்தின் 70 ஆவது விழாவை முன்னிட்டு நான்கு இனங்களினதும் வழிபாட்டுத் தளங்களைத் தங்கியதாக புதிய 1000 ரூபா நோட்டு வெளியிடப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் வழிபாட்டுத்தலமாக சாய்ந்தமருது ஜும்மா பெரிய பள்ளிவாசலின் முகப்புத் தோற்றம் பொறிக்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாத முறியடிப்புச் சட்டத்துக்கான அழுத்தம் அதிகரிக்கிறது

இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) நீக்கி, புதிய பயங்கரவாத முறியடிப்புச் சட்டத்தை (CTA) அமுலுக்குக் கொண்டு வரும் வகையில் சர்வதேச சமூகம் இலங்கைக்குக் கொடுத்துவரும் அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன.

"இந்த விடயத்தில் இலங்கை வாய்ப்பேச்சளவில் உள்ளதே தவிர செயலளவில் எந்த முன்னேற்றத்தையும் காட்டவில்லை" என தற்போது சர்வதேச மனித உரிமைகள் நிறுவனமான ஹியூமன் ரைட்ஸ் வொட்ச் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச்சட்டமானது, காரணமின்றிய கைதுகளுக்கும், காலவரையறையின்றிய தடுப்புக் காவலுக்கும் வழிவகுக்கிறது என ஹியூமன் ரைட்ஸ் வொட்ச் அறிக்கையிட்டுள்ளது. (பக். 14)

## சமஷ்டி என்ற சொல்லை விட அதையொத்த ஆட்சியே முக்கியம்



இடைக்கால அறிக்கையில், இணைப்பு இடம்பெறலாம் அல்லது இடம்பெறாமல் இருக்கலாம், இணைப்பு நடைபெறுவதாக இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு இடம்பெற வேண்டும் என்ற மூன்று விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சமஷ்டி என்ற சொல் பாவிக்கப்படவில்லை. ஆனால் அது சமஷ்டி முறையிலான ஆட்சி முறையாக இருக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். (பக். 15)

## நிதிசார் கல்விகளை பாடசாலைகளில் இருந்து ஆரம்பிக்கத் திட்டம்



பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நிதிசார் கல்வியை மும்மொழியிலும் வழங்கும் நோக்கில் கல்வி அமைச்சு பங்குப் பரிவர்த்தனை ஆணைக் குழுவுடன் (SEC) புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளது.

நிதிசார் விழிப்புணர்வு, திறன், ஆற்றல் போன்ற பல விடயங்கள் நிதிசார் அறிவில் தங்கியுள்ளன என்ற வகையில் பங்குப் பரிவர்த்தனை நிலையம் பங்குச் சந்தை தொடர்பான அறிவினை சமூகத்தின் பல மட்டங்களுக்கும் கொண்டு செல்கிறது. இந்த வகையிலேயே அது தற்பொழுது பாடசாலைகளை நாடி வருகிறது. (பக். 15)

## ராவய விவகாரத்தில் தலையிட ஊடக அமைச்சருக்கு அழுத்தம்



இலங்கையின் முன்னணி சிங்கள மாற்றுப் பத்திரிகையான ராவயவில் நடைபெற்றதாக வர்ணிக்கப்படும் 'பத்திரிகையாசிரியர் புரட்சி' (Editorial Coup) தொடர்பில் ஊடக அமைச்சர் தலையிட வேண்டுமென சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

ராவய பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரும், பத்திரிகையின் தற்போதைய ஆலோசகராகவும் உள்ள விக்டர் ஐவனின் அழுத்தங்கள் காரணமாக ராவய பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஜனரஞ்ஜன (பக். 14)

## சிகரட் மூலமான அரச வருமானத்தில் வீழ்ச்சி



கடந்த 5 வருடங்களில் முதல் தடவையாக சிகரட் விற்பனை மூலம் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானம் 2017 இல் வீழ்ச்சியடைந்துள்ளது. முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் சிகரட் மூலமான அரச வருமானம் 2.7 பில்லியனினால் அல்லது 3.1 வீதத்தினால் குறைந்துள்ளது.

2014 ஆம் ஆண்டில் அரசாங்கம் சிகரட் விற்பனை மூலமாக 57 பில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றது. 2016 ஆம் ஆண்டாகும் போது இது 88.7 பில்லியனாக அதிகரித்து 12.46 வீத வளர்ச்சியைக் காட்டியது. (பக். 15)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் பலவிதம்

- மக்கீ உதுமான்.



வாக்களித்தல் பற்றிய கருத்தாடல் இப்படித்தான் இருக்கிறது...

வாக்கு என்பது சாட்சியாம். உடன் படிக்கையாம் அதனை சரியாக நிறை வேற்ற வேண்டுமாம்... இது பொதுவிதி

எப்படி நிறைவேற்றுவது ?எனக் கேட் டால் இப்படித்தான் பதில் வருகிறது.

ஒரு சாரார் கட்சியை இறுக்கமாக பிடித்துக் கொண்டவர்கள் அக்கட்சி, எது சொல்கிறதோ அதனை வேத வாக்கி யமாக ஏற்பவர்கள் கட்சிப்பித்தர்கள். எங்கள் கட்சிக்கே நாம் வாக்களிப்போம். எம்மை யாராலும் மாற்ற முடியாதென் கின்றனர்.. பிழையோ சரியோ கட்சியே சரி என்ற வாதத்தையுடையோர். நாம் இப்படித்தான் என்கின்றனர்.

இன்னுமோர் சாரார் இவர்கள் எதனை யும் அறியாமல், அறிய முயற்சிக்காமல் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று கண்களுக்கு தெரியும் சின்னத்திற்கு வாக்களிப்போர்.. எது நடந்தாலும் பரவா யில்லை நாமும் நமது பாடும் என வாழ் வோர். நாம் இப்படித்தான் என்கின்றனர்.

மற்றுமோர் சாரார் இவர்கள் கட்சி களின் கொள்கைகளை தேடிப்பார்ப்பர். மேடைகளில் பேசுவதை நடுநிலையாக நின்று சிந்திப்பர்.. சரியான முடிவை இறுதியில் எடுப்பர். நாம் இப்படித்தான் என்கின்றனர்.

இப்படியும் ஒரு சாரார் இருக்கின்ற னர்.. இவர்கள் சுய இலாபத்திற்காக கிடைக்கும் வெகுமதிகளின் அளவுக் கேற்ப தங்களின் நிலைகளை காலத்திற்கு காலம் மாற்றிக் கொள்வர்.. அதற்கேட்ப வாக்களிப்பர்..இவர்களும் நாம் இப்படித் தான் என்கின்றனர்.

இவர்களில் யார் சரியாக சாட்சி கூறுவோர் என்பதை சிந்திப்போம்.




# தேசத்தின் எதிர்பார்ப்பு

- சாஜஹான்.

இங்கு எதுவுமே மாறப் போவதில்லை. ஒன்றன்பின் ஒன்றாக ஏதாவது பிரச்சினை களை உருவாக்கிக் கொண்டே இருப்பார்கள் நம் ஆட்சியா ளர்களும், அரசுகளும். மட்டு மல்ல எந்த சூழ்நிலையிலும் ஒரு பொதுப் பிரச்சினைக்கு அனைத்து மக்களும் ஓரணியில் திரள்வதை பொறுத் துக் கொள்ளமாட்டார்கள். அப்படியே திரண்டாலும் அதை முறியடிப்பதற்கான அனைத்து வேலைகளையும் செய் வார்கள். இவ்வாறான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் தங்களுடைய இலக்கை நோக்கிய பணிகளில் தொடர்ந்து பய ணிப்பவர்களால் மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்த முடியும். மாற்றம் என்ன என்பதை அனுபவரீதியாக ஏற்படுத்திய வர்களும் அதை உணர்ந்தவர்களாலுமே அனைத்து சூழ்நிலைகளாலும் நிலைத்து நின்று செயலாற்ற முடியும். இப்படிப் பட்ட செயல்வீரர்களைத்தான் இன்று தேசம் எதிர்பார்க்கிறது.

# முறைப்பாடு

- அஷ்ரப் சமத்.

பெண்கள் அரசியலுக்கு வருவது தடை என்றும் பெண் வேட்பாளர் களை கிண்டலடித்தும் உரை யாற்றிய புத்தளம் மௌலவிக் கெதிராக தேர்தல் ஆணையத்திலும் பொலிசிலும் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

# அனுபவ வரிகள்

- யஸீர் எம் அனீபா




தேவையற்ற முரண்பாடுகளும், பகைகளும் வளர்வதற்கான சிறந்த களம் 'அரசியல்'

# வெற்றி பெற்றான் அரசியல்வாதி

- றிஸ்மி,போறுதொட்டை.

ஒட்டிய வயிறும்
கந்தல் உடையும்
கதவைத் தட்டியது.
வயிற்றுப்பசிக்காய்
பிச்சைக்காரன்.

கோட்டும் சூட்டும்
முட்டி வயிறும்
கதவைத்தட்டியது.
அதிகாரப்பசிக்காய்
வாக்குப் பிச்சைக்காரன்.

அதிகாரவர்க்கம்
அடியோடொழிய
வாக்குச் சீட்டில்
பிழை போட்டு
என் எதிர்ப்பை
நான்காட்ட

அதையும் சரிகண்டு
வெற்றிபெற்றான்
அரசியல் வாதி.

# அரசியல் தலைமைத்துவம்

- சப்ரி முஹம்மட்.

சில அரசியல் தலைவர்கள் தமக்கு வாக்களிக்கும் மக்களை நாட்டின் ஆளுமையுள்ள பிரஜை களாக மாற்றுவதை விடுத்து, அவர்களை தங்களின் அடிமை களாக வளர்த்தெடுக்கவே விரும்பு கிறார்கள்.



# அரசியல் ஏன் இப்படி இருக்கிறது?

- இன்ஷாப் பன்சிதீன்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டியிலிருந்து கொழும்புக்கு வந்தேன். இரு முக்கியமான நகரங் களிலே கடுமையான வாகன நெருக் கடி. அங்குமிங்குமாய் எட்டிப் பார்த் தேன். பாதை ஓரங்களில் பச்சைக் கொடி நீலக் கொடி கட்டப்பட்ட பஸ் வண்டிகள். ஒஹோ இவர்களது கூட்டம் போல அதுதான் இப்படி இருக்கிறது என நினைத்துக் கொண் டேன். கொஞ்சம் முன் நோக்கி செல்லும் போதுதான் விளங்கிக் கொண்டேன் கூட்டம் முடிவடைந்து பல மணித்தியாலங்கள் ஆகி விட்டது என்று. இந்த நெரிசலிற்குக் காரணம் மதுபான சாலைகளில் பஸ் வண்டி களை நிறுத்தி விட்டு மக்கள் கூட்டம் கூட்டமாக அந்த சாலையில் கும்மாளம் அடித்துக் கொண்டிருக்குறார்கள். பொ லிஸ் ஒரு பக்கமாக இருந்து வேடிக்கை பார்க்கிறார்கள்.

இதனை நாம் மாற்றக் கூடாதா? இதுவா நாம் விரும்பும் அரசியல். நாம் புதிய விழுமியங்களுடனான மாற்று அரசியல் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டாமா? பல பிரதே சங்களிலே அதன் அத்திவாரம் ஆரம் பிக்கப்பட்டுவிட்டன. இது இன்னும் வியாபிக்க வேண்டும். நாம் சிறுபான் மை கட்சிகள் இவ்வாறான மாற்று அரசியலை விரும்புகின்ற பெரும் பான்மை கட்சிகளை இனங்கண்டு அவர்களுடன் இணைய வேண்டும். புத்திஜீவிகள் சிறந்த அரசியல் ஆய் வாளர்கள் சிவில் அமைப்புகள் இத னை நிச்சயமாக ஆதரிப்பார்கள். மக்கள் விடுதலை முன்னனி இவ்வாறான விழுமியங்களைக்




கொண்ட கட்சி. நாம் பேசுகின்ற விடை யங்களையை அவர்களும் பேசுகிறார்கள். அவர்களது சில பிரதேச சபை உறுப் பினர்கள் பஸ் வண்டியிலும் முற்சக்கர வண்டியிலும் ஏன் துவிச்சக்கர வண்டிகளில் கூட சபைக்கு வருகிறார்கள்.

அண்மையில் சுனில் ஹதுன்னெத்தி அவர்கள் முஸ்லிம்களின் சிந்தனைகளுக்கு மிகவும் நெருக்கமான கட்சி நாம் தான் என்று பரவலாகக் கூறி எம்மை அவர்க ளுடன் இணையுமாறு அழைத்திருந்தார். எனவே, மாசற்ற, மக்களுக்காக உண்மை யாக சேவை செய்கின்ற அரசியல் கலாச்ச ாரம் ஒன்றை உருவாக்க வேண்டிய உன்ன தமான காலத்தில் நாம் இருக்கிறோம். மாற் றத்தை வேண்டியவனாக.

# 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி அதிகார சபை தேர்தலுடன் தொடர்புடைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் மாகாணசபை உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பான நெறிப்படுத்தல்கள்

இலங்கை அரசியல் யாப்பு உறுப் புரை 170 அரச ஊதியம் பெறுகின்ற உத்தியோகத்தர்களை அரச உத்தியோகத் தர்கள் என வரைவிலக்கணப்படுத்தி யுள்ளது. இது தண்டனை சட்டக்கோவை யின் பிரிவு 19 இல் மேலும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல் யாப்பின் 04வது உறுப்புரைக்கு அமைய அனைத்து அரச ஊழியர்களும் அரசியல் யாப்பினை அங்கீகரித்து பிரகடனப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிப்ப துடன், அதனை பாதுகாக்கவும் கடமைப் பட்டுள்ளனர். மேலும், அரசியல் யாப் புக்கான 06வது திருத்தத்தின் ஊடாக அரசியல் யாப்புக்கு அமைவாக செயற் பட அனைத்து அரச உத்தியோகத்தர் களும் சத்தியப் பிரமாணம் செய்துள்ள னர்.

அரசியல் யாப்பின் 12வது உறுப்பு ரைக்கமைய சட்டத்தின் முன் யாவரும் சமம், மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்களாவர். வாக்களிக்கும் உரிமை, அடிப்படை உரிமை என இலங்கை உயர் நீதிமன்றம் பிரகடனப்படுத்தியுள்ளது. இதனடிப்ப டையில் வாக்களிப்பதானது அரசியல் யாப்பு மற்றும் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு அமைவாக நடைபெறு கின்றதை உறுதிப்படுத்த சகல உத்தி யோகத்தர்களும் கடமைப்பட்டுள்ளனர். நீதியாகவும், பக்கச்சார்பின்றியும் சட்டத் திற்கமைவாக உத்தியோகபூர்வ கடமை களைச் செய்வதற்கு அரச உத்தியோ கத்தர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள் ளது.

அரச உத்தியோகத்தர்கள் பொறுப் புக்களை முறைகேடாக பாவித்தல், வரம்பு மீறி செயற்படுதல், நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற் றாமல் இருத்தல், அல்லது துஷ்பிர யோகம் செய்தல், தேவையற்ற முறை யில் தாமதப்படுத்தல் போன்றன அரசி யல் யாப்பின் படி அடிப்படை உரிமை மீறல்களாகும். அவ்வாறான சந்தர்ப்பங் களின் போது குறிப்பிட்ட அந்த உத்தி யோகத்தர்களுக்கு எதிராக புலனாய்வு மற்றும் விசாரணைகளை மேற்கொள்ள வும் அவர்கள் தொடர்பாக செயற்பட வும் 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட் டத்தின் படி இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருக்கிறது.

சட்டப் பொறுப்புக்களை கொண் டுள்ள அரச உத்தியோகத்தர்கள் அவ் வாறான அதிகார துஷ்பிரயோகம் மற் றும் சட்ட வரம்பிற்கு மேலாக செயற் படல் அல்லது செய்யப்பட்ட கடமை களை செய்யாதுவிடல் அல்லது நியாய மான காரணங்களின்றி அவர்களின் கடமைகளை செய்ய தாமதித்தல் இவற் றின் விளைவு அடிப்படை உரிமை மீறலாகும்.

அரச உத்தியோகத்தர்கள் அடிப்படை உரிமைகளை மீறும்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 1996 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய அத்தகைய அதிகாரத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும். அதற்கமைய பின்வருவன வற்றை மனதில் இருத்தி செயற்பட உங்கள் அதிகாரத்தின் கீழுள்ள நிறுவன ஆளணியிற்கு தயவுசெய்து அறிவிப்ப தற்கு நடவடிக்கை எடுக்கவும்

- நீதியாகவும் பக்கச்சார்பற்ற வகை யிலும் சட்டம் அமுல்படுத்தப்படு வதை பார்ப்பதற்கும்
- சட்டம் அமுல்படுத்தப்படாமை, அரசியல் பக்கச்சார்பாக அதிகாரங்களை பயன்படுத்துவது உள்ளடங்கலாக அதி கார துஷ்பிரயோகம் என்பவற்றின் விளைவு அடிப்படை உரிமை மீறலா கும். அரச பொறுப்புக்களுக்கு மேலதி கமாக உத்தியோகத்தர்களுக்கும் அத்த கைய மீறல்கள் தொடர்பாக தனிப்பட்ட பொறுப்பும் உள்ளது.

இந்த அறிவித்தலானது 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட் டத்திற்கு இணங்க வழங்கப்படுகிறது.

கலாநிதி தீபிகா உடகம,
தவிசாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு


## அல்-ஆகில் புலமைப் பரிசில் நிதியம் 2018 தெரிவுகள்

இலங்கை பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், கணினி விஞ்ஞானம் ஆகிய துறைகளில் முதலாம் ஆண்டில் பயிலும் உயர் கல்வித் தகைமைகள் கொண்ட, வருவாய் குன்றிய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- 30% க்கு குறையாத தொகை இஸ்லாம் அல்லாத சமயங்களைப் பின்பற்றும் மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

1. விண்ணப்பப் படிவம் கோரும் கடிதம்
2. UGC ஆவணத்தின் போட்டோ பிரதி
3. சொந்த Email முகவரி என்பவற்றை இணைத்து

**Al-Agil Scholarship Fund,**
23/3, Market Road, Dharga Town -12090

எனும் முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பி, விண்ணப்பப் படிவங் களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- விண்ணப்பப் படிவம் Email மூலம் மாத்திரமே அனுப்பப்படும்.
- அரச சார்பற்ற நிதியங்கள் மூலம் உதவி பெறுகின்ற அல்லது உதவி பெறத் தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் தயவு செய்து விண்ணப்பிக்க வேண்டாம்.

**படிவ விநியோக கடைசித் திகதி 15 பெப்ரவரி 2018**
**விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதி 28 பெப்ரவரி 2018**

- நேர்முகத் தேர்வுக்கெனத் தேர்ந்துகொள்ளப்படும் மாணவர்கள் மாத்திரமே தொடர்பு கொள்ளப்படுவர் என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.


# தேர்தல் உரிமை மீறல்களை தேர்தல் முறைப்பாட்டு மையத்தில் பதிவுசெய்யலாம்

**-இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு-**

2018 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சம்பந்தமான உரிமை மீறல் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விஷேட மையத்தினை தாபித்துள்ளது.

பெண் வேட்பாளர்களுக்கு எதிரான உரிமை மீறல்கள் குறித்து விஷேட கவ னம் செலுத்தும் வகையில் இம்முறைப் பாட்டு மையம் தாபிக்கப்பட்டுள்ளது. 24 மணிநேர துரித அழைப்புச் சேவை யாக இயங்கும் இந்த முறைப்பாட்டு மையத்தினை 0773088135 அல்லது 0773762112 என்னும் தொலைபேசி எண் களினூடாகத் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை பதிவுசெய்ய முடியும்.

இது தவிர, 0112505574 தொலைநகல் இலக்கத்தினூடாகவும், iihrcssrilanka@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரி யினூடாகவும் முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் கலாநிதி தீபிகா உடகம வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளனின் கழுத்தில் மாட்டப்படும் தொண்டு

• நேசன்

உள்ளூராட்சித் தேர்தல்கள் நெருங்கி விட்டன. புதிய முறையில் தேர்தல் என்பதை மக்கள் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள முன்னரேயே தேர்தல் மக்களை அண்மித்துவிட்டது. வாக்காளப் பெருமக்கள் அனைவருமே அரசியல் சித்தாந்தங்களைக் கரைத்துக் குடித்தவர்கள் அல்ல என்ற வகையில் பொது மக்கள் புதிய தேர்தல் முறைபற்றி மேலும் அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும். உயர்தரப் பரீட்சையில் கடுமையாகப் படித்து சித்தியெய்தி பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான எதிர்கால புத்திஜீவிகளுக்கே பல்கலைக் கழக அனுமதிப்பத்திரத்தை நிரப்புவதற்கான வகுப்புக்கள் நடத்தி அறிவுறுத்தப்படும் போது நமது சாமானிய வாக்காளன் எம்மாத்திரம் ?

இது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு நிலையங்களில் ஒன்றான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி கூறும் போது, தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரே தேர்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இத்தேர்தல் முறைபற்றி தெளிவுபெறுவதற்கான காலப்பிரிவொன்று வாக்காளர்களுக்கு இருக்கவில்லை என்கிறார்.

இந்த வகையில் தற்போது நடத்தப்படப் போகும் தேர்தல் வாக்காளனை ஏமாற்றி, அவனுடைய உதவியால் அரசியல்வாதியாகி, அவனது கழுத்துக்கே தொண்டு மாட்டுவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்துள்ளன. புதிய தேர்தல்முறை வாக்காளனை விட அரசியல்வாதிகளுக்கும் அரசியல்கட்சிகளுக்குமே பெரும் வரப்பிரசாதமாக அமையப் போகிறது. இடையில் ஏமாந்த சோணகிரியாக வாக்காளன் துள்ளிக் குதிப்பது தான் வாடிக்கையான அரசியல் வேடிக்கை.

அரசாங்கத்தை அமைப்பதற்காக பொதுமக்களுக்கு அரசியல்வாதிகள் வழங்கும் வாக்குறுதிகளில் ஒன்றாக, ஊருக்கு ஒரு மந்திரியைத் தெரிவு செய்து கொள்ளும் தேர்தல் முறையொன்று அறிமுகப்படுத்தப்படும் என சிரிசேன-ரணில் அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்தது. அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் தேர்தல் முறை மக்கள் நேயமுள்ளதா என்பது தொடர்பில் மக்களே இன்னும் போதிய



தெளிவில்லாமல் இருப்பது, அரசியல்வாதிகளுக்கே சாதகமாக அமைந்திருக்கிறது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது, தகுதியானவர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள் என்று பொதுமக்களிடம் மன்றாடிக் கேட்கப்பட்டது. பொதுமக்கள் இவற்றுக்குச் செவிசாய்க்கவில்லை என்று மொத்தமாகக் குற்றஞ் சாட்டுவதற்கு வழியின்றி, கட்சிகளும் மக்களுக்கு சிறந்த தெரிவை வழங்கும் வகையில் அபேட்சகர்களை நிறுத்தவில்லை. அதனால் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களை வலுக்கட்டாயமாக தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைக்கு பொதுமக்கள் தள்ளப்பட்டார்கள். இந்தத் தவறைத் திருத்திக் கொள்வதற்கு புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறை மக்களுக்கு வழியமைக்கப் போவதில்லை. புதிய தேர்தல் முறையின்படி 60 வீதம் வட்டாரம் மூலமும், 40 வீதம் கட்சிகள் முன்வைத்த பட்டியல்கள் மூலம் தெரிவு செய்யப்படுவர். இதற்கு மேலதிகமாக அனைத்து வேட்புமனுக்களிலும் மேலதிகமாக 03 பேரின் பெயர்களை கட்சிகள் உள்ளடக்க வேண்டும். இந்த வகையில் 30 பேர் கொண்ட ஒரு பிரதேச சபைக்கு 20 பேர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டாலும் இன்னும் 10 பேர் கட்சிச் செயலாளர் மூலமாக பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்படுவர். இவர்களில் மக்களால் வேண்டாம் என்று ஒதுக்கப்பட்டு, தேர்தலில் தோல்வியடைந்தவர்களையும் கட்சியின் செயலாளர் தெரிவு செய்து கொடுக்கலாம். இந்தத் தெரிவுகளில் இருந்தே சபைத் தலைவரும் உபதலைவரும் கூட (மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அன்றி கட்சியால் தெரிவு செய்யப்பட்டவர்களே) நியமிக்கவும் படலாம். இந்த இடத்தில் தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் மக்களிடமிருந்து விலகிச் செல்கிறது.

1971 கிளர்ச்சியின் பின்னர் ஜனாதிபதி பிரேமதாசவினால் நியமிக்கப்பட்ட இளைஞர் அமைதியின்மைக்கான காரணங்களைக் கண்டறிவதற்கான குழுவின் ஆலோசனைகளின் பேரில் இளைஞர்களுக்கு அரசியலில் அதிக பங்கு வகிப்பதற்கு இடமளிக்கப்பட்டது. வேட்புமனுவில் 18-35 வயதுக்கிடைப்பட்டவர்கள் 20 வீதம் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என முன்பிருந்த கடப்பாடு இப்போது இல்லை. இதனால் புதிய அரசியல் தலைமுறையொன்றை தெரிவு செய்வதற்கான வாய்ப்பு வாக்காளனுக்கு அற்றுப் போகிறது. அதேபோல எதிர்காலங்களில் சிறந்த அரசியல் தலைவர்கள் உருவாவதற்கான வாய்ப்பினையும் இது மறுதலிக்கிறது. ஆகவே, அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவர்கள் தான் தொடர்ந்தும் தேங்கி இருக்க நேரிடுகிறது. இந்த வகையிலும் வாக்காளனைவிட கட்சியின் தெரிவு தான் இங்கு முக்கிய இடம் வகிக்கிறது.

பெண் வேட்பாளர்கள் 25 வீதம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற விதியும் வாக்காளனுக்கு முக்கியமான தல்ல. நாட்டின் சனத்தொகையில் 52 வீதமாகவுள்ள பெண்கள், உள்ளூராட்சி அரசியலில் வெறும் 2 வீதத்தினையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் என்பது அரசியல்வாதிகளைத் தவிர வாக்காளனுக்கு பெரும் குறையாக விளங்கவில்லை. இலங்கையின் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் 10 பேரில் ஏழுபேர், தமது தந்தை, கணவர், சகோதரர் அல்லது அவரது குடும்பம் அரசியலில் ஈடுபட்டதால் அரசியலுக்கு வந்தவர்கள்.

இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலில் திடீரென பெண்களின் விகிதாசாரத்தை 2 இலிருந்து 25 ஆக அதிகரிப்பதென்றால், வேட்பாளர்கள் பட்டியலில் பெண்களை உள்வாங்குவதற்காக அரசியல்வாதிகளின் மனைவி, பிள்ளைகள், சகோதரிகள் என்றே முன்னிலைப் படுத்தப்படுவர். இது வாக்காளனைவிட, குடும்ப அரசியல் நடத்துபவர்களுக்கே வாய்ப்பாக அமைவதற்கு இடமளிக்கிறது.

இந்தத் தேர்தல் முறையில் ஒரு கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் சபைத் தலைவரையும் உப தலைவரையும் கட்சியின் செயலாளரே தீர்மானிப்பார். வாக்காளன் நினைக்கின்ற ஊழலற்ற நிர்வாகம், இந்த இடத்தில் இருந்தே குழிதோண்டிப் புதைக்கப்படுவதற்கு பல்வேறு சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. இதேபோல தனிக்கட்சியொன்று வெல்லாமல் பல கட்சிகள் சேர்ந்து சபைத் தலைவரைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் இங்கும் மந்திரிமார் ஏலத்தில் விலைக்கு வாங்கப்படும் சாத்தியங்களும் அனந்தமாக உள்ளன. இதுவும் வாக்காளன் எதிர்பார்த்த ஊழல் மோசடியற்ற நிர்வாகம் என்பது வாக்காளனால் தீர்மானிக்க முடியாத ஒன்று என்ற பிரமையை வாக்காளனுக்கு ஊட்டுகிறது.

இவ்வாறு வாக்காளனது வாக்குக்கு குறைந்த பெறுமானம் வழங்கும் இந்தத் தேர்தல் முறைக் கூடாக தலைக்கணம் பிடித்த அரசியல்வாதிகள் உருவாவது தவிர்க்க முடியாததாகிவிடும். வாக்காளனில் தங்கியிருக்க வேண்டிய தேவை இல்லை என தான் தெரிவானதற்குப் பின்னர் விளங்கிக் கொள்கின்ற ஓர் அரசியல்வாதி, உள்ளூராட்சி சபையால் வழங்கப்படும் அபிவிருத்தி வேலைகளின் போது நியாயமாக நடந்து கொள்வார் என எதிர்பார்க்க முடியாது. ஊவா முதலமைச்சர் அதிபரை மண்டியிட வைத்த ஆணவம், மஹிந்த ஆட்சியில் வடமேல்மாகாண உறுப்பினர் ஆனந்த குமார ஆசிரியர் ஒருவரை முழந்தாளிடச் செய்த தலைக்கணம், மேர்வின் சில்வா சமுர்தி அலுவலரை மரத்தில் கட்டித் தண்டித்த அகங்காரம் இவை அனைத்துமே அரசியல்வாதிக்கு தேவையற்ற முக்கியத்துவத்தைக் கொடுத்ததால் வந்த வினைகள். இந்தத் தேர்தல் முறை இதனை இல்லாதொழிப்பதற்குப் பதிலாக இந்த அரக்கத்தனமான அரசியலை வளர்க்கும் வகையிலேயே அமைந்திருக்கிறது.

(பக்.14)

# வாக்காளராகிய நாம்

• செய்னுலாப்தீன் நிஹாஸ்

தேர்தல் காலம் வந்தவுடன் மக்களிடம் பேசுபொருளாக மாறும் ஒரு விடயம், யாருக்கு வோட்டுப் போடுவது, யாரை வெல்ல வைக்க வேண்டும், எந்தக் கட்சி வெல்லும் என்பது. ஆனால் அதிகமாக, முக்கியமாகப் பேசப்பட வேண்டிய ஒரு விடயம் தான் வாக்காளர்களாகிய நாம், வெற்றி பெற்ற பின்பு வெற்றி பெற்ற நபரையும் கட்சியையும் கேள்விக்குட்படுத்தும் நாம், அவர்களைத் தெரிவு செய்தது யார், அவர்களைத் தெரிவு செய்யும் போது நமது சாட்சியம் எவ்வாறு இருந்தது, நான் யார் என்ற விடைகளுக்கான தெளிவான பதில்கள் கிடைக்காமலேயே அதிகமானோர் வாக்களித்து முடித்து விடுகின்றனர்.

எனவேதான், வாக்களிக்க முன் வாக்காளன் யோசிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் இந்தப் பத்தியில் பேசப்படுகிறது.

வாக்களிக்கத் தகுதி பெற்ற ஒவ்வொரு வாக்காளனும் முதலில் தனது மனதுடன் பேச வேண்டும். நான் ஏற்கனவே ஒரு கட்சியை, அந்தக் கட்சி சார்ந்த வேட்பாளரை எனது சுயநலத்துக்காகவா அல்லது தகுதி, பொதுநலன் என்பவற்றின் அடிப்படையிலா எனது வாக்கின் மூலம் சாட்சியம் சொல்லப் போகிறேன் என்ற நிதானமான, நடுநிலையான சிந்தனை வேண்டும். ஏனென்றால், இன்று எமது சமூகத்தில் கட்சியையும் தனி நபர்களையும் தனது தேவைகளையும் முற்படுத்தித் தான் அதிகமான வாக்காளர்கள் தீர்மானங்களை எடுக்கின்றார்கள். ஆகவே, தெரிவு செய்துவிட்டு விமர்சிப்பதை விட, தெரிவு செய்யும் முன் எமது மனச்சாட்சியை உண்மையாக கேள்விக்கு உட்படுத்த வேண்டும்.

வாக்களிப்பு எனும் சாட்சியத்தில் யாரைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டிய மற்ற விடயம் என்னவெனில், தேர்தலில் போட்டியிடும் நபர் எமது பிரதேசத்தில் வாழ்ந்தவராக, எம்மோடு உறவுகளைப் பேணியவராக இருக்க வேண்டும்.

இதன்போது இவரது கடந்தகால வரலாறு, குடும்பப் பின்னணி, இவர் தனது வேலைத்தளத்திலும் சமூக உறவாடலிலும் கடந்த காலத்தில் எந்தளவு நேர்மையாக நடந்து கொண்டவர், வாக்களிப்பது, அதனை நிறைவேற்றுவது, கடன் கொடுக்கல் வாங்கல்கள் விடயம், அவரது கல்வியறிவு, பேச்சாற்றல், மொழியாற்றல் என்பனவற்றை வாக்காளராகிய நாம் ஒவ்வொருவரும் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். ஏனென்றால், இன்று கட்சிகள் வாக்காளர்களின் தேவையுணர்ந்து, வேட்பாளர்களின் இயலுமைகளை உணர்ந்து வேட்பாளர்களைத் தெரிவு செய்யாமல், கட்சிகளின் தலைமைக்கு எவ்வளவு கட்டுப்படுபவர், கட்சிக்கு ஆற்றிய பணிகள், பணபலம், செல்வாக்கு என்பவற்றை மட்டுமே கட்சிகள் முதன்மைப்படுத்துகின்றன. மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ற வேட்பாளர்கள் நிறுத்தப்படாமை, பெரும் குறைபாடாக இன்று முஸ்லிம் அரசியலில் மாறியுள்ளது. மக்கள் இதற்கான தகுந்த பதிலடி வழங்காவிட்டால் தகுதியான வேட்பாளர்களை ஒருபோதும் கட்சிகள் முதன்மைப்படுத்தாது என்பதை வாக்காளர்களாகிய நாம் சிந்திக்க வேண்டும்.

வாக்காளர்களாகிய நாம் கவனிக்க வேண்டிய, கடந்த காலங்களில் தொடர்ந்து விடப்படுகின்ற இன்னொரு விடயத்தையும் பேசலாம் என்று நினைக்கிறேன். எம்மில் அதிகமான பெற்றோர் முதலாம் ஆண்டுக்கு தமது பிள்ளையை முதல் முறையாக பாடசாலையில் சேர்க்கும் பொழுதுள்ள ஆர்வமும் கவனிப்பும், அந்தப் பிள்ளை சாதாரண தரம் படிக்கும் வரையாவது தொடரப்படுவதில்லை என்ற உண்மையைப் போல, தேர்தல் காலங்களில் வாக்களிப்பில் பங்குபற்றும் நாம், தேர்தல் முடிந்த பின்பு எந்த வெற்றி



பெற்ற வேட்பாளரிடமும் அவர் தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகள் பற்றியோ, அல்லது சமூகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை எந்தளவு தூரம் அவர் நிறைவேற்றினார் என்பது பற்றியோ, சமகாலத்தில் தோன்றும் மிக முக்கிய பிரச்சினைகளின் போது தான் தெரிவு செய்த வெற்றி பெற்ற அங்கத்தவரின் நிலைப்பாடு, முயற்சி, அவர் சார்ந்த கட்சியின் செயற்பாடு என்பன பற்றியெல்லாம் அனேகமான வாக்காளர்களாகிய நாம் கேள்விக்குட்படுத்துவதில்லை. ஏனென்றால், வெற்றி பெற்ற பின் அவரை அந்தஸ்தில் கூடியவராகவும், அதிகாரம் மிக்கவராகவும், அவரிடம் உதவி கேட்டுச் செல்பவராகவும் மாற்றி விடுகின்றோம். இதன் காரணமாக யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய தேவை அவருக்கு இல்லை. எனவே தான் காலப் போக்கில் அவர் ஒரு சர்வாதிகாரியாக மாறி விடுகின்றார். இந்த இடத்தில் ஒரு வரலாற்றுச் சம்பவத்தை ஞாபகப்படுத்தலாம் என்று நினைக்கின்றேன். உமர் (ரழி) அவர்கள் கலீபாவாகப் பதவியேற்கத் தயாரானபோது மக்களில் ஒருவராக இருந்த ஒரு ஸஹாபி, உமரே, நீங்கள் நீதியாக ஆட்சி செய்யவில்லை என்றால், இந்த வாள்தான் உங்களுக்குப் பதில் சொல்லும் என்று தனது சாட்சியத்தை உறுதிப்படுத்தினார். இதைப் பார்த்த உமர் (ரழி) அவர்கள், இவ்வாறான மக்களை எனக்கு ஆட்சி செய்யத் தந்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் எனக் கூறி, கண்ணீர் விட்டார்கள். இந்த நிகழ்வுகள் எமது அரசியல், சமூகக் களத்தில் எந்தளவு உள்ளது என்பதை வாக்காளர்களாகிய நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. இந்த அரசியல் கலாச்சாரம், தலைவர்களை கேள்விக்குட்படுத்தும் பண்பாடு உருவாகும் வரை எமது அரசியலால் எதையும் நாங்கள் சாதிக்க முடியாமல் போய்விடும் என்பது மட்டும் உண்மை.

தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளர், எந்தளவு தூரம் தான் போட்டியிடும் பிரதேச மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் பற்றி தெளிவுடன் உள்ளார் என்பது பற்றியும் வாக்காளர்களாகிய நாம் அறிந்திருக்க வேண்டும். எனவேதான் தேர்தல் காலங்களில் வேட்பாளரின் இரண்டு விடயங்கள் பற்றி நாங்கள் கவனம் செலுத்த வேண்டும். அதில் ஒன்று எவ்வளவு சிறிய தேர்தலாக இருந்தாலும், தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்று உத்தியோகபூர்வமாக வேட்பாளர் ஒருவரினால் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இரண்டாவதாக, தான் வாக்குறுதியளித்த விடயங்களை எவ்வாறு நடைமுறைப் படுத்தப் போகிறார் என்பதை தேர்தல் மேடைகளில் அதன் நடைமுறைச் சாத்தியம் பற்றி மக்களிடம் தெளிவு படுத்த வேண்டும். வெறும் கற்பனைக் கெட்டாத வாக்குறுதிகளை, வார்த்தை ஜாலங்களால் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடுவதை நாம் ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. இந்த விடயம் சரியாக நடைபெற்றாலே வெற்றியீட்டிய அங்கத்தவரை நாம் கேள்விக்குட்படுத்த முடியும். உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் தேர்தல் விஞ்ஞாபனம், அதன் நடைமுறைச் சாத்தியம் என்பவற்றையெல்லாம் மீறி, தனது குடும்ப அங்கத்தவர், தனது நண்பர், உறவினர் என்று யோசிக்கும் மனோபாவம் காணப்படுகிறது. இவ்வாறான ஒரு தெரிவு முறைக்கு வாக்காளர்களாகிய நாம் வருவோமானால் நாம் எதிர்பார்க்கும் நீதியான ஆட்சி, ஊழலற்ற ஆட்சி, சர்வாதிகாரம் அற்ற போக்கு என்பதை ஒரு போதும் எமது நாட்டின் அரசியல் கலாச்சாரத்தில் கண்டுகொள்ளவே முடியாது.

வாக்காளர்களாகிய நாம் கவனிக்க வேண்டிய மற்றுமொரு முக்கியமான விடயம் தான் நாம் எவ்வாறு நபர்களின் தகுதியை முதன்மைப்படுத்துகிறோமோ, அதேபோன்று கட்சியின் தகுதியையும் முதன்மைப்படுத்த வேண்டும். ஏனென்றால், நாம் தெரிவு செய்யும் நபர் கட்சியின் மோசமான தலைமை, நிர்ப்பந்தம் என்பவற்றால் கட்டுப்படுத்தப்படலாம். இந்த வகையில் நாம் கட்சிகளின் கடந்த கால வரலாற்றை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நாம் தெரிவு செய்யும் கட்சி கடந்த காலத்தில் முஸ்லிம்களின் விவகாரத்தில் எவ்வாறான நிலைப்பாடுகளை எடுத்துள்ளன, இந்த நிலைப்பாடு முஸ்லிம் சமூகத்தின்

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## சுதந்திரப் போராட்டத்தின் நீட்சி

இலங்கை பிரித்தானியக் காலனித்துவத்திலிருந்து விடுபட்டு 70 வருடங்களாகின்றன. 400 வருடங்களுக்கும் மேலாக நமது நாடு போர்த்துக்கேய, ஒல்லாந்தர், ஆங்கிலேய காலனித்துவங்களின் கீழ் இருந்திருக்கிறது. இவர்கள் அனைவருமே இந்த நாட்டின் வளங்களைச் சூறையாடி, மக்களின் உழைப்பைச் சுரண்டி தமது நாடுகளை வளர்த்தார்கள். இதற்கென நமது நாட்டைத் தம்வசப்படுத்துவதற்காக அவர்கள் யுத்தங்களையும் புரிந்தார்கள். அப்போதெல்லாம் இலங்கையின் பாதுகாப்புக்காக முஸ்லிம் நாடுகள் படைகளை அனுப்பி வைத்ததை இலங்கையின் வரலாறு பதிந்து வைத்திருக்கிறது.

நாடு அடிமைப்படுத்தப்பட்டு மக்கள் அடக்கியாளப்படும் நிலைமையை உணர்ந்து கொண்ட இலங்கையின் அன்றைய தலைவர்கள் தமது நாட்டின் சுதந்திரத்துக்காக ஆங்கிலேயர்களுடன் போராடினார்கள். இரத்தம் சிந்தாத இந்தச் சுதந்திரப் போராட்டத்தின் போது நாட்டிலுள்ள சகல இனத்தவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய குழுவொன்றினை முன்னிறுத்தியே ஆங்கிலேயர்கள் நமது நாட்டை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தினார்கள். ஒவ்வொரு இனத்தவருக்குமான உரிமைகள் கிடைக்கப் பெறுவதை நம்மை அடிமைப்படுத்தியவர்கள் உறுதிப்படுத்திய பின்னரே நாட்டுக்கு சுதந்திரம் வழங்கினார்கள்.

இந்த இடத்தில் முஸ்லிம் தலைமைகள் பரந்த மனப்பான்மையுடன் செயற்பட்டமை நாட்டுக்கான சுதந்திரத்தை விரைவுபடுத்தியது. சுதந்திரத்துக்கான பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம் தரப்பில் பங்குபற்றிய துவான் புர்ஹானுத்தீன் ஜாயா நாட்டின் சக இனங்கள் மீது நம்பிக்கை வைத்தார். அவரது நம்பிக்கையை வீணாக்காமல் இலங்கையின் பெரும்பான்மையினம் முஸ்லிம்களது உரிமைகளை வழங்குவதில் தொடர்ந்தும் கரிசனை காட்டி வந்தது.

முஸ்லிம் தனியாள் சட்டம், காதிநீதி மன்றங்கள், முஸ்லிம் பாடசாலைகள், முஸ்லிம் ஆசிரியர்கள், முஸ்லிம் சீருடை, அரபு மத்ரஸாக்கள், முஸ்லிம்களின் விடுமுறைதினங்கள், வானொலி முஸ்லிம் சேவை என பல விடயங்களை முஸ்லிம்கள் இந்தச் சுதந்திரத்தின் வரப்பிரசாதமாகப் பெற்றார்கள். இவற்றைப் பெற்றுத் தருவதில் எமது தலைவர்களும் சாணக்கியமாகச் செயற்பட்டார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

சுதந்திரம் கிடைத்து 70 வருடங்களாகும் போது இவை எல்லாமே கேள்விக்குறிகளாக மாறியுள்ளன. இவை ஒவ்வொன்றையும் பாதுகாத்துக் கொள்வதற்கு பெரும் போராட்டம் நடத்த வேண்டிய நிலையில் முஸ்லிம் சமூகம் இருக்கிறது. சில வேளைகளில் ஆங்கிலேயக் காலனித்துவத்தில் நடந்தது போன்ற இழப்புக்களையும் சந்திக்க வேண்டியிருக்கிறது. காணி, நிலங்களின் உரிமைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டு இருப்புக்கான உரிமையே ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

சுதந்திரமடைந்த 70 வருடங்களுக்குப் பின்னர் திரும்பிப் பார்க்கும் பொழுது துரதிர்ஷ்டவசமாக அன்றிருந்த பெருந்தலைவர்களை சமூகத்தில் இப்போது காணக் கிடைப்பதில்லை. சுதந்திரத்தின் போது இலங்கை முஸ்லிம்கள் பெற்ற கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும். முதலில் அதனைப் பெற்றுத் தரக் கூடிய தலைமைகளை முஸ்லிம் சமூகம் கண்டெடுக்க வேண்டும். இந்த இரண்டும் நடைபெறாமல் இலங்கை முஸ்லிம்களின் சுதந்திரக் கொண்டாட்டங்கள் அர்த்தப்படப் போவதில்லை.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

Press Complaints Commission of Sri Lanka

# முஸ்லிம்கள் மீண்டும் ஏமாளிகளாகி விடக் கூடாது

• முஹம்மத் பாதுஷா

முஸ்லிம் அரசியலைப் பொறுத்தமட்டில் ஏமாற்றுதல் என்பது ஒரு வகை வியூகமாகவே கடைப்பிடிக்கப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. ''முஸ்லிம் மக்கள் எதைச் சொன்னாலும் நம்பி வாக்களிப்பார்கள்; பின்னர் இரண்டு மாதங்களில் மறந்து விடுவார்கள்'' என்ற அசட்டு நம்பிக்கை, முஸ்லிம் அரசியல்வாதிகளிடையே இருக்கின்றமையே இதற்குக் காரணம் எனலாம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் களம் சூடுபிடித்திருக்கின்ற நிலையில், பிரசார மேடைகளில் வழங்கப்படுகின்ற வாக்குறுதிகளும் பரப்புரைகளும் மக்களை, இன்னுமொரு தடவை ஏமாற்றலாம் என்ற மனக்கணக்கில் மேற்கொள்ளப்படுகின்றனவா என்று சிந்திக்க வேண்டிய கடப்பாடு, புத்தியுள்ள முஸ்லிம் மக்களுக்கு இருக்கின்றது.

இம்முறையும் தேர்தல் பிரசார கலாசாரத்தில், பெரிய மாற்றங்களைக் காண முடியாதிருக்கின்றது. மாற்றுக் கட்சிக்காரர்களை வசைபாடுவதும், ஆட்சியைத் தூசிப்பதும் அல்லது புகழ்வதும், மக்கள் மன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் மழுப்புவதுமாக இப்போதைய தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நிரம்பியிருக்கின்றன.

மிக முக்கியமாக, அபிவிருத்தியில் இது காலவரைக்கும் பெரிதாக எதையும் சாதிக்காதவர்கள், இமாலய அபிவிருத்தி பற்றிப் பேசுகின்றனர். முஸ்லிம்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதற்குக் கூட, நல்ல நேரம் பார்த்தவர்கள், மக்களிடம் வாக்குகளைப் பெறுவதற்காக, உரிமைப் போராட்ட வீரர்கள் போல, குரல் உயர்த்திப் பேசுவதையும் காண முடிகின்றது.

தங்களது இயலுமைக்கு அப்பாற்பட்ட திட்டங்களை அரசியல்வாதிகள் கூறும்போது, 'கூரை ஏறிக் கோழிபிடிக்க முடியாதவர்கள், வானம் ஏறி வைகுண்டம் போகின்ற' கதையைக் கேட்பது போல இருக்கின்றது. இச்சந்தர்ப்பங்களில், ஆழமாகச் சிந்திப்போருக்கு சிரிப்பை அடக்க முடிவதில்லை. காரியத்தை முடிக்கும் வரைக்குமான ஒரு வித நடிப்பாகவே, இந்த அரசியலை முஸ்லிம் அரசியல் நோக்குநர்கள் கருதுகின்றனர். எனவே, முஸ்லிம் வாக்காளர்கள், ஒவ்வோர் அரசியல் தலைமையினதும் அரசியல்வாதியினதும் கடந்த கால வழித்தடங்களை மீட்டுப் பார்த்தே, யாருக்கு வாக்களிப்பது என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டியுள்ளது.

முஸ்லிம்களுக்கு என்று தனியான அரசியல் இயக்கம் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபினால் உருவாக்கப்படும் வரைக்கும், இலங்கை முஸ்லிம்களுக்கு, குறிப்பாக வடக்கு, கிழக்கில் வாழ்வோருக்கு இருந்த எதிர்பார்ப்புகள், முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்ட பின்னர், வேறுவடிவம் எடுத்தன என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குக் காரணம் அஷ்ரப், எதிர்பார்ப்புகளை விஞ்சிய ஒரு தலைவராக இருந்தார். அப்துல் கலாமுக்கு முன்னரே, இலங்கை முஸ்லிம்களுக்கு, 'பெரிதாகக் கனவு காணுங்கள்' என்று சொன்னவரும் அவரே.

ஆரம்பத்தில், முஸ்லிம்களுக்கு இருந்த பிரதான பிரச்சினைகள் வாழ்வுரிமை அல்லது இருப்பு பற்றியது என்று கூறலாம். யுத்த சூழல், விடுதலைப்புலிகள், ஏனைய ஆயுதக் குழுக்கள், இந்திய அமைதிப்படை, அரச படைகள் என்பவற்றுக்கு இடையில் உயிரையும் இருப்பையும் தக்கவைத்துக் கொள்ளும் எதிர்பார்ப்புகளே மிகப் பிரதானமாக இருந்தன.

ஆனால், அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியை உருவாக்கி, உரிமை அரசியலையும் அபிவிருத்தி அரசியலையும் சமாந்தரமாக முன்னெடுத்தார். இது வடக்கு, கிழக்கை மையமாகக் கொண்ட முஸ்லிம் அரசியலை உச்சத்துக்குக் கொண்டு சென்றது என்றுதான் சொல்ல வேண்டும். எனவே, அவரது இறப்புக்குப் பின்னரான முஸ்லிம் காங்கிரஸ் தலைமையோ அல்லது வேறுபல கட்சிகளை நிறுவிய முஸ்லிம் தலைமைகளோ அரசியல்வாதிகளோ அத்தகைய அரசியலையே முன்னெடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு முஸ்லிம்களுக்கு இருந்தது.

[illegible] செயற்பாடுகளுக்கு ஒரு சமன்பாடு கண்டால், அவை எல்லாம் ஏமாற்றங்களையே தந்திருக்கின்றன என்பது வெள்ளிடைமலை. அபிவிருத்தி அரசியலைச் செய்த முஸ்லிம் அரசியல்வாதிகள் உரிமை அரசியலைச் செய்யவில்லை. உரிமை அரசியலைச் செய்ய முனைந்தவர்களால், அதை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியவில்லை.

அது ஒருபுறமிருக்க, உரிமை அரசியலையும் அபிவிருத்தி அரசியலையும் செய்யாமல், இன்னும் சில அரசியல்வாதிகள் 'வாயால் வடை சுட்டுக் கொண்டு' மிகவும் தந்திரோபாயமாகக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இதனால், முஸ்லிம்களின் பல பிரச்சினைகள், அதாவது தேர்தல் பிரசாரங்களின்போது, மக்கள் மன்றத்தில் அரசியல்வாதிகளால் வாக்குறுதி அளிக்கப்பட்ட விடயங்கள், இன்னும் செய்து முடிக்கப்படாமல் கிடப்பில் கிடக்கின்றன. காணிப் பிரச்சினைகள் இதில் முக்கியமானவை. அம்பாறை மாவட்டத்தில் வட்டமடு, கிரான், கோமாரி, றத்தல், அஷ்ரப் நகர் தொடங்கி திருமலை மாவட்ட காணிப் பிரச்சினைகள், இன்னும் தீர்க்கப்படவில்லை. வடக்கில் இருந்து வெளியேறிய மக்களின் மீள்குடியேற்றமும் அவர்கள் இழந்த காணிகளை மீளப் பெறுதலும் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.



ஒலுவில் துறைமுகம், சரியாக அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பதுடன், முறையான சாத்திய வள ஆய்வின்றி, துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள கடலரிப்புக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவில்லை. அம்பாறை மாவட்ட முஸ்லிம்களால் முன்வைக்கப்பட்டு வரும், புதிய நிர்வாக மாவட்டக் கோரிக்கையை, காணி உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களையும் உள்வாங்கியதாக நிறைவேற்றுவதற்கு எந்த முஸ்லிம் தலைமைக்கும் பலம் இல்லாது போயிருக்கின்றது.

நிலைமாறு கால நீதி பற்றியும், மனித உரிமை மீறல்கள் பற்றியும் பேசப்படுகின்ற ஒரு சூழலில், யுத்த காலத்தில் இருதலைக் கொள்ளியாகச் சிக்கித் தவித்த முஸ்லிம்கள் இழந்த உரிமைகள், இனவாதத்தால் ஏற்பட்ட இழப்புகள் பற்றி ஐக்கிய நாடுகள் சபைக்கோ, ஜெனீவா மனித உரிமைப் பேரவைக்கோ முறையாக அறிக்கையிடுவதற்கு எந்த முஸ்லிம் கட்சிக்கும் துணிச்சலில்லை. மாறாக, யாராவது அறிக்கையிட முனைந்தால் அதை 'போட்டுக் கொடுக்கின்ற' பாங்கிலான செயற்பாடுகளையே காண முடிகின்றது.

அளுத்கமையில், பேருவளையில், கிந்தோட்டையில் நிகழ்த்தப்பட்ட இனவாத சம்ஹாரத்துக்காவது இழப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு வக்கில்லை. இனவாதத்துக்கு ஆதரவளித்தமைக்காகவே மஹிந்த ஆட்சியை மாற்றியதாக மார்பு தட்டும் முஸ்லிம் தலைமைகளாலோ, எம்.பிக்களாலோ இந்த இனவாத ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நட்டஈடு கோரியும் நீதி வேண்டியும் ஒருநாள் கூட, நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கவோ எல்லோரும் ஒருமித்துக் குரல் கொடுக்கவோ முடியவில்லை. இத்தகைய சூழ்நிலையிலேயே, இன்று பென்னம் பெரிய வெற்று வாக்குறுதிகளோடும் பொய் மூட்டைகளோடும் முஸ்லிம் அரசியல்வாதிகள் தேர்தல் மேடை ஏறியிருக்கின்றார்கள்.

உண்மையாகவே, மக்களுக்குச் சொன்னதை செய்யும் அரசியல்வாதிகள் என்றால், மக்கள் அவர்களுக்குத் தாமாகவே வாக்களிப்பார்கள். அவ்வாறு செய்து காட்டிவிட்டு, வாக்குக் கேட்டு வந்திருந்தால், இத்தனை வார்த்தை ஜாலங்களால், மயக்கும் மந்திரங்களை ஓதத்தேவையும் இல்லை. நடக்க முடியாதவற்றை வாக்குறுதியாக வழங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்க மாட்டாது. இந்தப் போக்கில், அண்மைக் காலத்தில் ஈரூர்கள் மிகப் பகிரங்கமாகவே ஏமாற்றப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று சாய்ந்தமருது, மற்றையது அட்டாளைச்சேனை.

''சாய்ந்தமருதுக்குத் தனியான உள்ளூராட்சி சபை தருவோம்'' என்று கூறிய இரண்டு பிரதான முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும், அந்த மக்களை ஏமாற்றியிருக்கின்றார்கள். இரண்டாகப் பிரிப்பதா, நான்காகப் பிரிப்பதா என்று ஆழமாகச் சிந்தித்து முடிவெடுக்காமல், கொடுத்த தேர்தல் கால வாக்குறுதி, எந்தளவுக்குப் பாரதூரமானது என்பதை இன்று, கல்முனை - சாய்ந்தமருது விவகாரத்தில் காணலாம். நடைமுறைச் சாத்தியங்களுக்கு அப்பால் நின்று வழங்கப்பட்ட, பக்குவமற்ற வாக்குறுதிகள், இரண்டறக் கலந்திருந்த ஊர்களுக்கு இடையில், இப்போது ஒருவகையான பகைமையுணர்வுக்கு எண்ணெய் ஊற்றியிருப்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால், வெற்று வாக்குறுதிகளால்தான் இது நேர்ந்தது என்பதையும் மறந்து, முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்தச் சூழ்நிலையை வைத்தும், அரசியல் செய்து கொண்டிருப்ப தைக் காண முடிகின்றது. அட்டாளைச்சேனைக்குத் தேசியப் பட்டியல் வழங்குவதாக, முஸ்லிம் காங்கிரஸினால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு வயது பல வருடங்கள்.

கிட்டத்தட்ட, 'சீச்சி இந்தப் பழம் புளிக்கும்' என்ற நிலைக்கு, அவ்வூர் மக்கள் வந்துவிட்ட நிலையில், தற்காலிகமாக வழங்கப்பட்ட தேசியப் பட்டியல் எம்.பி பதவியை, எம்.எச்.எம். சல்மான், 27 மாதங்களுக்குப் பிறகு இராஜினாமாச் செய்திருக்கின்றார். எனவே, மீண்டும் அப்பிரதேச மக்களிடையே எதிர்பார்ப்பு துளிர்விட்டது. இந்நிலையில் அவ்வூருக்கு தேசியப் பட்டியல் எம்.பி பதவி வழங்குவதற்கான நடவடிக்கையை தலைவர் ஹக்கீம் எடுத்திருக்கின்றார்.

முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமல்ல, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் அம்பாறை மாவட்டத்துக்கு வழங்குவதற்கு உடன்பட்டிருந்த தேசியப்பட்டியல் எம்.பி பதவியை இன்னும் வழங்கவில்லை. இது தேர்தல் மேடைகளில் பரவலாக வழங்கப்பட்ட வாக்குறுதியல்ல என்பதுடன், இதைக் கோருவோரிடையே பெரிய போட்டிகளும் இல்லை என்ற போதிலும், இம்மாவட்டத்தில் வாக்களித்த 33 ஆயிரம் மக்களுக்குக் கைமாறு செய்வதற்கான காலம் இனிமேலும் இழுத்தடிக்கப்படுமாக இருந்தால் அதுவும் ஏமாற்றும் உத்தியாகவே அமையும்.

இவ்வாறு கடந்த பல வருடங்களாக முஸ்லிம் கட்சிகளும் அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் முதலமைச்சரும் மாகாண அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களும் முஸ்லிம் மக்களைத் தங்கள் தங்கள் பதவியின் 'பருமனுக்கு' ஏற்றவாறு நம்பவைத்து ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையிலேயே, இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் புதுவிதமான வாக்குறுதியளிக்கும் தந்திரங்களோடு களத்துக்கு வந்திருப்பதைக் காண முடிகின்றது. முஸ்லிம் பிரதேசங்களின் அபிவிருத்தியில் ஒன்றும் சாதிக்கவில்லை என்று விமர்சிக்கப்படுகின்ற கட்சிகளும் அரசியல்வாதிகளும் அபிவிருத்தி பற்றிய முன்மொழிவுகளோடு மேடைகளில் தோன்றுகின்றனர்.

இலட்சக் கணக்கான ரூபாய் பெறுமதியில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளப் போவதாக இதற்கு முன்னர் வாக்குறுதி வழங்கி, அதைக் காற்றில் பறக்க விட்ட அரசியல்வாதிகள், இம்முறை மில்லியன் கணக்கில் அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டு வந்திருப்பதாக மக்களுக்குச் சொல்கின்றனர். உரிமை பற்றி இதுகால வரை பேசவில்லை என்று கருதப்பட்ட அரசியல்வாதிகள், முஸ்லிம் உரிமை அரசியலின் காப்பாளர்கள் போல, பிரசாரம் செய்கின்றனர்.

பெரிய கட்சிகள் தொடங்கி, சிறு கட்சிகள் வரை பல கட்சிகளும் தேர்தல் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நேர்மையைக் கேள்விக்குள்ளாக்கும் அறிக்கைப் போர்

## அந்த 34 அறிக்கைகளுக்கு நடந்ததென்ன?



றவூப் ஸெய்ன்





மத்திய வங்கி பிணைமுறி ஊழல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் விவாதிப்பதற்கு பெப்ரவரி 08 இல் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க சபாநாயகரைப் பணித்துள்ளார். அதே போன்று இதே தினத்தில் பாரியளவிலான ஊழல் மோசடிகள் மற்றும் அரச சொத்துக்களை தவறாகக் கையாண்டமை தொடர்பான விசாரணை அறிக்கையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என பிரதமர் கூறியுள்ளார்.

கடந்த வாரம் இவ்விரு அறிக்கைகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன. அவை தொடர்பான மேலதிக நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்ரிபால நாட்டு மக்களுக்குத் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 10 இல் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை இப்பாராளுமன்ற விவாதம் நிச்சயம் பாதிக்கும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேஷப்பிரிய கருத்து வெளியிட்டுள்ள அதேவேளை, இத்தகைய விவாதம் உணர்ச்சிகரமானது என்பதனால் அது தேர்தல் சட்டத்திற்கு முரணானது என தேர்தல் ஆணைக்குழுவின் மற்றொரு உறுப்பினர் பேராசிரியர் ரத்னஜீவன் ஹூலே கருத்து வெளியிட்டுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் ஐ.தே.க. தனித்து ஆட்சியமைக்கும் என்று பிரதமரும் ஐக்கிய மக்கள் முன்னணியின் 96 உறுப்பினர்களும் தன்னோடு இணைந்தால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சியமைக்கும் என்று ஜனாதிபதியும் தேர்தல் பிரச்சாரங்களில் அனல் பறக்கப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இதற்கிடையில் ராஜித போன்றவர்கள் 2020 வரை தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் நீடிக்கும் என்று ஊடகங்களிடம் தெரிவித்து வருகின்றனர்.

இப்படி எதிரும் புதிருமான வாதங்கள் அரசியல் களத்தில் சூடு பறக்க விவாதிக்கப்படுகின்றது. ஜனாதிபதி மைத்ரி, மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விசாரணை அறிக்கையை பிரச்சார மேடைகளில் முன்னிறுத்தி வருகிறார். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் எனவும், பதவி-அந்தஸ்து பாராமல் யாரும் தனது வாள் வீச்சிலிருந்து தப்பிக்க முடியாது என்றும் சூளுரைத்து வருகிறார்.

2015 ஜனவரிக்கு முன்பாக இந்நாட்டில் காணப்பட்ட அரசியல் சூழமைவை முற்றிலும் மறந்த நிலையில், ஏதோ சுதந்திரக் கட்சியின் தனிப் பெரும் தலைவராக தேர்தலில் குதித்து ஜனாதிபதியானார் என்பது போலவே அவரது வார்த்தைகளும் நடத்தைகளும் மாறி வருகின்றன. அவரிடம் கையளிக்கப்பட்ட இரண்டு வகையான அறிக்கைகளில் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிரான பிணைமுறி விசாரணை அறிக்கையையே அவர் பிரதானப்படுத்துகிறார்.

சுதந்திரக் கட்சிக்கு வாக்குகளைக் கொள்ளையடிக்கும் அவசரத்தில் ஏதோ ஐ.தே.கட்சிக் காரர்கள் மட்டுமே நாட்டின் சொத்துக்களை திருடியவர்கள் போல் மைத்ரியின் பிரச்சாரம் வீறு கொண்டெழுகிறது. பாரியளவிலான ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான 34 அறிக்கைகள் பிணைமுறி விசாரணை அறிக்கையுடன் சேர்த்தே ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், அவை குறித்து பிரச்சார மேடைகளில் மைத்ரி காத்து வரும் மௌனத்தின் அர்த்தம் என்ன?

பதவிக்கு வர முன்னர் அவர் வழங்கிய வாக்குறுதிகளின்படி பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கும் எந்த நடவடிக்கையையும் அவரது அரசாங்கம் இதுவரை மேற்கொள்ளவில்லை. மஹிந்தவின் இருள் சூழ்ந்த தசாப்தத்தில் நாட்டைச் சுருட்டி பக்கெட்டில் அடக்கிய மிகப் பெரிய திருடர்களெல்லாம் இருந்தார்கள் என்று 2014 டிசம்பர் தேர்தல் பிரச்சாரத்தின்போது அவர் கூறி வந்தார்.

இன்று பிணைமுறி ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் மாத்திரமே அவர் வாய் கிழியப் பேசுவது அரசியல் சந்தர்ப்பவாதமாகும். நாட்டு நலனை விட சுதந்திரக் கட்சியின் மீது அவர் கொண்டுள்ள குருட்டு விசுவாசத்தின் வெளிப்பாடே இது.

ஒப்படைக்கப்பட்டுள்ள 34 அறிக்கைகளில் முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த மற்றும் அவரோடிருந்த அரசியல்வாதிகள் தொடர்புறும் பில்லியன் ரூபாய் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மஹிந்தவின் குடியுரிமை பறிக்கப்பட வேண்டும் என்றும் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

2015 இல் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களின் போது மஹிந்தவும் மைத்ரியும் இரு பிரதான அம்சங்களை தமது தேர்தல் பிரச்சாரத்தின்போது முக்கியப்படுத்தினர். 2009 இல் புலிகளை தோற்கடித்தமை தனது பெரும் சாதனை என்று மஹிந்த பரப்புரை செய்தார். மஹிந்த ஆட்சியின் ஊழல் மோசடிகளை புலன்விசாரணை செய்து தண்டிப்பேன் என்று மைத்ரி வாக்குறுதியளித்தார். இருவரும் சிங்கள மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிக்கும் உள்நோக்கத்துடன்தான் இத்தகைய பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

இப்போது ஏட்டிக்குப் போட்டியாக இரண்டு ஆணைக்குழு அறிக்கைகள் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிறுத்தி அனல் பறக்க விவாதிக்கப்படுகின்றன.

> ஜனாதிபதியின் கருத்துக்கள் இன்று அவரை ஒரு கொள்கையில்லாம மனிதர் என்ற நிலைமைக்குக் கொண்டு வந்துள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தான் ஏன் வெளியேறி சுந்திரக் கட்சியினை எதிர்த்துப் போட்டியிட்டார். அப்போதைய சுதந்திரக் கட்சியின் ஆட்சியாளர்கள் ஊழல்வாதிகளாகவும் கொள்கை, கொலை என பாரிய குற்றங்களில் ஈடுபட்ட நிலையிலும் நாடு நாசமாகுவதைத் தடுக்கவே தான் களமிறங்குவதாகக் கூறினார்.
>
> - விஜித ஹேரத் -

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விசாரணை அறிக்கையை ஐ.தே.க.வுக்கு எதிராக மைத்ரி பிரயோகித்து வருகிறார். இன்னொரு புறம் பாரிய உழல் மற்றும் மோசடி தொடர்பான அறிக்கையை பிரதமர் ரணில் சுதந்திரக் கட்சி மற்றும் மஹிந்தவின் புதிய கட்சிக்கு எதிராகப் பயன்படுத்தி வருகிறார்.

இரண்டு கட்சிகளும் வாக்குகளை இலக்கு வைத்தே இத்தகைய பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனவே ஒழிய, குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொண்டு வருவதோ, கொள்ளையிடப்பட்ட பில்லியன்களை மீட்பதோ அவர்களின் நோக்கம் அல்ல. இந்த உண்மை பெப்ரவரி 10 இற்குப் பின்னர் மக்களுக்குத் தெளிவாகும் என்பது நிச்சயம்.

பாராளுமன்ற விவாதத்தைக் கூட ஒரு பிரச்சாரக் களமாகவே பயன்படுத்திக் கொள்ள இரு தலைவர்களும் முயற்சிக்கிறார்கள். சமீபத்திய தேர்தல் பிரச்சார மேடையொன்றில் பேசிய பிரதமர், பிணைமுறி ஊழல் 10 பில்லியன் என்றால், முன்னைய ஆட்சியாளர்களின் ஊழல் மோசடி 1000 பில்லியன் என்பதையும் நாம் வெளிப்படுத்துவோம். பாராளுமன்றில் விவாதிப்போம். பாராளுமன்றத்தைக் கூட்டுங்கள் என்கிறார்.

உண்மையில் இலங்கையின் பிரதான ஊடகங்களுக்கு சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மெல்வதற்கு ஏதேனும் தீனி கிடைத்துக் கொண்டே இருக்கிறது. அப்படியில்லையாயின், தீனியை அவை உருவாக்கிக் கொள்கின்றன. இன்று ஊடகங்கள் அனைத்திலும் பிணைமுறி ஊழல் விசாரணை அறிக்கை தொடர்பாகவே பரபரப்பாகப் பேசப்படுகின்றது. இதைப் பேசக்கூடாது என்றோ, விவாதிக்கக் கூடாது என்றோ யாரும் ஆட்சேபிக்க வேண்டியதில்லை. ஆனால், இது நல்லாட்சி உருவாக்கப்பட்டதற்குப் பின்னர் நிகழ்ந்த ஊழல் மோசடி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நல்லாட்சி ஏன் உருவாக்கப்பட்டது என்ற கேள்வியிலிருந்து கடந்த ஆட்சியின் ஊழல் மோசடி குறித்த விசாரணை அறிக்கைகளும் பரபரப்பாக விவாதிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடே நியாயமானது. இவ்விவகாரங்களில் ஜனாதிபதியின் அணுகுமுறை மிகுந்த பக்கச் சார்பாக உள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட முன்னரே முன்னைய ஆட்சியாளர்களை தன்னோடு இணைத்துக் கொள்வதற்கு ஜனாதிபதி எடுத்த பிரயத்தனங்களே அவர் நாட்டுக்குச் செய்த பெரிய துரோகமாகும் என மக்கள் விடுதலை முன்னணி சாடுவதில் நியாயம் இருக்கிறது.

"குற்றவாளிகளை இணைத்துக் கொண்டு மீண்டும் ஊழல் அரசாங்கத்தை உருவாக்கவே ஜனாதிபதி முயற்சிக்கின்றார். ஊழல்வாதிகளை அரசாங்கத்தில் இணையுமாறு கோருவது மாற்றத்தை ஏற்படுத்திய மக்களுக்கு இழைக்கும் துரோகம்" என்று அக்கட்சி கூறுகின்றது. ஜனாதிபதியினால் குற்றவாளிகள் தண்டிக்கப்படாது இன்றுவரை அவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் மீண்டும் ஒன்றிணைந்தால் தான் சுதந்திரக் கட்சியின் தனியரசாங்கத்தை உருவாக்குவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில், மக்கள் விடுதலை முன்னணியில் பிரச்சார செயலாளர் விஜித ஹேரத் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கருத்துக்கள் இன்று அவரை ஒரு கொள்கையில்லாத மனிதர் என்ற நிலைமைக்குக் கொண்டு வந்துள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தான் ஏன் வெளியேறி சுந்திரக் கட்சியினை எதிர்த்துப் போட்டியிட்டார். அப்போதைய சுதந்திரக் கட்சியின் ஆட்சியாளர்கள் ஊழல்வாதிகளாகவும் கொள்ளை, கொலை என பாரிய குற்றங்களில் ஈடுபட்ட நிலையிலும் நாடு நாசமாகுவதைத் தடுக்கவே தான் களமிறங்குவதாகக் கூறினார்.

ஆனால், இன்று சுதந்திரக் கட்சியாக அனைவரும் ஒன்றிணைந்தால் மீண்டும் சுதந்திரக் கட்சியின் தனியரசாங்கத்தை உருவாக்குவதாகக் கூறுகிறார். அவ்வாறானால், அதில் இன்று பொதுஜன முன்னணியில் உள்ள மஹிந்தானந்த அளுத்கமகே, பசில், நாமல், ஜோன்ஸ்டன் பெர்னான்டோ உள்ளிட்ட கடந்த காலங்களில் பாரிய ஊழல்வாதிகள் என முத்திரை குத்தப்பட்ட நபர்கள் அனைவரையும் அழைக்கின்றார் என்பதே அதன் அர்த்தமாகும்.

ஒரு புறம் இந்நாட்டில் ஊழல்வாதிகளுக்கு தகுந்த தண்டனை உண்டு எனக் கூறுவதும், தனது வாள் எவரையும் பாராது ஊழல் வாதிகளை வெட்டும் எனவும் தனது ஆட்சியில் ஊழலை முழுமையாக ஒழிப்பேன் எனவும் கூறிக் கொண்டு, மறுபுறம் அதே ஊழல்வாதிகளையும் கள்வர்களையும் தனது வீட்டுக்கு வரவழைத்து தனி அரசாங்கம் உருவாக்க இணையுமாறு அழைப்பு விடுப்பது எந்த விதத்தில் நேர்மையானது. பாரிய குற்றவாளிகள் அனைவரும் இன்றுவரையில் தண்டிக்கப்படாது சுதந்திரமாக உள்ளர். அதற்கு ஜனாதிபதியே காரணம். அவர் மீண்டும் கூட்டணி அமைக்கவே கள்வர்களைப் பாதுகாத்து வருகின்றார். குற்றவாளிகள் எனத் தெரிந்தும் அவர்களை பாதுகாப்பதன் பின்னணி இதுதான் என்றும் ஜனாதிபதியை கடுமையாகச் சாடியுள்ளார் விஜித.

மைத்ரியின் தேர்தல் கால அதிரடி நகர்வுகள் அவரது அரசியல் நேர்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது. லஞ்ச ஊழல் மற்றும் பொதுச் சொத்து துஷ்பிரயோகம் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பதவிக் காலம் ஒக்டோபரில் முடிவடைந்தபோதும், அதன் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கவில்ல. ஆனால், பிணைமுறி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக் காலம் மூன்று முறை நீடிக்கப்பட்டது. இறுதி அறிக்கை வரை தொடர்ந்தது.

மஹிந்த, கோத்தா, பசில், நாமல் ஆகிய நான்கு பக்ஷாக்களும் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் முன் பலமுறை விசாரிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மீதான குற்றவிசாரணை முழுமையாக நிறைவுபெற்று அறிக்கையும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அங்கு அது கிடப்பில் போடப்பட்டது. இன்று தமக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஆதார மற்றவை என்று முன்னாள் ஜனாதிபதி யும் அவரது புத்திரரும் கூறும் அளவுக்கு அவர்கள் நாட்டு மக்கள் முன் தூய்மைப் படுத்தப்பட்டுள்ளனர்.

தன்னிடம் வழங்கப்பட்டுள்ள 34 அறிக்கைகளிலும் என்ன விடயம் கூறப்பட்டுள்ளது என்பது குறித்து ஜனாதிபதி இதுவரை ஒரு வார்த்தை கூட வெளிப்படுத்தவில்லை. ஆனால் பிணைமுறி அறிக்கை குறித்தே அவர் மிகுந்த உணர்ச்சிக் கொந்தளிப்புடன் பேசி வருகின்றார். 34 அறிக்கையோடு சம்பந்தப்பட்டவர்கள் ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்கள். அவருக்குத் தேவையானவர்களும் கூட. சுதந்திரக் கட்சி தனியாட்சி அமைப்பதற்கு அவர்கள் தேவை என்பதால் அந்த அறிக்கை குறித்து அவர் மௌனம் காக்கிறார். இது 2015 இல் அவர் வழங்கிய வாக்குறுதிகளுக்கு செய்யும் துரோகமாகும்.

ஊழலை ஒழிக்கவும் குற்றவாளிகளைத் தண்டிக்கவும் இதுவரை உருப்படியான எந்த நடவடிக்கையையும் ஜனாதிபதி மேற்கொள்ளவில்லை என்பதோடு, அவரால் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களோடு ரகசிய உறவுகளையும் ஒப்பந்தங்களையும் அவர் பேணி வருகின்றார்.

இலங்கை வரலாற்றில் அரசியல் நேர்மையுள்ள தலைவர் ஒருவர் இதற்குப் பின்னர்தான் பிறந்து வர வேண்டும் என்ற உண்மையை ஜனாதிபதி மைத்ரியும் மீள மீள நிறுவிக் கொண்டே இருக்கிறார். மக்கள் இதைப் புரிய வைப்பதற்கான தருணம் எதிரே காத்திருக்கின்றது. அதை அவர்கள் பொருத்தமாகப் பயன்படுத்துவார்களா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜினதாச நியதபால:

## ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றில் ஒரு கண்ணீர்த்துளி

1963ஆம் ஆண்டு காலப்பகுதியில் களுத்துறையில் இரண்டு நாட்களாக நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சி மாநாட்டிலேயே ஜினதாச நியதபாலவினை நான் முதலில் பார்த்தேன். கட்சியின் இளம் தலைவர் மற்றும் எனது தந்தையின் நெருங்கிய தோழர் என்ற வகையில் நான் அவரோடு அறிமுகமாகினேன். சிறிய மாணவனாக எனது தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு அம்மாநாட்டில் கலந்துகொண்ட நினைவுகள் என் மனதில் ஆழப்பதிந்துள்ளன.

ஜினதாச நியதபாலவுடன் 1970களிலேயே நான் நேரடியாக பழக ஆரம்பித்தேன். அப்போது நான் கொழும்பு ஆனந்தா கல்லூரி மாணவனாக இருந்தேன். 1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பெற்ற தோல்வி ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாரிய பின்னடைவைத் தந்தது. இத்தேர்தல் தோல்வி ஐக்கிய தேசியக் கட்சி செயற்பாட்டாளர்களை நிலைகுழைய வைத்தது. எதிர்பாராத தோல்வி காரணமாக கொள்ளுபிடியவில் அமைந்திருந்த சிறிகொத்த அலுவலகம் பாழடைந்து காணப்பட்டது.

இக்காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் அகில இலங்கை வாலிபர் முன்னணியின் பிரதான செயலாளராக ஜினதாச நியதபால செயற்பட்டு வந்தார். 1960 தசாப்தம் மற்றும் 1970 தசாப்தங்களில் ஐக்கிய தேசிய தேசியக் கட்சி வீழ்ச்சியடைந்திருந்த காலங்களில் கட்சியை கட்டியெழுப்புவதற்கு அவர் மேற்கொண்ட சேவைகள் ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றின் ஒரு பகுதியாகும் எனக் கூறினால் அது பிழையாகாது.

கட்சி தோல்வியைச் சந்தித்திருந்த அக்காலப் பகுதியில் கொள்ளுபிடியவில் அமைந்திருந்த பழைய சிறிகொத்த அலுவலகத்திற்கு நாளாந்தம் வருகை தரும் ஜினதாச நியதபால, கட்சியின் இளம் செயற்பாட்டாளர்களோடு இணைந்து கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்கு கட்சியின் தலைவர் டட்லி சேனாநாயக்கவுக்கு வழங்கிய ஊக்கங்களும் ஒத்துழைப்புக்களும் ஏராளமானவையாகும். நாட்டின் எப்பாகத்திற்கு சென்றாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் அவரை சூழ்ந்துகொண்டு பாசத்துடன் கட்டியணைப்பார்கள். கட்சிக்காக அவர் செய்த தியாகங்களுக்காக வேண்டியே அந்தப் பாசமும் அரவணைப்பும் அவருக்கு கிடைத்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாணவர் பிரிவு ஜினதாச நியதபாலவுக்கூடாகவே ஆரம்பமானது. 1970 தேர்தல் தோல்வியை தொடர்ந்து சில மாதங்களின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் மாணவர் பிரிவொன்றை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்த தகவல்களை வழங்குவதற்கு ஆனந்தா கல்லூரி மாணவர்களுடன் அவரைச் சந்திக்கச் சென்ற முதல் பயணம் என் நினைவுக்கு வருகிறது. சிதேன்திர சேனாரத்ன, பாலித பெல்பொல, ஷர்மா சேனாநாயக்க, நிமல் சேனாரத்ன ஆகிய பிரதிநிதிகளுடன் நான் அவரைச் சந்திக்க சென்றேன். இது தொடர்பில் தீர்மானமொன்றை எடுப்பதற்கு கட்சித் தலைவரை சந்திக்க வேண்டும் என கூறிய அவர், மாணவர் பிரிவு பிரதிநிதிகளுக்கும் கட்சித் தலைவருக்கும் இடையிலான சந்திப்பொன்றையும் ஏற்பாடு செய்தார். ஜினதாச நியதபாலவின் முயற்சியினாலேயே ஐக்கிய சோசலிஸ மாணவர் இயக்கம் எனும் பெயரில் ஐக்கிய தேசியக் கட்சியின் மிகப்பெரும் மாணவர் அமைப்பு உருவாக்கப்பட்டது.

1971 ஜேவிபி புரட்சியைத் தொடர்ந்து ஐக்கிய சோசலிஸ மாணவர் இயக்கத்தினால் கொழும்பு ஹைட் பார்க்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த மாணவர் சக்தியின் பின்னால் மிகப்பெரும் தூணாக நின்றவர் ஜினதாச நியதபால ஆவார். 1971 புரட்சிக் காலப்பகுதியில் புரட்சியோடு தொடர்புபட்டார் எனக்கூறி ஜினதாச நியதபால கைதுசெய்யப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியை மீளக் கட்டியெழுப்பும் முயற்சியின் பின்னால் உள்ள மிக முக்கிய நபராக அப்போதைய அரசாங்கத்தினால் இவர் அடையாளம் காணப்பட்டிருந்தார். அதனாலேயே அவர் புரட்சியை காரணம் காட்டி கைதுசெய்யப்பட்டார்.

ஜினதாச நியதபால சிறையிலிருந்து விடுதலையாகி வந்த சந்தர்ப்பத்தில் டட்லி சேனாநாயக்கவின் தலைமையில் பழைய சிறிகொத்தா அலுவலகத்தில் நடைபெற்ற ஜினதாசவை வரவேற்கும் வைபவத்தில் மாணவர் இயக்கம் சார்பில் உரையாற்றுவதற்கு அவர் என்னை தெரிவுசெய்திருந்தார். அரசியலில் முன்னகர்வதற்கு அவர் வழங்கிய வழிகாட்டல் மற்றும் ஆசிர்வாதத்தை நான் இன்று நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

# மாமிசம் தொடர்பிலான போலியான அகிம்சாவாதத்தை கைவிட வேண்டும்

நவீன தேசியத்தைக் கட்டியெழுப்புவதில் வெற்றி பெற முடியாமல் போனமைக்கான காரணங்களுள், சிங்களத் தெற்கிலும் தமிழ் வடக்கிலும் உருவான வன்முறைப் போராட்டங்கள் சமூகத்தை உச்ச பட்சமாக விகாரமடையச் செய்ததும் நலினப்படுத்தியதும் காரணங்களாக அமைந்தன. யுத்தம் நடைபெற்ற மூன்று தசாப்தங்களிலும் நாட்டில் பண்பாட்டுச் சீர்கேடு விரவிக் கிடந்தது. அரச அதிகாரத்துக்காகப் போராடிய குழுக்களும் அதனைக் கட்டுப்படுத்துவதற்காகப் புறப்பட்ட இராணுவமும் உச்சபட்ச கொடுமைகளை மக்கள் மீது அவிழ்த்துவிட்டனர். இந்தக் கொடுமையினால் ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்க முடியும் என்று நம்பப்படுகிறது. எஞ்சியிருந்தவர்கள் மோசமானதொரு பண்பாட்டுச் சூழலில் நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இரு தரப்புமே கிரிமினல்களிடம் உதவிக் கரம் நீட்டினார்கள். இதனால் அரசியல்வாதிக்கும் கிரிமினல்களுக்கும் இடையில் கொழுத்த வியாபாரம் நடைபெற்றது. இந்தத் தொடர்பினால் அரசியல்வாதியின் பாதுகாப்பு அதிகாரி இந்தக் கிரிமினல்களுக்கெல்லாம் சல்யூட் அடிக்க வேண்டிய அளவுக்கு இவர்களின் செல்வாக்கு வளர்ந்தது.

அரசியல்வாதிகளுடன் கூட்டமைப்பு அமைத்த இந்தக் கிரிமினல்களுக்கு எதிராக நீதியும் செயற்பட முடியவில்லை. வன்முறைகளை அடக்குவதற்கு அதிகமதிகம் படையினர் தேவைப்பட்டதற்கிணங்க பாதுகாப்புப் படை அதிகரிக்கப்பட்டது. படையிலிருந்து தப்பிச் செல்பவர்கள் பாதாள உலகுடன் இணைந்ததால் பாதாள உலகிலும் அதிகரிப்பு நிகழ்ந்தது. இதனால் நாட்டில் குற்றச் செயல்களும் வேகமான அதிகரிப்பைக் காட்டியது. சில கேடிகளுக்குக் கிடைத்த அரசியல் உத்தரவாதங்கள் சட்டத்தின் முன் அவர்களை நிறுத்த முடியாமல் குற்றம் செய்வதற்கு அவர்களுக்கு உதவின.

குற்றச் செயல்களில் ஈடுபட்டதால் ஈட்டிய வருமானத்தை முதலிட்டு இந்தக் கேடிகளில் சிலர் நாட்டில் பெயர்பெற்ற செல்வந்தர்களாக மாறினர். இந்நிலைகளால் வேகமான சமூக வீழ்ச்சியொன்று ஏற்பட்டதோடு, கறுப்புப் பணப் பொருளாதாரமும் நன்கு வளர்ச்சியடைந்தது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும் வேளையில் முழுச் சமூகமுமே விகாரமடைந்து, நலினமடைந்திருந்தது. அரசும் அரச நிர்வாகமும் ஊழலால் அழுகிப் போயிருந்தன. நாடும் அரசும் மக்களும் எந்தப் புனர்நிர்மாணமும் செய்யப்படாமல் முன்னோக்கி நகர்த்தப்பட முடியாத நிலைக்கு மாறியிருந்தனர். நிகழ்ந்திருக்கின்ற அழிவிலிருந்து மீண்டு, அரசையும் சமூகத்தையும் புனர்நிர்மாணம் செய்வதற்கான பொறிமுறையொன்றை வரைவதை நோக்கி நாடு செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இப்படிச் செய்திருந்தால் தேசத்தைக் கட்டியெழுப்புவதிலான பின்னடைவு மொத்த நெருக்கடிக்கும் காரணமாக அமைந்திருப்பதனை நாடு கண்டுகொள்ள முடியுமாக இருந்திருக்கும். அது அவ்வாறு நடந்திருந்தால், தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஏற்ற வகையில், சமூகத்திலும் அரசாங்கத்திலும் ஏற்பட்டிருக்கின்ற வீழ்ச்சி நிலையிலிருந்து மீண்டெழுவதற்கான சாத்தியமானதும் வெற்றிகரமானதுமான வேலைத் திட்டங்கள் வரையப்பட்டிருக்கலாம். இவைகள் எல்லாம் நடந்திருந்தால் மறுமலர்ச்சி இயக்கத்துக்கான தேவையே ஏற்பட்டிருக்க மாட்டாது.

இந்த வரலாற்றுத் தேவையை உணர்ந்து கொள்வதற்கு யுத்தத்தை வெற்றி கொண்ட தலைவரால் முடியவில்லை. அதேபோல அவரைத் தோற்கடித்து ஆட்சிக்கு வந்த தற்போதைய ஆட்சியாளர்களாலும் அது முடியவில்லை. சமூக மாற்றம் தன்னால் வருவதில்லை. அதற்கு பாரிய உழைப்பொன்று தேவைப்படுகிறது.

இந்த மாற்றம் வரவேண்டுமாக இருந்தால் வர்க்க பேதம், ஜாதி, மத பேதங்கள் களையப்பட வேண்டும். இவற்றுக்குரிய அங்கீகாரத்தை ஒழுங்கமைக்கப்பட்ட கருத்தியல் போராட்டமொன்றுக்கூடாக இல்லாதொழிக்க வேண்டும். அரசியலமைப்பை மாற்றுவதனால் இந்த நவீன தேசத்தை உருவாக்கிவிட முடியாது. கொள்கைப் போராட்டமொன்றின் மூலம் கட்டியெழுப்பப்படுகின்ற தேசத்துக்கு சட்டரீதியான அடிப்படையொன்றை வழங்குவதும், அந்த நவீன தேசத்துக்கு ஏற்ற வகையில் அரசியல் முறையொன்றை உருவாக்குவதும் தான் அரசியலமைப்பு செய்ய முடியுமானதாக இருக்கும்.


உள்நாட்டு யுத்தத்துக்குப் பின்னர் சமூகம், தேசம் மட்டுமன்றி கல்வி, பொருளாதாரம், வர்த்தகம், விவசாயம், போக்குவரத்து, சுகாதாரம், தொழிற்துறை என [illegible]




மேல் பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றன. பண்பாட்டு வீழ்ச்சி மூடக் கொள்கைகளை வளர்த்து விட்டிருக்கிறது. அது வருமானமீட்டக் கூடிய நிறுவனமயப்பட்ட வியாபாரமாக இடைப்பட்ட காலத்தில் வளர்ந்திருக்கிறது. மக்களின் பார்வையிலும் விமர்சனங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பாமரர்கள் மட்டுமன்றி படித்தவர்களும் பாவ புண்ணியங்களின் அடிப்படையிலேயே அனைத்தையும் பார்ப்பதற்குத் தலைப்பட்டனர். விஞ்ஞானத்தைக் கூட அவர்கள் சந்தேகக் கண் கொண்டே பார்த்தனர்.

யுத்த ஆரம்பத்திலேயே விவசாயிகளிடமிருந்து துப்பாக்கிகள் பறிக்கப்பட்டதால் வனவிலங்குகளின் எண்ணிக்கை அதிகரித்ததோடு அவற்றின் பாதிப்புக்களும் அதிகரித்தன. விலங்குகளைக் கொல்வது பாவம் என்ற மனோபாவம் அரசாங்க மட்டத்துக்கும் வியாபித்தது. இதனால் மனிதர்களுடைய பாதுகாப்பை விட விலங்குகளின் பாதுகாப்பு முக்கியமாகப் பார்க்கப்பட்டது.

மறுமலர்ச்சி இயக்கம் இலங்கையின் உணவையும் விவசாயத்தையும் ஏனையவர்களை விட வித்தியாசமாகவே நோக்குகிறது. விவசாயத்தில் பயிர்ச்செய்கைக்கு முன்னுரிமை கொடுத்திருப்பதனுடன் அது இணங்கவில்லை. அதுபோல உணவில் சோற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் அது இணங்குவதில்லை. கட்டுப்பாடின்றி விலங்குகளைப் பெருகச் செய்வதிலும் அதற்கு இணக்கமில்லை.



எமது உணவுப் பழக்கவழக்கத்திலும் விவசாய முறைமைகளிலும் மாற்றம் வர வேண்டும். இரசாயனப் பாவனையினால் விவசாயிகளுக்கு ஏற்படும் தீங்குகளைத் தவிர்ப்பதற்கு இரசாயனப் பாவனையை இல்லாமலாக்கி பண்டைய விவசாய முறைக்கு மாறுவதை விட, இரசாயனத்தை சிறந்த முறையில் பயன்படுத்தும் வகையில் விவசாயிகளுக்கு அறிவூட்ட வேண்டும். நஞ்சு-விஷங்களற்ற பயிர்ச்செய்கை என்ற கோஷத்துடன் வந்த விஞ்ஞானத்துக்கு முரணான கொள்கைக்கு எதிராக மறுமலர்ச்சி இயக்கம் மாத்திரமே பலத்த எதிர்ப்பை வெளியிட்டது. இது விவசாயத்துறையில் பாரியதொரு வீழ்ச்சியை ஏற்படுத்தும் என மறுமலர்ச்சி முழங்கியது போலவே, பெரிய நிதிச் செலவில் ஆரம்பிக்கப்பட்ட அந்த செயற்றிட்டத்தைக் கைவிடுவதற்கு தற்போது அரசுக்கு நேர்ந்திருக்கிறது.

இலங்கையின் வயற்காணிகளில் கமம் செய்வதைக் கைவிட்ட காணிகள் இலட்சக்கணக்கான ஏக்கர்கள் உள்ளன. இந்த வயல்களில் அதிகமானவை ஈரவலயத்திலேயே உள்ளன. விவசாயத்தில் இடப்படுகின்ற முதலீட்டுக்கான சிறந்த இலாபத்தினை இங்கு விவசாயம் செய்வதனால் பெற்றுக் கொள்ள முடியாததனாலேயே இவை கைவிடப்பட்டுள்ளன.

இவ்வாறு கைவிடப்பட்டுள்ள காணிகளை பயிர் செய்ய விருப்பமானவர்களுக்கு பகிர்ந்தளிக்கப் போவதாக அரசாங்கம் எடுத்த முடிவினால், காணி உரிமையாளர்கள் இங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். பயிர்ச்செய்கையின் போது க்ளைபோசைட் பாவிப்பதனை அரசாங்கம் தடை செய்திருப்பதனால் அவர்களது விளைச்சலுக்கான செலவும் வலுக்கட்டாயமாக அதிகரிக்கும். அதேபோல வனவிலங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கம் எந்த வழிமுறையையும் முன்வைக்கவுமில்லை. இந்நிலையில் இவர்களுக்கு உரிய வருமானம் ஈட்ட முடியாமல் நிச்சயமாக இவர்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவார்கள்.

எவ்வாறாயினும் பயிர்ச்செய்கை மூலம் ஈட்ட முடியுமான வருமானம் மிகவும் சொற்பமே. உலர் வலயங்களின் நிலைமை இதைவிட மோசமானது. இந்நிலையில் நாட்டில் வறுமையை விதைப்பதற்கான முதலீடாகவே மறுமலர்ச்சி, பயிர்ச் செய்கையை நோக்குகிறது. நெற்செய்கையை உலர்வலயத்துக்கென ஒதுக்கிவிட்டு, ஈரவலயத்தில் தாழ்நிலத்தைப் பாதுகாத்து இலாபமும் தரக்கூடிய வேறு பயிர்ச்செய்கைகளை ஊக்குவிப்பது தான் பொருத்தமானது என மறுமலர்ச்சி கருதுகிறது.

ஈரவலயத்தின் விசாலமான வயல் பரப்புகளில் புற்களை விதைத்து விலங்கு வேளாண்மைக்குப் பயன்படுத்த முடியும். இறால் பண்ணைகள் உருவாக்க முடியும். மக்களிடம் இதற்கான முதலீடு இல்லையென்றால், நிறுவனங்களுக்கும் பாரிய முதலீட்டாளர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்க முடியும்.

விலங்கு வேளாண்மையை இலங்கையில் முன்னேற்றுவதில், இறைச்சி உணவு தொடர்பில் அரசுக்கு தெளிவான கொள்கை இல்லாதிருப்பது பாதிப்புச் செலுத்துகிறது. இலங்கை பாலுற்பத்தியில் தன்னிறைவடைய முடியுமான நிலை இருக்கின்ற போதிலும், மாடறுப்பு தொடர்பில் அரசுக்கு நிலையான கொள்கையொன்று இல்லாமலிருப்பதால் அது சாத்தியமடைவதில்லை. பாலுக்காக மட்டும் மாடு வளர்க்க முடியாது. பாலுக்கு மேலதிகமாக மாட்டின் இறைச்சியும் பயன்படுத்தப்பட்டாலேயே பாற்பண்ணைகள் பொருளாதார விளைவுகளைத் தரும்.

ஈர வலய வயற்காணிகளை அரசாங்கம் நியாயமான விலைக்கு வாங்கி, அதனை 10, 25, 50, 100 ஏக்கர்களென முதலீட்டாளர்களுக்கு இலாபம் தரக்கூடிய பயிர்ச்செய்கைகளுக்காக விற்க முடியும். இந்த வயல்களில் நெற்செய்கை செய்வோருக்கு இலாபம் கிட்டுவதில்லை என்பது போலவே, இந்த வயற்காணியை வயலாகவன்றி யாருக்கும் விற்கவும் அவர்களால் முடியாது. எனவே இந்தக் காணிகளில் வேறு பயிர்ச்செய்கைகளுக்கு சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம், உள்ளூரில் தொழில்வாய்ப்புக்களையும் ஏற்படுத்த முடியும். புதிய செயற்திட்டங்கள் அறிமுகமாகி நாடும் பயன்பெற முடியும்.

வனவிலங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கான அரச கொள்கையொன்றை வகுப்பதும் பயிர்ச்செய்கையின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் காரணியாக அமையும். காடுகளிலன்றி மக்கள் வாழும் பிரதேசங்களில் வாழும் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்கு, அவற்றின் இறைச்சியை வைத்திருப்பதற்கு, போக்குவரத்துச் செய்வதற்கு, விற்பதற்கெல்லாம் அனுமதியளிக்கின்ற கொள்கையொன்றை வகுப்பதன் மூலம் வனவிலங்குகளின் தொகையை கட்டுப்படுத்த முடியும். இதனால் வேட்டை இறைச்சி விற்பதனை அடியாகக் கொண்ட தொழில்வாண்மையாளர்கள் நாட்டிலே உருவாக முடியும்.

போலியான அகிம்சை மனப்பாங்கு நிலவுகின்ற நிலையிலும் மக்கள் வேட்டை இறைச்சியை விரும்புகிறார்கள். எனவே இதற்கென ஒரு கொள்கை வகுக்கப்படும் போது சுப்பர் மார்க்கட்டிலும் வேட்டை இறைச்சி விற்பனை நடைபெறும் நிலை உருவாகும்.

இந்த வேட்டை உணவுகளில் நாம் உணவாக உட்கொள்ளாதவைகள் இருந்தால் அவற்றை உணவாக உட்கொள்ளுகின்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். நாயிறைச்சி, குரங்கிறைச்சி போன்றவற்றை நாங்கள் சாப்பிடாத போதும் அவற்றை உணவாக உட்கொள்ளும் நாடுகள் இருக்கின்றன. இந்தியா மாட்டிறைச்சியை உணவாகக் கொள்வதில்லை என்று சொல்லப்பட்டாலும், இறைச்சி சாப்பிடுகின்ற நாடுகளுக்கு மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்வதன் மூலம் அது சிறந்த வருமானமீட்டுகிறது.

தாய்லாந்து 94 வீதம் பௌத்தர்களைக் கொண்ட பௌத்த நாடு. இங்கு அனைத்து வகை பாம்பு களையும் சுவையான உணவாக அவர்கள் உட்கொள்கின்றனர். நாங்கள் பாம்பிறைச்சி சாப்பிடுவதில்லை. ஏற்றுமதிக்காக பாம்புகளை வளர்ப்பது இலாபகரமானது என்றிருந்தால் நாங்கள் பாம்புப் பண்ணைகளை இங்கு உருவாக்குவதில் தப்பேதுமில்லை. அதேபோல நத்தை சாப்பிடும் நாடுகளுக்காக நாங்கள் இங்கு நத்தைகளையும் உற்பத்தி செய்ய முடியும்.

மாமிசம் தொடர்பில் இலங்கை ஏற்படுத்திக் கொண்டுள்ள போலியான அகிம்சாவாதத்தை கைவிட முடியுமென்றிருந்தால், அது மாற்றமாக மட்டுமன்றி, நாட்டின் முன்னேற்றத்துக்கும் வழியமைத்ததாக அமையும். இது தேங்கிப் போயிருக்கின்ற எமது சிந்தனாவோட்டத்திலும் பாரிய மாற்றமொன்றைக் கொண்டுவருவதற்குக் காரணமாயும் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**

- **ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதி நிதித்துவப்படுத்தும் பா.உ. என்ற வகையில் வன்னி தேர்தல் தொகுதி உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சு.க. இம்முறை வன்னியில் கூடுதலான உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றும் என நீங்கள் கருதுகிறீர்களா?**

இம்முறை நடைபெறவுள்ள வட்டார முறையிலான தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் கூடுதலான உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றும் முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகிறோம். மக்கள் ஆதரிக்கும் சிறந்த வேட்பாளர்களை நாம் களமிறக்கியுள்ளோம். பிரதேசத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு நல்ல ஆதரவுள்ளது. எமது கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். வன்னி மாவட்டத்திலும் சில திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் அதிக சபைகளை எமது கட்சி கைப்பற்றும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

- **கடந்த ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்த வேளையிலேயே நீங்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டு முதன் முறையாக பாராளுமன்றத்திற்குத் தெரிவானீர்கள். இம்முறை தேர்தல் பணிகள் உங்களுக்கு புதிய அனுபவமாக இருப்பதால் நீங்கள் எவ்வாறான சவால்களை எதிர்கொண்டு வருகிறீர்கள்?**

வவுனியா மாவட்டத்திற்கான பொருளாதார மத்திய நிலைய நிர்மாணிப்பு விடயத்தை உதாரணமாகக் குறிப்பிடலாம். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள் பிரகாரம் பொருளாதார மத்திய நிலைய நிர்மாணிப்புக்கான இடம் உரிய முறையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை. சரியாகப் பார்ப்பதானால் தற்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் உண்மையில் பொருத்தமற்றது.

பொருளாதார மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்கு குறைந்தபட்சம் 5 ஏக்கர்களாவது இருக்க வேண்டும். 5 ஏக்கர்களில் அக்கட்டிடம் நிர்மாணிக்கப் படும் என்பதாக கூறி 2 ஏக்கர் நிலத்தில் அந்தக் கட்டிடத்தை நிர்மாணிக்கிறார்கள்.

எமது பகுதிக்குரிய அபிவிருத்தியை திட்டமிட்ட அடிப்படையிலல்லாமல் மேற்கொள்ளும் விடயமாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது. நாங்கள் மாவட்ட அபிவிருத்திக் குழுவைப் பிரதி நிதித்துவப் படுத்துகிறோம். நாங்கள் அமைச்சரவையில் இல்லாததால் சிலர் அமைச்சரவை அதிகாரத்தை பயன்

மாற்றுத் தீர்வு காணப்பட வேண்டும். மீள்குடியேறிவர்கள் தொடர்பில் முதலில் தரவுகள் எடுக்கப்பட வேண்டும். அவர்களது தேவைகள் இனங்காணப்பட வேண்டும்.

விளக்கமாக கூறுவதென்றால் மீள்குடியேறிய மக்களுக்கு அவர்களது பூர்வீகக் காணிகளில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்களுக்கு தொழில் வசதிகளில்லை. அதனால் அம்மக்கள் அப்பகுதியில் வசிக்க விரும்புவதில்லை. மீண்டும் அவர்கள் புத்தளம், குருநாகல் போன்ற இடம்பெயர்ந்து சென்ற இடங்களுக்கே செல்கிறார்கள். இவ்வாறான திட்ட மிடாத செயற்பாடுகளின் காரணமாக அரச நிதிகள் வீணாக செலவழிக்கப்பட்டுள்ளன. மீள்குடியேற்ற பிரச்சினையை திட்டமிட்ட அடிப்படையில் செய்திருப்பின் இதுவரை காலமும் செலவு செய்த நிதியில் நியாயமான பலனை கண்டிருக்கலாம். இந்த நிலைப்பாட்டை ஜனாதிபதியுடனும் அவரது செயலாளருடனும் கதைத்தேன். சில திட்ட வரைவுகளையும் அவர்களிடம் சமர்ப்பித் துள்ளேன்.



# சிலர் அமைச்சரவை அதிகாரத்தை பயன்படுத்தி சாதிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சில விடயங்களை செய்து வருகிறார்கள்

**காதர் மஸ்தான்**
(பாராளுமன்ற உறுப்பினர் - ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி)

பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் நான் எதிர்கொள்ளும் முதலாவது தேர்தல் இது. தொகுதி அமைப்பாளர் என்ற வகையில் உண்மையில் பல சவால்கள் எமக்கு உள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதில் நாம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தோம். வேட்பாளர்கள் இல்லாமலில்லை. போட்டியிடுவதற்கான வாய்ப்புக்களை தங்களுக்கு தருமாறு பலர் போட்டி போட்டதால் யாரைத் தெரிவுசெய்வது என்கின்ற பிரச்சினையை நாம் எதிர்கொண்டோம். ஊர் மக்களின் ஒத்துழைப்பில் அரசியல் ஆலோசகர்களது ஆலோசனைப் பிரகாரம் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் விடயத்தை சாதுர்யமான முறையில் எதிர்கொண்டோம். பிரதேசத்தில் பிரச்சினைகள் ஏற்படாதவாறு இவ்விடயத்தை அணுகியமையானது உண்மையிலேயே எமது கட்சி அடைந்த முதல் வெற்றியாகவே கருத வேண்டியுள்ளது.

- **ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினூடாக நீங்கள் அரசியல் பிரவேசம் பெற்றமைக்கான காரணங்கள் என்ன?**

உண்மையில் சிறு கட்சிகளுடன் இணைந்து அரசியல் செய்வதை விட தேசிய கட்சிகளுடன் இணைந்து அரசியல் செய்யும் போதே முதற் கட்டமாக எமது பிரதேசத்திற்கான அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதற்குப் பிறகு அடுத்தடுத்த கட்டமாக தேசியம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டுமாக இருந்தாலும், தேசிய கட்சியுடன் இணைந்த அரசியலாலேயே அது சாத்தியமாகிறது. எனவே எமது மக்களுக்கு கூடுதலான சேவைகளைச் செய்யும் நோக்கிலேயே நான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினூடாக அரசியல் பயணத்தை ஆரம்பித்தேன்.

- **தற்பொழுது நீங்கள் வன்னி அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராக செயற்பட்டு வருகிறீர்கள். முஸ்லிம்களது விடயத்தில் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்தீர்கள்?**

அபிவிருத்தி என்ற விடயத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் என்ற வேறுபாடுகளில்லை. வன்னி மாவட்டத்தில் சகல இன மக்களாலும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் சகல மக்களினதும் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறேன். எனினும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் அல்லது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உரிய முறையில் சில தீர்வுகள் காணப்பட்டாலும் அவற்றை அமுல்படுத்துவதில் நாம் பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகிறோம்.

- **வன்னி அபிவிருத்திக் குழுவைப் பிரதி நிதித்துவப்படுத்தி சில செயற்பாடுகளை முன்னெடுப்பதில் உங்களுக்கு சில தடைகள் இருப்பதாக குறிப்பிட்டீர்கள். அந்தத் தடைகள் என்னவென்று குறிப்பிட முடியுமா?**

படுத்தி சாதிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சில விடயங்களை செய்து வருகிறார்கள். பொருளாதார மத்திய நிலையத்தை சரியான முறையில் நிர்மாணிப்பதென்றால் 5 ஏக்கர் நிலமாவது வேண்டும். ஏனைய இடங்களுக்கும் 5 ஏக்கர்களே வேண்டப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் கட்டிடத்தை நிர்மாணிக்க 2 ஏக்கரை வாங்கியிருப்பது இங்கு அபிவிருத்திகள் சரியான முறையில் இடம் பெறுவதில்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற முடிவுகளைச் செய்யாமல் விடப்பட்டதில் இதுவும் ஒன்று.

- **வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்ற விடயம் தொடர்பில் எவ்வாறான தீர்வுத் திட்டங்களை முன்வைத்துள்ளீர்கள்?**

நீண்டகாலமாக வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்ற வேண்டிய தேவை உள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்குமான மீள்குடியேற்றம் ஒன்றாக செய்யப்பட வேண்டும். மீள்குடியேற்றம் என்று கூறும் போது அண்மையில் நடந்தவற்றையே பார்க்கிறார்கள். நீண்ட காலத்திற்கு முன்னர் நடந்த மீள்குடியேற்றத்தை பற்றி ஒருவரும் பார்ப்பதில்லை. புள்ளிவிபரங்களை பார்க்கும் போது நீண்ட காலமாக இடம்பெயர்ந்த மக்களை உள்வாங்குவதில் சிக்கல்கள் இருப்பது தெரிகிறது. இப்பிரச்சினைகள் குறித்து நான் ஜனாதிபதியுடன் கதைத்து இதற்கொரு மாற்றுத் திட்டத்தை செய்ய வேண்டும் எனக்கூறினேன்.

இன்னும் சில அரசியல்வாதிகள் இது தொடர்பில் அவதானம் செலுத்தியதற்கமைய நீண்ட காலமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள்குடியேற்றச் செயலணி உருவாக்கப்பட்டது. அதனூடாக சில வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அதுவும் திட்டமிட்ட அடிப்படையிலல்லாமல் இடம்பெற்று வருகின்றது. அந்தந்தப் பகுதியில் ஒரு குழுவை அமைத்து ஒவ்வொரு கிராமத்திற்கும் என்னென்ன தேவைகள் காணப்படுகின்றன என்பதை அந்தந்தப் பகுதி மக்களூடாகவே அறிய வேண்டும்.

இதுவல்லாமல் அவரரவர் வழங்கும் திட்டங்கள் அரசாங்க அதிபருக்கூடாக பரிசீலித்துச் செய்யும் ஒரு நடைமுறையே காணப்படுகின்றது. இதைவிட மீள்குடியேற்ற அமைச்சு அந்தந்தப் பகுதி மக்களுடன் கலந்தாலோசித்து அந்தப் பகுதிக்குரிய வேலைத்திட்டங்களை செய்யும் போதே அது ஒழுங்கான முறையில் அமைகின்றது.

நீண்ட காலமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள்குடியேற்றம் ஏன் இதுவரை தோல்வியில் முடிவடைந்தது என்பதற்கான காரணத்தை அறிந்து அதற்கேற்ற முறையில் இப்பிரச்சினைக்கு

- **வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் சில அரசியல்வாதிகளின் செயற்பாடுகளுக்கு மத்தியில் உங்களது நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தடங்கல்கள் உள்ளனவா?**

ஆம் உண்மையில் உள்ளது. மீள்குடியேற்ற விவகாரத்தை எடுத்துக் கொண்டாலும் இதனை காணலாம். மீள்குடியேற்றச் செயலணிக்கூடான செயற்திட்டங்களை முன்னெடுப்பதிலும் சில தடங்கல்கள் காணப்படுகின்றன. இப்பகுதியில் சில அரசியல்வாதிகள் நிதி ஒதுக்கப்படாமலேயே அடிக்கல் வைக்கிறார்கள். நான் அடிக்கல் வைத்துவிட்டேன் இதைத்தான் செய்ய வேண்டும் என்ற விடாப்பிடியில் உள்ளனர். இதனால் இப்பகுதியில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்கள் மக்கள் விருப்பத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதில்லை.

சில அரசியல்வாதிகள் சுய விருப்பத்திற்கும், கௌரவத்திற்கும் அமைவாகவே வேலைத் திட்டங்கள் நடைபெற வேண்டும் என நினைக்கின்றனரே ஒழிய மக்கள் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என நினைப்பதில்லை. நாம் இவற்றை மாற்றியமைத்து, மக்கள் தேவையை உணர்ந்து இப்பகுதியில் அபிவிருத்தி திட்டங்களை முனனெடுக்க வேண்டும். இந்த விடயத்தில் சில அரசியல் வாதிகளுடன் முரண்பட வேண்டிய நிலையும் எனக்கு ஏற்பட்டுள்ளது.

- **கடந்த காலப்பகுதியில் வில்பத்து விவகாரம் அதிகளவில் பேசப்பட்ட தலையங்கமாக காணப்பட்டது. முஸ்லிம்கள் பூர்விகமாக வாழ்ந்த சில நிலப்பகுதிகள் அரசுக்கு சொந்தமானவை என வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விடயம் குறித்து எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது?**

வில்பத்து சரணாலயம் அழிக்கப்பட்டு அங்கு மக்கள் குடியமர்த்தப்படவில்லை. வனசீவராசிகள் திணைக்களம் 2012 இல் கொண்டு வந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமிழ், முஸ்லிம்களின் பெரும்பாலான நிலங்கள் வன இலாகாக்களுக்கு சொந்தமானது என அறிவிக்கப்பட்டது. இது உண்மையில் பாரிய மனித உரிமை மீறலாகும். நாம் இவ்விடயத்தை ஜனாதிபதியின் அவதானத்திற்கு கொண்டு சென்றோம். இதற்கமைய, இது தொடர்பில் ஆராய ஜனாதிபதி ஒரு குழுவை அமைத்தார். அக்குழு தனது அறிக்கையை ஜனாதிபதிக்கு பரிந்துரைத்துள்ளது. இந்த அறிக்கை இன்னும் சரியான முறையில் வெளிவரவில்லை. அது தொடர்பில் ஜனாதிபதி ஒரு நல்ல முடிவை எடுப்பார் என்று நினைக்கிறோம்.

## எழுவாய், மயமிலை



அபூ ஷாமில்

## சுதந்திரப் பிரகடனம்

நாடு தேர்தலை எதிர்நோக்கியிருக்கிறது. தேர்தல் நடத்தாத பள்ளிவாசல்களின் நிர்வாகிகளும் கூட இந்தத் தேர்தலில் பங்கேற்கிறார்கள். நாடு சுதந்திர தினத்தை கொண்டாடுகிறது. தமது பள்ளிவாசல்களில் இஸ்லாத்துக்கு சுதந்திரம் வழங்காத பள்ளிவாசல்கள் எல்லாம் சுதந்திரத்தை அனுஷ்டிக்கின்றன.

இந்த முரண்நகை முஸ்லிம் சமூகத்தின் வாடிக்கையாவிட்டிருக்கிறது. மார்க்கம் என்று வரும் போது எதையெல்லாம் செய்ய முடியாதிருக்கின்றதோ, அதையெல்லாம் அரசியல் என்று வரும்போது நமது சமூகத்தினால் செய்ய முடியுமாக இருக்கிறது. மார்க்க விடயத்தில் ஒன்றிணைய முடியாதவர்கள் எல்லாம் தத்தமது அரசியல் கட்சிகளில் ஒன்றாக இணைந்து செயலாற்றுகிறார்கள். மார்க்கம் என்று வரும் போது சில்லறைக் கருத்து வேறுபாடுகளையெல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள், கட்சி என்று வரும் போது பாரிய முரண்பாடுகளைக் கூட சகித்துக் கொள்கிறார்கள். மார்க்கத்தில் அடுத்த கொள்கையில் உள்ளவர்களை எதிரியாகப் பார்க்கும் கொள்கைச் சகோதரர்கள், கட்சிக் கொள்கையுடன் எந்த உடன்பாடுமில்லாத கட்சியுடன் தமது கட்சி கைகோர்ப்பதை பெருமையாகவும் வெற்றிக்கான அடையாளமாகவும் காண்கிறார்கள்.

இந்த நிலைப்பாட்டில் இருந்து கொண்டு தான் சில பள்ளிவாசல் தலைவர்களும் நிர்வாகிகளும் அரசியல் சாக்கடையில் குளிக்கிறார்கள். பின்னர் பள்ளிவாசலுக்கும் சேறு பூசுவதற்கு இவர்கள் காரணமாகிறார்கள். வெளி உலகத்தில் நிலவுகின்ற ஜனநாயகத்தின் வாடையைக் கூட, இஸ்லாத்தின் பெயரால் நடத்தப்படும் பள்ளிவாசலுக்குள் வருவதற்கு இவர்கள் விடுவதில்லை. அடுத்த ஜமாஅத்துக் காரன், மாற்றுக் கொள்கைக்காரன், வழிகெட்ட கொள்கையுடையவன், மாறுபட்ட அகீதாவைக் கொண்டவன் என சமூகத்தவரைக் கூறு போட்டு மக்கள் பள்ளிவாசலுக்கு வர விடாமல் இவர்கள் தடுத்து வருகின்றனர். கட்சிகள் ஊரூராக கிளையமைப்பது போலவென்று எண்ணிக் கொண்டு, தனது கொள்கைக்கான கிளை நிறுவனமாக இவர்கள் பள்ளிவாசலை நடத்திச் செல்கின்றனர்.

இத்தகைய அரசியல்தனமான அற்பர்களால் தான் இன்று பள்ளிவாசல்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கின்ற பொழுது சகல இனத்தவரும் சமமாக வாழ்வதற்கான வாய்ப்பினைத் தான் நமது தலைவர்கள் சுதந்திரத்தின் ஊடாகப் பெற்றுத் தந்தார்கள். நாட்டை சிங்களவர்க்கென்றும் தமிழருக்கென்றும் முஸ்லிம்களுக்கென்றும் கூறுபோடுவதற்கு அரசியல் யாப்பிலே கூட அவர்கள் இடமளிக்கவில்லை. அந்தளவுக்கு எல்லா மக்களும் ஒன்றிணைந்து நிம்மதியாக வாழ்வதற்கான முன்னாயத்தங்களுடன் தான் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. நாட்டை அடிமைப்படுத்திய ஆங்கிலேயர்களும் நாட்டிலே வாழ்ந்த சகல இனத்தவர்களும் இந்த விடயத்தில் ஒன்றுபட்டார்கள்.

இன்று இந்தச் சுதந்திர தினத்தை பள்ளிவாசல்களும் அனுஷ்டிக்கின்றன. மீண்டும் வாடிக்கையாகிப் போன முரண்நகை முன்னால் வந்து நிற்கிறது. இலங்கையின் எந்தப் பள்ளிவாசலும் எல்லா முஸ்லிம்களும் சுதந்திரமாகச் செயலாற்ற முடியுமான பள்ளிவாசலாக இல்லை. (ஓரிரண்டு பள்ளிவாசல்களாவது இருந்தால் தயவு செய்க). அந்தளவுக்கு இலங்கையிலுள்ள பள்ளிவாசல்கள் அனைத்தும் பல்வேறு நவகாலனித்துவ வாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பள்ளிவாசல்களில் நியமிக்கப்பட்டுள்ளவர்களைத் தவிர எவரும் தொழுவிக்க முடியாது. அவரவரது இஸ்லாத்தைத் தவிர இஸ்லாத்தைப் பற்றிப் பேச முடியாது. மார்க்க அனுஷ்டானங்களில் ஈடுபட முடியாது. மாற்றுக் கருத்துக்களை முன்வைக்க முடியாது. தாம் சொல்லும்படி மட்டும் தான் நடக்க வேண்டும், தமது கட்டளைக்கு மாறாகச் செயற்பட முடியாது. இப்படியெல்லாம் குறித்த பள்ளிவாசலின் கொள்கையில் இல்லாதவர்கள் அடக்கி ஆளப்படுகிறார்கள்.

காலனித்துவ வாதிகளிடம் நாடு இருக்கும் போது பேசுவதற்கெல்லாம் உரிமை இருந்தது. காலனித்துவ ஆட்சியில் இருந்து கொண்டே ஆட்சியை விமர்சிக்கும் சுதந்திரம் இருந்தது. சுதந்திரத்துக்கு முன்னர் காலனித்துவவாதிகள் வழங்கியிருந்த அடிமைச் சுதந்திரம் கூட இன்று பள்ளிவாசல்களில் முஸ்லிம்களுக்கு இல்லை. இந்த நிலையில் நாட்டின் சுதந்திரப் போராட்டத்தை அனுஷ்டிக்கின்ற முஸ்லிம் சமூகம், தமது முதல் ஆளுகை மையமான பள்ளிவாசல்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளிவாசல் ஜமாஅத்தினரும் தமது பள்ளிவாசலின் சுதந்திரப் பிரகடனத்தை உரத்து வாசிக்கும் நாள் விரைவில் வர வேண்டும். அதன் முதல் யாப்பில் பிஸ்மிலுக்கு அடுத்தபடியாக சகல கொள்கையுடையவர்களும் சமானமாக நடத்தப் படுவார்கள் என்ற வாசகம் பொறிக்கப்பட வேண்டும்.

முரண்நகைகள் மாறி புன்னகைகள் பூக்கும் நாளை நம்மால் இந்த நாட்டில் கொண்டு வர முடியுமான நாட்கள் மலர வேண்டும். அன்று தான் உண்மையான சுதந்திரத்தை இலங்கை முஸ்லிம்கள் அனுஷ்டிப்பார்கள்.

இரத்தம் சிந்தாததொரு சுதந்திரம் நமக்கும் கிட்டுவதாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லாஹ் யமீன் பதவி விலக வேண்டும்

## எதிர்க்கட்சிகள் கோரிக்கை



பாரியளவிலான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய வேண்டும் என்ற வகையில் தற்போதைய மாலைதீவின் ஜனாதிபதி யமீனை பதவியிலிருந்து நீக்குமாறு அந்நாட்டின் உச்ச நீதிமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

தனக்கெதிரான ஊழல் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள யமீன், சட்டபூர்வமான அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எதிரணியினர் முயற்சிக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார். நான்கு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இணைந்து விடுத்துள்ள மனுவில், யமீன் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன. மனித உரிமை மீறல்கள், கடும் ஊழல், அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை, தனது குடும்பத்திற்காக அரச சொத்துக்களையும் பணத்தையும் பயன்படுத்தியமை என்பன அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள பிரதான குற்றச்சாட்டுக்களாகும்.

இம்மனுவில், முன்னாள் ஜனாதிபதிகளான மஃமூன் அப்துல் கையூம் மற்றும் முஹம்மத் நஷீத் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர். உல்லாசப் பயணத்துறை வருமானத்திலிருந்து பெருந் தொகையை ஜனாதிபதி யமீன் கையகப்படுத்தியுள்ளார் என்று 2016 இலேயே செய்திகள் வெளிவந்தன. ஒரு மில்லியன் டொலர் பணம் ஜனாதிபதியின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் உள்ளது என்றும், இது விசாரிக்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றன.

லஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழு ஏற்கனவே இது குறித்து நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்றும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

டிரான்பெரன்ஸி இன்டர்நெஷனல் மாலைதீவு நிறைவேற்றுப் பணிப்பாளர் மர்யம் ஷிவ்னா உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என்ற சந்தேகம் தனக்குள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். ஏனெனில், ஏற்கனவே நீதிமன்றம் அரசுக்கு ஆதரவாகச் செயல்படுகின்றது என அவர் கருத்து வெளியிட்டுள்ளார். இவ்வருடம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலும் நீதியாக இடம்பெறும் என எதிர்பார்க்க முடியாது என்றும் மர்யம் தெரிவித்துள்ளார்.

# சர்வதேசப் பார்வை



# யெமன்: சிவில் யுத்தம் மேலும் சிக்கலாகின்றது


ஐக்கிய அரபு அமீரகம் ஆதரவளிக்கும் பிரிவினைவாத ஆயுதக் குழு கடந்த சில நாட்களாக ஏடன் நகரத்தில் போராடத் தொடங்கியுள்ளதால் யெமன் பிரச்சினை மென்மேலும் சிக்கலடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்திற்கு எதிராகவே அமீரகம் ஆதரவளிக்கும் ஆயுதக் குழு களமிறங்கியுள்ளது.

தெற்கு எதிர்ப்பு அணி என்ற பெயரிலான இவ்வாயுதக் குழு, தெற்கின் ஆட்சி மாற்ற சபை (South Transitional Council) இன் ஆயுதப் பிரிவாகும். தெற்கின் ஆட்சி மாற்ற சபை என்பது தென் யெமனை தனிநாடாகக் கோரும் அரசியல் இயக்கமாகும். இவர்கள் யெமன் இராணுவத்தோடு போராடி ஏடனில் உள்ள முக்கிய இராணுவத் தளங்களைக் கைப்பற்றியதோடு அரச படையினரையும் கைதுசெய்துள்ளனர்.

கடந்த மாதம் பிரதமர் அஹ்மத் தக்ரை ஜனாதிபதி அப்துர் ரப் மன்சூர் பதவி விலக்க வேண்டும் அல்லது பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என தெற்கு அதிகார மாற்று சபை எச்சரித்திருந்தது. மன்சூரின் அரசாங்கம் ஊழல் மோசடியில் ஈடுபட்டுள்ளதால் நாட்டின் பொருளாதாரம், பாதுகாப்பு என்பன குறிப்பாக தென் யெமனின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக இவ்வமைப்பு கூறி வருகின்றது.

ஏடன் நகரில் நுழையாதவாறு யெமன் அரச படைகள் நகரின் நுழைவாயிலில் நிறுத்தப்பட்டிருந்தபோதும், பிரிவினைவாதிகளோடு மோதலைத் தவிர்க்க முடியவில்லை. இப்பிரிவினைவாதிகள் 1990 களுக்கு முன்பு தனிநாடாக இருந்த தென் யெமனை வடயெமனோடு இணைப்பதை எதிர்த்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# FBI இன் துணைப் பணிப்பாளர் பதவி விலகியுள்ளார்




அமெரிக்காவின் இரண்டாவது பெரும் புலனாய்வுத் திணைக்களமான FBI இன் துணைப் பணிப்பாளர் பதவி விலகியுள்ளார். கடந்த சில வாரங்களாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் FBI இன் துணை பணிப்பாளர் என்ரோ மெகேயை காரசாரமாக விமர்சித்து வந்த நிலையிலேயே என்ரோ பதவி விலகியுள்ளார்.

மெகே ஏன் பதவி விலகினார் என்பதற்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை என எசோசியேடட் பிரஸ் கூறுகிறது. வெள்ளை மாளிகை ஊடக செயலாளர் சாரா சாண்டர்ஸ் இது குறித்து எந்தக் கருத்தினையும் தெரிவிக்க முடியாது என்று கூறியுள்ளார்.

என்ரோ 2016 இல் பதவியேற்றார். முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முறையாக ஆவணப்படுத்தவில்லை என்று ட்ரம்ப், என்ரோவை குற்றம்சாட்டியிருந்தார். என்ரோ அவசரமாகப் பதவி விலகுவார் என்று ட்ரம்ப் தனது டுவிட்டர் செய்தில் டிசம்பரில் அறிவித்திருந்தார்.

அமெரிக்காவின் மத்திய உளவு ஸ்தாபனம், FBI ஆகிய இரண்டும் சர்வதேச நாடுகளின் உள்ளூர் விவகாரங்களில் தலையிட்டு ஆட்சி மாற்றத்தை உருவாக்கக் கூடிய, உலகிலேயே மிகப் பலம் வாய்ந்த உளவுத் துறை நிறுவனங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரோஹிங்ய அகதி முகாம்களில் பெண்கள் கடத்தப்படுகின்றனர்



பங்களாதேஷில் தஞ்சம் கோரியுள்ள ரோஹிங்யர்களின் அகதி முகாம்களிலிருந்து சிறுமிகள் பெருமளவு கடத்தப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்களும் பங்களாதேஷ் ஊடகங்களும் தெரிவித்துள்ளன. குறிப்பாக, குட்டுபுலோங் அகதி முகாமிலிருந்து சிறுமிகள் அன்றாடம் கடத்தப்பட்டு வருவதாக அவர்களின் பெற்றோர்கள் மனித உரிமை நிறுவனங்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு கடத்தப்படும் சிறுமிகள் இந்தியா, மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாகக் கொண்டு செல்லப்படுகின்றனர் எனக் கூறப்படுகின்ற போதும், விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்படவே சிறுமிகள் இவ்வாறு கடத்தப்படுவதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தப்படும் சிறுமிகளுக்கு கடவுச் சீட்டோ வேறு எந்த வகையான பயண ஆவணங்களுமோ இல்லை என்பதனால், அவர்களைக் கண்டுபிடிப்பதும் மீளவும் நாட்டுக்குக் கொண்டு வருவதும் சட்ட ரீதியில் பாரிய சவாலாகியுள்ளது.

மியன்மாரிலிருந்து தப்பி வந்த அகதிகளில் ஒருவரான நயோனா எனும் பெண்மணி, தனது 13 வயதான யாஸ்மின் தெற்கு பங்களாதேஷிலிருந்து இந்தியாவுக்கு கடத்திச் செல்லப்பட்டார் என முறையிட்டுள்ளார். நயொனாவின் குடும்பம் 5 ஆண்டுகளுக்கு முன்னர் மியன்மாரில் இடம்பெற்ற இன வன்முறையை அடுத்து பங்களாதேஷுக்கு தப்பி வந்தது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கடத்தப்பட்ட யாஸ்மின் இந்தியாவில் கல்கத்தாவில் கண்டுபிடிக்கப்பட்டார். அவரைக் கடத்தியவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். எனினும், கடவுச் சீட்டு இல்லாததினால் நயோனாவுக்கு தனது மகளைப் பார்வையிட இந்தியா செல்ல முடியாது. அதேவேளை, கல்கத்தாவிலுள்ள யாஸ்மின் மீண்டும் பங்களாதேஷ் வரவும் முடியாத நிலையில் உள்ளனர். இது போன்ற சம்பவங்கள் ஏராளமாக இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சிறுவர்களுக்கான அல்குர்ஆன் வகுப்புக்களை தடைசெய்யும் சீனா



அல்குர்ஆன் மத்ரஸாக்களுக்கு முஸ்லிம் சிறார்கள் செல்வதை சீனா அரசாங்கம் தடை செய்துள்ளது. முஸ்லிம்கள் மிகச் செறிவாக வாழும் மேற்கு சீனாவில் அல்குர்ஆனைப் போதிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு முஸ்லிம் சிறார்கள் செல்வதையே அரசாங்க அதிகாரிகள் தடை செய்துள்ளனர்.

இப்பிராந்தியத்தின் கல்வித் திணைக்களத்தினூடாக தடைபற்றிய அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. சீன முஸ்லிம்களின் சமய, கலாசார உரிமைகள் மீது அரசாங்கம் விதித்து வரும் இத்தடைகள் அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறும் அடக்குமுறையாகும். ஏற்கனவே, முஸ்லிம்கள் நோன்பு இருப்பதற்கும் இரவு நேரத் தொழுகையில் ஈடுபடுவதற்கும் சீன அரசாங்கம் தடைவிதித்திருந்தது.

பாடசாலைகளிலும் அல்குர்ஆனை ஓதுவது தடைசெய்யப்பட்டுள்ளது. சீனாவில் இஸ்லாமிய செல்வாக்கு அதிகரித்து வருவதாக அந்நாட்டின் இடதுசாரி சிந்தனையாளர்களும் அரசியல்வாதிகளும் நம்புகின்றனர்.

# ஜேர்மனியில் இஸ்லாத்தை எதிர்த்து நின்ற அரசியல்வாதி இஸ்லாத்தைத் தழுவினார்



ஜேர்மனியில் முஸ்லிம்களோடு பகைமை பாராட்டி வந்த முன்னணி அரசியல்வாதி ஒருவர் இஸ்லாத்தைத் தழுவியுள்ளதாக அவரது கட்சி உறுதிப்படுத்தியுள்ளது. ஆதர் வெட்னர் எனப்படும் இவ்வரசியல்வாதி AFD எனும் கட்சியின் முக்கிய பதவியில் இருந்தவர் ஆவார்.

கிழக்கு ஜேர்மன் மாநிலமான பிரண்டன் பேர்க்கில் செயல்பட்டு வந்த தீவிர வலதுசாரி அரசியல் கட்சி கடந்த காலங்களில் இஸ்லாம் விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தது. வெட்னர் இஸ்லாத்தைத் தழுவியுள்ளதோடு, கட்சியிலிருந்தும் பதவி விலகியுள்ளார்.

அவர் இஸ்லாத்தைத் தழுவிய செய்தியை வெளியிட்ட ஜேர்மன் பத்திரிகைக்கு கருத்துத் தெரிவித்த அவர், இது தனது தனிப்பட்ட தீர்மானம் என்று அறிவித்துள்ளார்.

ஜேர்மனிக்கு வந்து குடியேறும் முஸ்லிம் அகதிகளை கடுமையாகத் தாக்கிப் பேசியவர் வெட்னர். தீவிர திரச்சபை ஆதரவாளராக இருந்த இவர், கட்சியில் முன்னணி உறுப் பினராகவும் விளங்கினார். இக்கட்சி ஜேர்மனியிலுள்ள முஸ் லிம்களுக்கு எதிராக செயல்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• றவூப் ஸெய்ன்



# பங்களாதேஷில் மீளாத் துயரில் வீழ்ந்துள்ள மியன்மார் முஸ்லிம்கள்

கடந்த ஆகஸ்ட் மாதம் சுமார் 6 இலட்சம் ரோஹிங்ய முஸ்லிம்கள் அரக்கான் மாநிலத்திலிருந்து பிடுங்கி வீசப்பட்டபோது அவர்கள் எல்லைப் புறமாக உள்ள பங்களாதேஷில் அகதிகளாய் வந்து குவிந்தனர். இப்போது பங்களாதேஷின் குடுபுலோன் மியன்மார் அகதிகளின் வெள்ளக்காடாய் காட்சியளிக்கின்றது.

60 பேரைப் பராமரிப்பதே பெரிய போராட்டமாகத் தெரியும் உலகத்திற்கு, 6 இலட்சம் மக்களை ஆறு மாதங்களாகப் பராமரித்தல் என்பது எவ்வளவு பாரிய சவால் என்பதை கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது.

தற்காலிக கூடாரங்களில், அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மந்தைக் கூட்டங்கள் போன்று அடைபட்டுக் கிடக்கின்ற அகதிகளின் வாழ்வு பாரிய நெருக்கடிக்கு முகம்கொடுத்து வருகின்றது. சுத்தமான குடிநீர், போதுமான உணவு, சுகாதாரமான இருப்பிடம், மருந்துத் தேவைகள், முதியோர், பச்சிளம் குழந்தைகள், பெண்கள் போன்றோரை விசேடமாக பராமரிப்பதற்கான வசதிகள் எதுவுமே போதுமானளவு இல்லாத நிலையில், ரோஹிங்யர்கள் பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

அவர்களில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள், காணாமல் போனவர்கள் குறித்த அக்கறைகள் எப்படிப் போயினும், உயிர் பிழைத்தவர்களைத் தக்கவைப்பதே பெரிய போராட்டமாய் உள்ளது.

பங்களாதேஷ் அரசாங்கம் அகதிகளுக்கான உதவித் தொகையில் பெருமளவைக் குறைத்து விட்டது. ஐ.நா. அகதிகள் அமைப்பும் போதுமான நிதி ஆதரவு இன்மையால் அகதிகளைப் பராமரிப்பது கடினமான சவால் என்று கைவிரிக்கின்றது.



ரோஹிங்ய அகதிப் பெண்களை பங்காளிகளோ அகதி ஆண்களை பங்காளிப் பெண்களோ திருமணம் செய்வதை தடைசெய்யும் சட்டமொன்றை பங்களாதேஷ் அரசு பாராளுமன்றில் நிறைவேற்றியுள்ளது. இப்புதிய சட்டத்தின்படி அது தண்டனைக்குரிய குற்றமாகும். இன்னொரு புறம் பங்களாதேஷில் நிலைகொண்டுள்ள ரோஹிங்ய அகதிப் பெண்களை பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளுக்கு விபச்சார தொழிலுக்காக கடத்திச் செல்லும் மாபியாக்கள், தமது வேட்டையை கச்சிதமாக நடத்தி வருகின்றனர்.

30 நாள் இடைவெளியில் 10 நாள் நடை தூரத்தில் கால்நடையாக வந்து, பயங்களாதேஷில் வெள்ளம் போல் திரண்டுள்ள அகதிகளை அரக்கானில் மீளக்குடியேற்றுவது குறித்து ஷெய்க் ஹஸீனாவின் அரசாங்கமும் ஆங்சான் சூகியின் அரசாங்கமும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றன. ஆனால், அது வெற்றியளிக்கும் அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டு, தமது இரத்த உறவினர்கள் தமது கண்களுக்கு முன்னாலேயே பலியாக்கப்பட்ட துயரத்தை மனக்கண் முன் கொண்டு வரும் ரோஹிங்யர்கள், கொலைகாரத் தேசமொன்றை நோக்கி மீண்டும் குடியேறும் மனோநிலையில் இருப்பார்களா என்பதுதான் இங்குள்ள மிகப் பெரிய கேள்வியாகும்.

இந்நிலையில், ஜனநாயகப் போராளியான சூகி, வெளிஉலகம் குற்றம் சாட்டுவது போன்று எங்கள் இராணுவம் ரோஹிங்யர்களுக்கு எதுவும் செய்துவிடவில்லை என்று மார்தட்டியவர். இப்போது சட்டவிரோத படுகொலைகள் மற்றும் தீவைப்புச் சம்பவங்களில் தனது இராணுவம் ஈடுபட்டதை ஒப்புக் கொண்டுள்ளார்கள் என்று அறிக்கை விடுகிறார்.

அவ்வாறாயின், மனித இனத்துக்கு எதிரான போர்க் குற்றங்களாகக் கருதப்படும் கடத்தல், கூட்டு வன்புணர்ச்சி, சொத்துக்களை அழித்தல், நேரடியான படுகொலைகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டு சுய ஒப்புதல் வழங்கும் இராணுவத்தை சூகி அரசாங்கம் நீதிமன்றில் நிறுத்த வேண்டும். உரிய தண்டனை வழங்க வேண்டும். அது அங்கே நடைபெறப் போவதில்லை.

ஏனெனில், மியன்மாரில் இருப்பது ஒரு புதுவகையான இராணுவ ஜனநாயகம். உலக வரலாற்றில் அரசியலமைப்புக்கு உட்பட்ட மன்னராட்சி, பங்குபற்றும் ஜனநாயகம், இராணுவச் சர்வதிகாரம் என்ற வகையில் பல்வேறு ஆட்சிமுறைகளை நாம் அறிந்து வைத்துள்ளோம். ஆனால், மியன்மாரில் இருப்பதோ மிக விசித்திரமான ஓர் ஆட்சி முறையாகும். 450 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள அந்நாட்டில், 10 வீதமான உறுப்பினர்கள் மக்களால் தெரிவுசெய்யப் படாது இராணுவத்தினரால் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள்தான் பாதுகாப்பு, உள்விவகாரம், எல்லைப் பாதுகாப்பு என்பவற்றுக்குப் பொறுப்பான அமைச்சுப் பதவிகளை வகிக்கிறார்கள்.

இதே இராணுவமே கடந்த ஆகஸ்டில் அரக்கான் முஸ்லிம் பிராந்தியத்தை கிராமம் கிராமமாகத் தீ மூட்டி எரித்தது. பல்லாயிரம் பெண்களை பதறப் பதற வேட்டையாடியது. குழந்தைகளைத் துப்பாக்கி முனையால் குத்தி விளையாடியது. இத்தனையையும் நிகழ்த்திய இராணுவத்தை சூகியினால் தண்டிக்க முடியாது என்பது மட்டுமல்ல, மியன்மார் அகதிகளை மீளக் குடியமர்த்துவதற்கும் அந்நாட்டின் இராணுவம் அனுமதிக்கப் போவதில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, திகிலூட்டப்பட்டுள்ள அகதிகள், அங்கே திரும்பிச் செல்வதற்கான வாய்ப்பும் இல்லை. அவர்களது நிலம் சாம்பல் மேடாகக் காட்சியளிக்கின்றது. வெறும் கையோடு நாடு திரும்பும் நிலையில் மக்கள் இல்லை. அவர்களது பொருளா தாரமும் கல்வியும் பூச்சிய நிலைக்கு வந்துள்ளது. 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆரம்ப நிலை கல்விக்கு அப்பால் உயர் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை தடுத்து வந்த அரசாங்கம் அம்மக்களை ஒரு மந்தைக் கூட்டமாகவே நடத்தி வந்தது.

எப்போது ஒரு சமூகம் கல்வியிலிருந்து தூரமாகின்றதோ, அல்லது தூரமாக்கப்படுகின்றதோ அந்தப் பொழுதிலிருந்து அதன் வீழ்ச்சி தொடங்குகின்றது. சமூகத் துயரமும் துவங்குகின்றது. இதற்கு மிகச் சோகமான உதாரணமே ரோஹிங்யர்கள்.

இன்று கல்வி இல்லாததனால் சமூக அபிவிருத்தியோ, பொருளாதார அபிவிருத்தியோ அவர்களுக்குச் சாத்தியமில்லை. தாம் அடக்கி ஒடுக்கப்படுகின்ற அவலத்தை சர்வதேச அரங்கில் வாதித்து வழிப்படுத்தவும் (Advocacy) அவர்களுக்கு முடியவில்ல. உலகப் பார்வையிலிருந்து ஒதுங்கியிருக்கின்ற ஒரு தேசதத்தின் முன்னேஇந்த மக்கள் மீது அரசு விதித்து வந்த கட்டுப்பாடுகளால் ஏற்கனவே அவர்களின் கல்வியும் பொருளாதாரமும் அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடந்தன. இப்போது ஒட்டுமொத்த கையறு நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

நில உரிமை இல்லை. நடமாடும் சுதந்திரம் இல்லை. அயல் நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு இல்லை என்பதனால் தேங்கிக் கிடந்த இந்தச் சமூகத்தின் அத்தனை கனவுகளும் உடைந்து நொறுங்கி விட்டன. அரசுக்குத் தெரியாமல் பங்களாதேஷ் எல்லையினூடாக நாட்டை விட்டு வெளியேறிய ஒரு சிறு கூட்டமே கல்வியைப் பெற்றது. அவர்களும் நாட்டுக்கு வெளியில்தான் வாழ்கின்றனர்.

உள்காயங்களை உரத்துச் சொல்ல முடியாத ஊமைகளாய் ஆக்கப்பட்டுள்ள இந்த சமூகம்தான் 'இந்தப் பூமிப் பரப்பில் கடுமையாக சோதிக்கப்படுகின்ற ஒரு சிறுபான்மை' என்ற வாக்கியம் மிகப் பொருத்தமானதுதான். ஆனால், இத்துணை துயரங்களுக்கும் பொறுப்பானவர்கள் யார். அவர்களுக்கான தண்டனை என்ன? மனித குலத்திற்கு எதிரான பாரிய குற்றங்களை இழைத்தவர்களுக்கு சர்வதேச சமூகம் வழங்கப் போகின்ற தண்டனை என்ன?

தனது உருவாக்கத்திலிருந்து அமெரிக்க சியோனிஸ வசதிகளுக்கு ஏற்ப உலகப் பிரச்சினைகளைக் கையாண்டு வரும் ஐ.நா. சபை, ரோஹிங்யர்கள் விவகாரத்தில் காத்து வரும் அமைதியின் அர்த்தம் என்ன? வெறுமனே அறிக்கை விடுவது தோடு அடங்கிப் போகும் அரசியல்தான் என்ன? குறைந்தபட்சம் ரோஹிங்ய பிரச்சினையின் ஆணிவேர்க் காரணங்களை இனங்கண்டு, மூலோபாய ரீதியிலேனும் அதற்கொரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதிலிருந்து பொறுப்புக் கூற வேண்டி ஐ.நா. விலகிச் செல்வது ஏன்?

இன்று குடுபுலோன் அகதிமுகாமில் அநாதரவாகவும் அபலைகளாகவும் அலைக்கழிக்கப்படும் அகதிகளின் பேரவலத்தைப் பார்க்கும் எவர்க்கும் நிச்சயம் இந்தக் கேள்விகள் எழும். ஏன்? மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு மனிதருக்கும் இக்கேள்விகள் எழுவது இயல்பானது.

சீனா, அமெரிக்கா, இந்தியா ஆகிய மும்மூர்த்திகளும்தான் ரோஹிங்ய நெருக்கடிக்குப் பின்னால் இருக்கின்றனர். குறிப்பாக, பீஜிங் மற்றும் வொஷிங்டனுக்கு இடையிலான அதிகாரப் போட்டி மற்றும் அரக்கான் முஸ்லிம் மாநிலத்தில் செறிந்து காணப்படும் இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பதிலுள்ள பேராசை என்பனவே அங்கிருந்து மக்கள் சூகியின் இராணுவத்தால் தூக்கியெறியப்படுவதற்கான பிரதான காரணமாகும்.

தற்போதைய சூழ்நிலையில், பீஜிங்கின் வல்லரசுக் கனவுக்குப் பலியாக்கப்படும் ஒரு சிறுபான்மையாகவே ரோஹிங்யர்கள் மாற்றப்பட்டுள்ளனர். ஆக, இந்த மும்மூர்த்திகளும் கூட ரோஹிங்க நெருக்கடிக்கு வகை கூற வேண்டிய அறக் கடப்பாட்டை ஏற்க வேண்டும்.

## பொஸ்பொரஸ் கரையினிலே...

### துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 26

# இராணுவக் களையெடுப்பும் அதன் பலாபலன்களும்

2016 ஜூலையில் துருக்கிய இராணுவம் மேற்கொண்ட சதிப் புரட்சி மக்களால் முறியடிக்கப்பட்டமை அந்நாட்டின் ஜனநாயகத்திற்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும். இந்த சதிமுயற்சியில் முன்னைய புரட்சிகளை விட இரண்டு முக்கிய வேறுபாடுகளை அவதானிக்கலாம்.

முதலாவது, இராணுவத்தின் அனைத்துத் தரப்பும் ஒருங்கிணைந்து சதிப் புரட்சியில் ஈடுபடவில்லை.

இரண்டாவது, மக்கள் அத்தகைய இராணுவத் தன்னாதிக்கத்தையும் ஜனநாயக விரோத கிளர்ச்சியையும் அமைதியாக ஏற்றுக்கொண்டு, அடங்கிப் போகும் நிலையில் இருக்கவில்லை.

அதனால்தான் மக்கள் வீதிக்கு இறங்கி இராணுவத்தின் தளபாடங்களைக் கைப்பற்றியதோடு, படைவீரர்களுக்கு சாட்டையடி வழங்கினர். இந்த அடி இராணுவ வீரர்களின் முதுகில் விழுந்த அடி மாத்திரமல்ல, கமாலிஸத்தின் மீதும் கொடூரமான மதச்சார்பின்மையின் மீதும் விழுந்த பேரிடியாகும். ஒரு நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் மதச்சார்பற்ற இராணுவச் சர்வதிகாரத்தின் மீது மக்கள் தொடுத்த இறுதித் தாக்குதலாகவும் இதனைக் கருதலாம்.

பத்ஹுல்லாஹ் குலான் அரசுக்குள் நடத்திய இணை அரசு (Parallel) பலமானது என்பதை நிரூபிக்க முயன்று தோற்றுப் போன சதிப் புரட்சியாகும். அதேவேளை, கருச் சிதைக்கப் பட்ட இந்த சதிப் புரட்சியினால் அர்தூகான் அரசுதான் இறுதியில் வென்றது. அதன் நீடிப்புக்கான உத்தரவாதம் மக்கள் ஆதரவாக விரிவடைந்தது. இதனால் தான் ''இராணுவத்தைத் தூய்மைப்படுத்துவதற்கு இறைவன் அளித்த அருள்'' என்று சதிப் புரட்சியை அர்தூகான் குறிப்பிட்டிருந்தார்.

துருக்கியின் பொருளாதார சமூக வளர்ச்சிக்கு முதலில் தேவை ஜனநாயக ஸ்திரம். ஜனநாயக உறுதிப்பாட்டுக்கு முதற் தடை புரட்சி மனப்பான்மை கொண்ட துருக்கியின் இராணுவம். இராணுவச் சர்வதிகாரத்தை முழுமையாகத் தோற்கடிக்காதவரை துருக்கியை ஐரோப்பாவின் நோயாளி என்ற நிலையிலிருந்து மீட்டெடுக்க முடியாது. எனவே, இத்தகைய புரட்சியை அர்தூகான் அரசு கவனமாகத் தோற்கடித்தமையும் அரசியல் ஸ்திரப்பாட்டுக்குக் கிடைத்த பெரிய வெற்றியாகும்.

இராணுவத்தின் உளவியலில், இது ஏற்படுத்திய பின்னடைவும் முக்கியமானது. எஞ்சியிருந்த ஜனநாயக விரோதிகளை களையெடுக்கும் வாய்ப்பையும் இந்த சதிப் புரட்சிதான் அர்தூகான் அரசுக்கு வழங்கியது.

புரட்சியைத் தொடர்ந்து சாதாரண சிப்பாய்கள் உள்ளிட்டு 3000 இற்கும் அதிகமான இராணுவ அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் கணிசமானோர் பதவி விலக்கப்பட்டனர். தற்போது துருக்கியின் இராணுவம் முழுவதும் களையெடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள சில ஜெனரல்களும் அட்மிரல்களும் இன்னும் குலான்வாதிகளாக இருக்கின்றபோதும், அவர்களால் எதுவும் செய்ய முடியாது. வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டு உள்ளே புழுங்கிக் கொண்டு இருக்க வேண்டியதுதான். நீதிமன்றங்களில் நீதியரசர்களாகப் பணியாற்றிக் கொண்டு இராணுவப் புரட்சிக்கும் கமாலிஸத்திற்கும் ஆதரவாக இருந்த பலரும் பதவி நீக்கப்பட்டனர்.

சதிப் புரட்சி கருச் சிதைக்கப்பட்டமையினால் நேர்ந்த நன்மைகள் ஏராளம். அரசியல் ஸ்திரம், வெளிநாட்டு முதலீடு, உல்லாசப் பயணிகளின் பெருக்கம் என சாதகமான விளைவுகளின் பட்டியல் நீண்டு செல்கின்றது.

துருக்கியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் குர்திஷ் தொழிலாளர் கட்சி, துருக்கி-சிரிய எல்லையில் துருக்கியின் இறைமைக்கு அச்சுறுத்தல் விடுத்து வரும் குர்திஷ் பிஷ்மார்க் போராளிகள் அவ்வப்போது துருக்கிய நகர்களில் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வரும் ஐசிஸ் பயங்கரவாதிகள் என பாதுகாப்புக்கு சவால் விடுக்கும் அனைத்து இராணுவப் பயங்கரவாதங்களையும் ஒழிக்கும் உற்சாகத்தை அர்தூகான் அரசுக்கு இந்தப் புரட்சிதான் வழங்கியது.

உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை பெருக்கெடுப்பதனால் பொருளாதாரம் வேகமாக வளர்வதற்கும் சதிப் புரட்சியே வழிகோலியது. இப்புரட்சியினால் அர்தூகான் கவிழ்ந்து விடுவார் என்று உள்ளே குதூகலித்துக் கொண்டிருந்தவர்கள், அவர்களுக்கு பக்க தூணையாக இருந்த அமெரிக்கா, இஸ்ரேல் பொன்ற சக்திகள் அனைவரும் அர்தூகான் அரசாங்கத்தின் வளர்ச்சியைக் கண்டு ஏமாற்றமடைந்துள்ளனர்.

குலானை வழிநடாத்திச் சென்ற சியோனிசம் சதிப் புரட்சியும் அர்தூகானின் அரசியல் நாடகம் என்று தோல்வியை ஒப்புக்கொள்ள மறுப்பது ஒன்றும் ஆச்சரியமில்லை. மொத்தத்தில் ஜூலை சதிப் புரட்சி துருக்கிக்கு விளைவித்த நன்மைகளே அதிகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு இந்தச் சுமை?

## வாக்காளர்களின் கவனத்திற்கு

• ஹெட்டி ரம்ஸி

பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தொடர்ந்து இந்நாட்டின் தேசிய, மாகாண பிரதேச அடிப்படையிலான உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 9171 ஆக அதிகரிக்கவுள்ளது. இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரிவுசெய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 8346 ஆக எகிறியுள்ளது. தொகுதிவாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் அமைந்த கலப்புத் தேர்தல் முறையில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதே இவ்வதிகரிப்புக்குக் காரணமாகும்.

இலங்கையிலுள்ள 9 மாகாண சபைகளிலும் காணப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் 600 ஆகும். பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225. இதன்படி, முழு உறுப்பினர்களினதும் எண்ணிக்கை 9171 ஆகும். இலங்கையின் சனத்தொகை 2 கோடியே 10 இலட்சமாகும். இதன்பிரகாரம், இலங்கையின் சனத்தொகையில் 2400 பேருக்கு ஒரு உறுப்பினர் உள்ளார். எமது அயல் நாடான இந்தியா இலங்கையை போன்று 60 மடங்கு விசாலமானது. இந்தியாவின் சனத்தொகை 1.324 பில்லியன்களாகும். பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 545 ஆகும். 37 மாநில சபைகளில் 580 உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, இந்தியாவின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 1125 ஆகும்.

அத்துடன், இந்தியா தொடர்பில் இங்கு முக்கியமானதொரு விடயத்தை குறிப்பிட வேண்டும். அதாவது, இலங்கையில் முன்னர் கிராமிய சபை (கம்சபா) முறை காணப்பட்டது போன்று இந்தியாவில் பஞ்சாயத்து முறை நிலவுகிறது. கிராமிய தலைவர்கள் தன்னார்வ அடிப்படையிலேயே பஞ்சாயத்து முறையில் சேவை புரிகிறார்கள். ஆனால், இலங்கையின் நிலை அப்படியல்ல. எம்மைப் போன்றதொரு சிறிய நாட்டினால் தாக்குப் பிடிக்க முடியாத அளவில் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகிறார்கள். ஆனால், நாடு அபிவிருத்தியடைவதுமில்லை. மக்கள் வாழ்வு செழிப்படைவதுமில்லை. இலங்கை போன்றதொரு நாட்டிற்கு இவ்வளவு அதிகமான உறுப்பினர்களை பராமரிப்பது என்பது இலகுவான காரியமல்ல.

இங்கு முதலில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சலுகைகளை ஆராய்வது பொறுத்தம் என நினைக்கின்றேன். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களின் சம்பளத்தொகை வறுமாறு.

### பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தபவர்களுக்கான சலுகைகள்

| பதவி | மாதாந்த சம்பளம் (ரூபா) |
|---|---|
| ஜனாதிபதி | 75,000.00 |
| பிரதமர் | 71,500.00 |
| சபாநாயகர் | 68,500.00 |
| அமைச்சர்கள் | 65,000.00 |
| எதிர்கட்சித் தலைவர் | 65,000.00 |
| பிரதியமைச்சர் | 63,500.00 |
| பிரதி சபாநாகயர் | 63,500.00 |
| பிரதி தெரிவுக் குழுத் தலைவர் | 63,500.00 |
| பா. உறுப்பினர்கள் | 54,285.00 |

ஐந்து வருடங்கள் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிகளுக்கு ஒவ்வூதியக் கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது. அரச பணியில் ஓய்வூதியக் கொடுப்பனவை பெறுவதற்கு 20 வருட சேவைக் காலத்தை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். ஒழுக்காற்று விசாரணையோ அல்லது ஒழுக்கச் சீர்கேடான விடயமொன்று நிரூபிக்கப்பட்டால் அரச ஊழியரின் ஓய்வூதியக் கொடுப்பனவு தற்காலிகமாகவோ அல்லது முழுமையாகவோ இல்லாமல் போவதற்கான வாய்ப்புள்ளது. அரசாங்க சேவையில் அந்தந்த நியமனங்களுக்கான தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். அரசியலில் பிரவேசிப்பதற்கான தகைமைகள் பற்றிக் குறிப்பிடப்பட்ட எந்தவொரு ஆவணமோ சட்டமோ இல்லை.

வாழ்க்கையில் பாடசாலைப் பக்கம் எட்டிப்பார்க்காவிட்டாலும் கூட பா. உறுப்பினராவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஓய்வூதியக் கொடுப்பனவுகள் கிடைக்கின்ற அரசாங்க ஊழியர்களை போன்று ஒழுக்காற்று விசாரணை, சேவை இடைநிறுத்தம், குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் எதுவும் பா. உறுப்பினர்கள் விடயத்தில் செல்லுபடியாகாது. பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொண்டாலும் கலந்து கொள்ளாவிட்டாலும் (3 மாதங்கள் பாராளுமன்றம் செல்லாமல் இருந்தால் அதற்கான அனுமதி பெற வேண்டும்) எவ்வித தடங்கலும் இன்றி ஓய்வூதியக் கொடுப்பனவு கிடைக்கும்.

தற்பொழுது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தோல்வியடைந்துள்ள 700 இற்கும் அதிகமானவர்களுக்கு ஓய்வூதியம் கிடைத்துள்ளன. இதில் 90 வீதமானவர்கள் 5 வருட காலம் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர். 1977ஆம் ஆண்டு 1ஆம் இலக்க பாராளுமன்ற ஒய்திய சட்டத்தின் பிரகாரமே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவு கிடைத்துள்ளது.



1982 ஆம் ஆண்டு இச்சட்டம் திருத்தப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் விதவைப் பெண்களுக்கும் ஓய்வூதிக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டம் திருத்தப்பட்டு விதவைப் பெண்களின் பிள்ளைகளுக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, எம்.பிக்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு மாதமொன்றிற்கு சுமார் 150 இலட்சம் ரூபாவுக்கு அதிக தொகை செலவு செய்யப்படுகிறது. வருடமொன்றிற்கு 180 கோடி ரூபாவுக்கும் அதிக தொகை இதற்காக வேண்டி செலவழிக்கப்படுகிறது. ஐந்து வருட காலம் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினரொருவருக்கு அவரது சம்பளத்தில் மூன்றில் ஒன்றும், 5 முதல் 15 வருடங்கள் வரை எம்.பியாக இருந்த ஒருவருக்கு ஓய்வூதியமாக சம்பளத்தில் மூன்றில் இரண்டு தொகை வழங்கப்படும். இது தவிர எம்.பி ஒருவருக்கு பொழுது போக்குச் செலவாக மாதாந்தம் 1000 ரூபாவும், வாகனக் கொடுப்பனவாக 10,000 ரூபாவும் வழங்கப்படுகின்றது. பாராளுமன்றக் கூட்டத்தொடரொன்றில் கலந்து கொள்வதற்காக வேண்டி நாளொன்றுக்கு 2500 ரூபா வழங்கப்படுகின்றது. ஒரு மாதத்தில் 8 நாட்கள் பாராளுமன்றம் கூடுகின்றது. இதன்படி, ஒரு மாதத்தில் 8 நாட்களும் பாராளுமன்றம் வந்தால் 20,000 கிடைக்கின்றது.

மேல் மாகாணத்தை சேர்ந்த அமைச்சரொருவரின் பெற்றோல் வாகனத்திற்கு மாதாந்தம் 50,000 ரூபாவும், டீசல் வாகனமொன்றிற்கு மாதாந்தம் 20,000 ரூபாவும் செலுத்தப்படுகிறது. பிரதியமைச்சர் ஒருவரின் பெற்றோல் வாகனத்திற்கு மாதாந்தம் 40,000 ரூபாவும் டீசல் வாகனத்திற்கு 20,000 ரூபாவும் வழங்கப்படுகிறது. மேல்மாகாணத்திற்கு வெளியிலுள்ள அமைச்சர் ஒருவரின் பெற்றோல் வாகனத்திற்கு 75,000 ரூபாவும், டீசல் வாகனத்திற்கு 30,000 ரூபாவும் கொடுக்கப்படுகிறது. அமைச்சர் ஒருவருக்கும் பிரதியமைச்சர் ஒருவருக்கும் இரண்டு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைச்சர்களுக்கு 62,500 அமெரிக்க டொலர் பெறுமதியான தீர்வை வரியற்ற வாகனமொன்றை பெற்றுக்கொள்ளவும் முடியும். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களை தவிர ஏனைய 99 வீதமான எம்.பிக்களும் தீர்வை வரியற்ற வாகனங்களை பெற்றுள்ளனர்.

கடந்த வருடத்தில் 5 அமைச்சர்கள் 2 இராஜாங்க அமைச்சர்கள் உள்ளடங்கலான 9 பேர் 33 கோடி ரூபா மேலதிக தொகையை பெற்றுள்ளனர். அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்களை கொண்டு வருவதற்கு கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் 85 கோடி ரூபா மதிப்பீட்டு தொகை பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்டது. அமைச்சர்களுக்கு மாத்திரமல்லாமல் அவர்களது செயற்குழுக்களுக்கும் விஷேட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அமைச்சரொருவரின் செயற் குழுவில் 15 பேர் உள்ளனர். ஒரு அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளருக்கு மாதமொன்றிற்கு 100 மணி நேர மிகை ஊதியக்கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

இது தவிர, அவரது வாகனத்திற்கு மாதமொன்றிற்கு 218 லீற்றர் பெற்றோல் நிரப்புவதற்கு 17,440 ரூபாவும், டீசல் வாகனத்திற்கு 264 லீற்றர் நிரப்ப 13,200 ரூபாவும் வழங்கப்படுகின்றது. அமைச்சரொருவரின் செயற்குழுவுக்கு 5 வாகனங்களும் பிரதியமைச்சர் ஒருவரின் செயற்குழுவிற்கு 3 வாகனங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு அமைச்சரின் அலுவலகத்திற்கு 2 தொலைபேசிகளும் அவற்றுக்கான மாதாந்த கொடுப்பனவாக 20,000 ரூபாவும் வழங்கப்படுகிறது. அமைச்சர் ஒருவரின் வீட்டிற்கு 2 தொலைபேசிகளும் அதற்கான மாதாந்த கொடுப்பனவாக 10,000 ரூபாவும், கையடக்க தொலைபேசிக்கு 4000 ரூபாவும் கொடுக்கப்படுகிறது.

இவை தவிர, பெக்ஸ், இணைய வசதியுடன் கூடிய கணினி மற்றும் புகைப்பட பிரதி இயந்திரமொன்றும் வழங்கப்படும். பிரதியமைச்சரின் 2 அலுவலக தொலைபேசிகளுக்கும் 10,000 ரூபா மாதாந்த கொடுப்பனவும், வீட்டிலுள்ள 2 தொலைபேசிகளுக்கும் 5000 ரூபா மாதாந்த கொடுப்பனவும் கையடக்க தொலைபேசிக் கொடுப்பனவாக 2000 ரூபாவும் வழங்கப்படும்.

இதேவேளை, எம்.பி ஒருவரின் செயற்குழுவில் 5 பேர் உள்ளனர். அவர்களுக்கு 2 தொலைபேசிகளும் வாகனமொன்றும், மடிக்கணனியொன்றும், கையடக்க தொலைபேசியொன்றும், போடோகொபி இயந்திரமொன்றும் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு, 350,000 ரூபா பெறுமதியான அலுவலக பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் 20 இலட்சம் ரூபா பெறுமதியான காப்புறுதியும் கிடைக்கிறது. அவசர விபத்தொன்றில் இறந்தால் 50 இலட்சம் ரூபா நஷ்டஈடும் வழங்கப்படுகிறது. மூக்குக் கண்ணாடிக்கு 3 வருடங்களுக்கு ஒரு முறை 5000 ரூபா கிடைக்கிறது. வருடமொன்றிற்கு பிரதேச அபிவிருத்திக்காக வேண்டி 50 இலட்சம் ரூபா பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கப்படுகிறது.

அத்துடன் அலுவலக வாடகையாக மாதாந்தம் ஒரு லட்சம் ரூபா வழங்கப்படுகிறது. ஒரு வீடு வாடகைக்கு பெறப்படுமாக இருந்தால் மாதாந்தம் 50,000 ரூபா வழங்கப்படும். இதுதவிர, அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களும் உள்ளன. தமது பிள்ளைகளை புகழ்பெற்றதொரு பாடசாலையில் சேர்க்கும் போது சலுகைகள் கிடைக்கின்றன. வெளிநாட்டு பயணங்களும் உள்ளன. இச்சகல வசதிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைக்கின்றன.

2016ஆம் ஆண்டு 97 நாட்கள் பாராளுமன்றம் கூடியுள்ளதுடன், அதற்காக வேண்டி 162 கோடி ரூபா நிதி செலவாகியுள்ளது. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பிரபுக்களுக்கான கவனிப்பு, வீதித்தடைகளின்றி பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பு, பாராளுமன்ற வரப்பிரசாதங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு விஷேட சலுகைகளும் இவர்களுக்கு உள்ளன.

இதேவேளை மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் மாதாந்த சம்பளமும் கொடுப்பனவும் 93,000 ரூபா அகும். இதில் அடிப்படை சம்பளம் 27,642 ரூபாவும், எரிபொருள் செலவாக 23,750 ரூபாவும் உள்ளடங்கும். இது தவிர காரியாலய கொடுப்பனவாக மாதாந்தம் 50,000 ரூபா வழங்கப்படுகிறது. அலுவலகத்தில் பணியாற்ற 3 சேவையாளர்கள் உள்ளனர்.

சாதாரணமாக ஒரு மாகாண சபை உறுப்பினருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன் சேர்த்து மாதாந்தம் 140,000 ரூபா கிடைக்கின்றது. 9 மாகாண சபைகளிலுள்ள 600 உறுப்பினர்களுக்கு மாதாந்தம் 8 கோடி ரூபா செலவு செய்யப்படுகிறது.

இம் மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரிவுசெய்யப்படுகின்ற 8346 உறுப்பினர்களுக்கும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக வேண்டி 156 கோடி ரூபா செலவாகும் என உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. இத்தொகையானது 4480 உறுப்பினர்களுக்கு செலவு செய்த தொகையையும் விட 84 கோடி ரூபா அதிகமாகும் என தெரிவிக்கப்படுகிறது. தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களுக்காக வேண்டிய இவ்வளவு அதிகமான தொகை செலவு செய்யப்படுகிறது. மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி முறையில் நல்ல பக்கமும் உள்ளது மோசமான பக்கமும் உள்ளது. எனினும் நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இவ்வளவு அதிகமான உறுப்பினர்களுக்கு சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள் வழங்குவது நாட்டிற்கு மேலும் சுமையாகவே அமைகிறது.

இலங்கையின் வெளிநாட்டுக்கடன் 64.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இலங்கை நாணயத்தில் ஒரு லட்சம் கோடி ருபாவாகும். இலங்கை மத்திய வங்கி குறிப்பிடுவதன் படி, சமுர்த்தி, திவிநெகும, சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் 2016ஆம் ஆண்டு 1.41 மில்லியன் குடும்பங்களுக்கு 40.7 பில்லியன் ரூபா உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியின் 2016ஆம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம், செலுத்தப்படாமல் உள்ள அரச கடன்களின் பெறுமதி 9,387,303 மில்லியன் ரூபாக்களாகும்.

இவ்வளவு அதிகமான கடன் சுமைக்கு மத்தியில் அரசியல்வாதிகளை பராமரிப்பதற்கு இன்னும் பல கோடிக் கணக்கிலான நிதியை செலவு செய்ய வேண்டியுள்ளது. விஷேடமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்கள் எண்ணிக்கை மக்களின் தேவைப் பிரகாரமே அதிகரிக்கப்படுகின்றது. இதுவொரு அரசியல்பணி மாத்திரமே. உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை இரு மடங்கால் அதிகரித்திருப்பதன் மூலம் அரசியல்வாதிகளுக்கு செலவுசெய்கின்ற தொகையை இன்னும் அதிகரிக்கச் செய்துள்ளது.

### உள்ளூராட்சி மன்றங்கள்

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரிவுசெய்யப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 4006ஆல் அதிகரிக்கிறது.

இதன்படி, மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் 8500 ஆகும். 276 பிரதேச சபைகளது உறுப்பினர்களின் எண்ணிக்கை 3624 இலிருந்து 6853 வரையிலும், 41 நகர சபைகளது உறுப்பினர்களின் எண்ணிக்கை 417 இலிருந்து 729 வரையிலும் 26 மாநகர சபைகளது உறுப்பினர்களின் எண்ணிக்கை 460 இலிருந்து 836 வரையிலும் அதிகரிக்கவுள்ளது.

அதிகரிக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எந்தவொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் இட வசதிகளோ மண்டப ஒழுங்குகளோ இல்லை. இம்முறை தேர்தலில் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருமடங்காக அல்லது அதற்கு அண்மித்த தொகையில் அதிகரிக்கும். எனவே இவர்களுக்கான செலவீனங்களும் இரட்டிப்பாகும்.

இந்நிலையில், பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு மாதாந்தம் 15,000 ரூபா வழங்கப்படுகிறது. மாநகர சபை, நகர சபை உறுப்பினரொருவருக்கு 20,000 ரூபா வழங்கப்படுகிறது. இதற்கு முன்னர் 417 நகர சபை உறுப்பினர்களுக்கு மாதாந்தம் 83 இலட்சம் ரூபா செலவழிக்கப்பட்டது. தற்பொழுது அந்தத் தொகை 145 இலட்சம் வரை அதிகரிக்கவுள்ளது. 460 நகர சபை உறுப்பினர்களுக்கு மாதாந்தம் 92 லட்சம் ரூபா வழங்கப்பட்டது. தற்பொழுது 836 நகர சபை உறுப்பினர்களுக்கு 167 லட்சம் ரூபா செலவுசெய்ய வேண்டியுள்ளது. இதன்படி, மாநகர சபை உறுப்பினர்களின் கொடுப்பனவுகளுக்காக வேண்டி, வருடாந்தம் செலவழிக்கின்ற 1104 லட்சம் ரூபாவை 2004 லட்சம் ரூபா வரையில் அதிகரிக்க வேண்டியுள்ளது. எனவே 900 லட்சம் அதிகமாகச் செலவாகிறது.

நகர சபை உறுப்பினர்களின் கொடுப்பனவுகளுக்காக வேண்டி வருடாந்தம் செலவழிக்கின்ற 996 லட்சம் ரூபாவை 1740 லட்சம் வரை அதிகரிக்க வேண்டியுள்ளது. 744 லட்சம் ரூபா மேலதிகமாகச் செலவழிகிறது. பிரதேச சபைகளின் நிலையும் அப்படித்தான். இதுவரை பிரதேச சபைகளின் 3624 உறுப்பினர் களுக்கு மாதாந்தம் 543 லட்சம் செலவு செய்யப்பட்டது. அது இம்முறை 1029 லட்சமாக அதிகரிக்கின்றது. இதன்படி வருடமொன்றிற்கான பிரதேச சபை உறுப்பினர்களின் கொடுப்பனவு 3516 லட்சத்திலிருந்து 12348 லட்சமாக அதிகரிக்கின்றது.

இவ்வகையில் கணக்குகளை ஒவ்வொன்றாக அடுக்கிக்கொண்டு செல்லலாம். அவற்றையெல்லாம் இங்கு குறிப்பிடுவது முக்கியமல்ல. இம்முறை உறுப்பினர்களின் அதிகரிப்புக்கேற்ப அவர்களுக்கான மேற்படி செலவீனங்களும் அதிகரித்துள்ளன. பொது மக்களே இந்தச் சுமையை சுமக்க வேண்டும். இலங்கை வரலாற்றில் மக்கள் பிரதிநிதிகளுக்கு இப்படி அதிகளவான நிதிச் செலவு செய்யப்பட்டதன் மூலம் அவர்களது பங்களிப்புக்களால் நாடு முன்னேற்றமடைந்ததாகவோ, மக்கள் வாழ்வு மேம்பட்டதாகவோ எங்கும் பதிவாகவில்லை. அவர்களும் அவர்களைச் சூழவுள்ளோருமே முன்னேற்றமடைந்தார்கள். எனவே, மக்கள் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமது தொகுதிக்கு பொறுப்புச் சொல்லக்கூடிய, சிறந்த ஒருவரையே தெரிவுசெய்ய வேண்டும். மக்கள் இந்த விடயத்தில் கவனமாக செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• **அனஸ் அப்பாஸ்**




கணக்காளரான மர்ஹூம் A.C.M. ரவூப் - S.F. பஹ்ரியா தம்பதிகளின் இறுதிப் புதல்வர் M.R.M. நிஸ்பஹ்றான் அண்மைக் காலமாக சுயாதீன தொலைக்காட்சி நேயர்கள் மத்தியில் மிகவும் பிரசித்தம் பெற்று வருகின்றார். நேயர்கள் மட்டுமன்றி பல மேடைகளைக் கண்ட நிகழ்ச்சி நடுவர்களையே தனது கணித நுட்பத் திறனாலும், கணிப்பானை விட மிக விரைவான, அரை செக்கனுக்கும் குறைவான நேர பதில்களாலும் மெளனிக்க வைக்கின்றார்.

நாவலப்பிட்டிய சென்மேரிஸ் கல்லூரியில் தனது கல்வித் தேவையை பூர்த்தி செய்த நிஸ்பஹ்றான் தன்னுள் இருந்த திறமையை அடையாளம் கண்ட முதல் சந்தர்ப்பம் தனது வகுப்பறையில் இடம்பெற்ற வாய்ப்பாடு கேள்வி-பதில் போட்டியில் முதலிடம் பெற்று மகிழ்ந்த நிகழ்வாகும். 2013 ஆம் ஆண்டு புதிய இலகு கணித நுட்பத்தை கண்டுபிடித்து, இதற்கு கணித ஆசிரியையின் கரங்களால் விஷேட சான்றிதழும் பெற்றார் நிஸ்பஹ்றான்.

க.பொ.த (சா/தர) பரீட்சையில் கணித பாடத்தில் 'A' சித்தி பெற்ற நிஸ்பஹ்றான், மனக் கணித நிபுணர்களைப் பற்றித் தேடவும், மனக் கணித நுட்பங்களை ஆராயவும் சுமார் ஒரு வருட காலத்தை ஈடுபடுத்தினார்.

2014 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஆர்த்தபெஞ்சமின் அவர்களின் மனக் கணித காண்பித்தல் நிகழ்ச்சி மற்றும் அவர்களது நுட்பங்களை ஒப்பிடுகையில் மனக் கணித திறனானது வெறும் நுட்பத்தோடு மாத்திரமல்லாமல் தொடர்ச்சையான கடும் பயிற்சியின் பிரதிபலன் என்பதை அறிந்து, ஆறு மாதங்கள் மனக் கணித பயிற்சியில் தன்னை ஈடுபடுத்தினார் நிஸ்பஹ்றான்.

பின்னர் நாவலப்பிட்டிய நகரில் தனது திறமைகளை வெளிக்காட்டிய நிஸ்பஹ்றான், இலத்திரனியல் ஊடகங்களிலும் (ரூபவாஹினி தேசிய தொலைக்காட்சி அலைவரிசை) மனக் கணித நிகழ்ச்சிகளை காண்பித்து வெளி உலகுக்கு தனது திறனை வெளிக்காட்டினார்.

எனினும், அப்போது பொருத்தமான தளம் அமையாமை, குறைவான வாய்ப்புக்கள் போன்ற அசெளகரியங்களை எதிர்கொண்டார்.

பின்னர், 2017 ஆம் ஆண்டு "Youth With Talent" "Generation Next" போன்ற தொலைக்காட்சி போட்டி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மெருகேறிய தனது திறனை மிளிரச் செய்த நிஸ்பஹ்றானின் திறமை வேகமாக பாரெங்கும் பரவ ஆரம்பித்தது. யூடியுப் தளத்திலும் இவரது காணொளி பதிவாகியுள்ளதால் ஆச்சர்யத்தின் விளிம்பில் இருந்து கொண்டு ஒரு அதிசய மனிதனை புகழ்வது போன்று கருத்துக்களும், பாராட்டுக்களும் அவரை நோக்கிக் குவிகின்றது.

"மூத்த சகோதரன் நிஸ்மி, அமானா வங்கியில் பணிபுரிகின்றார். இரண்டாமவர் நிஷாட், கொழும்பில் பட்டயக் கணக்காளர். தையல் வேலைகளில் ஆர்வமுள்ளவராக மூன்றாவது சகோதரி நிரோஷா காணப்படுகின்றார்" என தனது உடன்பிறப்புக்களை அடையாளப் படுத்துகின்றார் நிஸ்பஹ்றான்.

கணிப்பு முறைகளை பயிற்சி செய்யும் கருவிகள் தயாரித்தல், புதிய மனக் கணிதம் சார் நுட்ப கண்டுபிடிப்பு, "Magical Maths Trick" நுட்ப பயிற்சி மூலமான அரை இறுதி சுற்று வெளிப் படுத்தல்கள், 2 முதல் 5 வரையான இலக்கங்கள் கொண்ட எண்களை மனதால் குறுங்காலத்தில் கணித்தல், வருடத்துடன் பிறந்த திகதியைக் கூறினால் வேகமாக பிறந்த தினம் என்ன, நாள் என்ன என்பதை கணித்தல், 3 இலக்கங்கள் கொண்ட எண்களை 2 இலக்கங்கள் கொண்ட இலக்கங்களால் வகுத்தல், விடை தசமத்தில் வந்தாலும் மிக நேர்த்தியாகக் குறிப்பிடல் என்பன இவரது அபார திறன்கள்.

எதிர்காலத்தில் இந்நுட்பத்தை மாணவர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் முகமாக தேசிய அளவில் பயிற்றுவித்து போட்டிகளை நடாத்த எண்ணம் கொண்டுள்ளார் நிஸ்பஹ்றான். மேலும், கணிதம் சார் பல உபகரணங்களை தயாரிப்பதுடன், கணித விளையாட்டுக்களையும் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளார். "Asia's Got Talent" சர்வதேசப் போட்டியில் பங்கெடுப்பது மட்டுமன்றி, 5 Digits Multiplication 2 Numbers பிரிவில் உலக சாதனையை நிலை நாட்டவும் உறுதி பூண்டுள்ளார் நிஸ்பஹ்றான்.

Multi Culculation Solution - மனதால் கணித்தல், உ+ம்: $23 \times 684 + 789 + 47^2/79 = ?$

இவ்வாறான கணிப்புக்களுக்கே செக்கனுக்கும் குறைவான நேரத்தில் நிஸ்பஹ்றான் பதில் சொல்கிறார்.

தனது வெற்றிக்கான சூத்திரங்களை,

INNOVATIVE - புதுமை

EXPRESSION - ஆச்சர்யப்படத்தக்க

UNIQUE - தனித் தன்மையாக

குறிப்பிடுவதோடு, ஒருவரின் திறமை CUTE ஆக இருக்க வேண்டும் என்கின்றார்.

C - Creativity (புத்தாக்கம்)

U - Useful (பயன்மிக்கது)

T - Talent (திறன்மிக்கது)

E - Expression (ஆச்சர்யப்படத்தக்கது)

ஆசிரியை H.M. மஸீத்னா, ஊக்குவித்த ஏனைய ஆசிரியர்கள், கண்டி மாவட்ட வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்) திரு. தமிழ்செல்வன் ஐயா, கல்லூரி அதிபர் S.H.M. பவ்சான் சேர், திரு. R.M. முனாஸ் (SLBC Announcer - Old), அனுசரணையாளர் திரு. இக்ராம், ஊர் அரசியல்வாதிகள், நண்பர்கள், குடும்பத்தார், இந்நாட்டு மக்கள், Youth with Talent இன்' பொறுப்பாளர்களான ITN மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கும், மீள்பார்வை பத்திரிகைக்கு தகவல் கொடுக்க உதவிய சகோ. இஸ்பஹ்றான் இற்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றார் நிஸ்பஹ்றான்.

1994 ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி பிறந்த நிஸ்பஹ்றான் இன்னும் 7 - 8 மாதங்களில் கின்னஸ் சாதனைக்கான தனது முன்னெடுப்புக்கு காலம் குறித்துள்ளார். 2010 ஆம் ஆண்டு அமெரிக்கரொருவர் 76 செக்கனில் படைத்த சாதனையை முறியடிக்க தன்னால் முடியும், ஆனால், கின்னஸ் குழுவை இங்கு வரவழைக்க தேவையான நிதியை பெற்றுக்கொடுக்க சமூகம் முன்வர வேண்டும் என்று ஊக்கத்துடன் கூறுகின்றார்.

இதுவரை தான் வெளிப்படுத்திய மனக் கணித நுட்ப வித்தைகளை விட வித்தியாசமானதொன்றை மார்ச் மாதம் 10 ஆம் திகதி தொலைக்காட்சியில் இடம்பெறும் Youth with Talent இறுதிச் சுற்றில் வெளிப்படுத்தி முழு தேசத்தினதும் பிரம்மிப்பை இன்னும் அதிகரிக்க அமைதியாக பயிற்சி பெறுகின்றார் நிஸ்பஹ்றான். "இந்த தேசத்திற்கே அதிஷ்டம் இவர்" என ஏற்கனவே பலமுறை மொழிந்தன அந்நிகழ்ச்சி நடுவர்களின் நாவுகள்.

இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணையத்தில் "Manual Mind Calculator" "Easy Mathemetical Techniques" "Set the Coordinate" ஆகிய மூன்று சாதனைகளை நிகழ்த்திய பெருமைக்குரிய பெயராக 'நிஸ்பஹ்றான்' ஜொலிக்கிறது.

---

• **இப்னு மரைக்கார்**

# பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டிய காலம்

[illegible] கிராமம், நகரம் மற்றும் மாநகர மட்ட மக்களின் பொதுத் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் பணிகளை உள்ளூராட்சி மன்றங்கள் தான் மேற்கொள்கின்றன. அதாவது மத்திய, மாகாண அரசாங்கங்கள் ஊடாக முன்மொழியப்பட்டு முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்களைக் கிராம, நகர மற்றும் மாநகர மட்டத்திற்கு கொண்டு சேர்ப்பது இந்த உள்ளூராட்சி மன்றங்கள் தான். அத்தோடு கிராம, நகர மற்றும் மாநகர மட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளும் இம்மன்றங்களின் ஊடாகவே செயலுருப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு இந்நாட்டில் பெரும் பணியாற்றிவரும் 341 உள்ளூராட்சி மன்றங்களதும் பதவிக்காலம் முடிவுற்று பல மாதங்களாகியுள்ள நிலையில் அவற்றுக்கு புதிதாக மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடாத்தப்படவிருக்கின்றது. இத்தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக் கொண்டதோடு தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளையும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்டு வருகின்றது.

எனினும் இம்முறை நடைபெறவிருக்கும் இத்தேர்தலானது கலப்பு முறைப்படி நடாத்தப்படவிருக்கின்றது. அதாவது நாட்டில் 40 வருடங்களுக்கு முன்னர் நடைமுறையிலிருந்த வட்டார முறைப்படி 60 வீத மக்கள் பிரதிநிதிகளும், ஏற்கனவே நடைமுறையிலிருந்த விகிதார முறைமைப்படி 40 வீத மக்கள் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

இத்தேர்தல் முறைமையின் ஊடாக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மக்கள் பிரதிநிதி கிடைக்கப் பெறுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் வன்முறைகளுக்கு அதிகம் துணை புரிந்ததும், வட்டாரத்திற்கோ, பிரதேசத்திற்கோ மக்கள் பிரதிநிதியை இல்லாமலாக்கியதுமான விருப்பு வாக்கு முறை நீக்கப்பட்டு இருக்கின்றது. இது நல்லதொரு ஏற்பாடு தான்.

என்றாலும் இத்தேர்தலின் நிமித்தம் இணக்கப்பாட்டு அரசாங்கத்தின் பிரதான பங்காளிகளாக இருக்கும் ஐக்கிய தேசிய கட்சியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் தனித்தனியாகக் கூட்டணிகள் அமைத்து தேர்தலில் களமிறங்கியுள்ளன. அதிலும் இவ்வரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் கூட சில இடங்களில் ஐ.தே.க. உடன் கூட்டணி சேர்ந்தும், இன்னும் சில இடங்களில் தனித்தும் போட்டியிடுகின்றன. அதேநேரம் ஸ்ரீ.ல.மு.கா வும், அ.இ.ம.கா. வும் கூட மேலும் சில இடங்களில் வேறு சில கட்சிகளுடன் கூட்டணி அமைத்து இத்தேர்தலை எதிர்கொள்கின்றன.

இதேவேளை தேசிய காங்கிரஸ் தனித்தும், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியுடன் கூட்டணி அமைத்தும் இத்தேர்தலில் அபேட்சகர்களை களமிறக்கி இறக்கி இருக்கின்றது. இதேபோன்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் வேறு சில கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன.

ஆனாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் தான் இத்தேர்தலில் பிரதான அணிகளாக திகழுகின்றன. இவற்றுக்கு அடுத்தப்படியாக மக்கள் விடுதலை முன்னணியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் விளங்குகின்றது. இருப்பினும் எல்லா அரசியல் கட்சிகளுமே முஸ்லிம் அபேட்சகர்களைத் தம் பட்டியலில் உள்ளடக்கிக் கொள்ளத் தவறவில்லை.

இவ்வாறான நிலையில் இத்தேர்தலின் வாக்களிப்புக்கு இன்னும் சில நாட்கள் தான் உள்ளன. தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதன் விளைவாக தேர்தல் களம் பெரிதும் சூடாகியுள்ளது.




கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊழல் மோசடிக்கு எதிரான பிரசாரத்தை முன்னெடுத்து தேர்தலில் வெற்றி பெற்றார். அதனூடாக இந்நாட்டு வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவராகவோ, பிரதமராகவோ பதவி வகிக்காது ஜனாதிபதியாகத் தெரிவானவர் என்ற அந்தஸ்தையும் அவர் பெற்றுக் கொண்டார்.

அந்தவகையில் இந்த உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்திலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிடும் ஊழல், மோசடி தொடர்பான தகவல்கள் வாக்காளர்களை ஆச்சரியத்திற்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது. அதுவும் ஊழலை ஒழிப்பதற்காக வந்த ஜனாதிபதியின் ஆட்சியிலேயே இவ்வளவு நடந்துள்ளதா? என மக்கள் வினா எழுப்பும் நிலை தோற்றம் பெற்றுள்ளது. பதிலுக்கு, பிரதமரும், முன்னாள் ஜனாதிபதியும் தகவல்களை வெளியிடவே செய்கின்றனர். இவ்வாறு எட்டிக்கு போட்டியான விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் ஊடாக இத்தேர்தல் களம் கொதி நிலையை அடைந்திருக்கின்றது.

இந்நிலைமை வாக்களிப்பிலும், வாக்களிப்பின் பின்னரும் எவ்வாறான தாக்கத்தையும் அழுத்தத்தையும் ஏற்படுத்தும். நாடு எந்தத் திசையை நோக்கி செல்லும் என்பதை முன்கூட்டியே சொல்ல முடியாத நிலைமையைத் தோற்றுவித்திருக்கின்றது.

இருப்பினும் இந்நாட்டில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்ந்த போதிலும் தேர்தலில் வாக்களிப்பது அவசியமானது. அது இஸ்லாமிய வழிகாட்டலாக உள்ளது. இஸ்லாமிய வழிகாட்டலின் அடிப்படையில் வாக்களிப்பது முஸ்லிம்களின் கடமையும் பொறுப்பும் ஆகும். அதனை அடிப்படையாகக் கொண்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையும் வழிகாட்டல்களை வெளியிட்டிருக்கின்றது.

அதனால் தேர்தல், வாக்களிப்பு, வாக்கு எண்ணுதல் மற்றும் தேர்தல் முடிவுகளின் பின்னர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதில் முஸ்லிம்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். அத்தோடு மிகுந்த பொறுப்புணர்வுடனும், தூர நோக்குடனும் செயற்படவும் தவறக் கூடாது. இது காலத்தின் அவசியத் தேவையாகும்.

ஏனெனில் தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகள் அதே வட்டார வாக்குச் சாவடிகளில் எண்ணப்பட உள்ளன. இது நாற்பது வருடங்களுக்கு முன்னர் கையாளப்பட்ட முறைமையாகும். ஆனால் அன்றிருந்த நிலை இன்றில்லை. இந்தக் காலப்பகுதியில் சமூகத்தில் மலைக்கும் மடுவுக்குமிடையிலான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை முதலில் கவனத்தில் கொள்வது அவசியமானது.

அதேநேரம் கடந்த ஜனாதிபதி தேர்தல் வெற்றியின் பின்னர் முஸ்லிம்கள் நடந்து கொண்ட விதம் மாற்று மதத்தவர்கள் மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பில் எவ்வாறான பார்வையையும், பிரதிபலிப்பையும் தோற்றுவித்தது என்பதை முஸ்லிம்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதாவது ஆட்சி மாற்றத்தை சில முஸ்லிம்கள் அணுகிய விதம் இந்நாட்டு முஸ்லிம்கள் தொடர்பில் பிழையான பார்வையையும், தவறான அபிப்பிராயங்களையும் மாற்று மதத்தவர்கள் மத்தியில் தோற்றுவித்தது. நாமே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம் என்ற விதத்தில் செயற்பட்டதன் விளைவே அது.

ஆனால் கடந்த ஆட்சியில் நடந்த அதே நிகழ்வுகள் இவ்வாட்சியின் கடந்த மூன்று வருட காலப்பகுதியிலும் நடந்திருக்கின்றன. பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நம்பிக்கைக்குரியவராகக் கருதி இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் அளிக்கப்பட்டவர் இறக்காமம் மாணிக்கமடுவில் செய்திருப்பவை மறக்கக் கூடியதல்ல. பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் இவ்வாட்சியிலும் இடம்பெறவே செய்திருக்கின்றன. கடந்த ஆட்சிக்கு அழுத்கம, தர்காநகர் போன்று இவ்வாட்சிக்கு கிந்தொட்ட கறைபடிந்த அடையாளமாகி விட்டது.

அதேநேரம் இந்நாட்டு முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புணர்வுகளை விதைப்பவர்கள் யார்? அவர்களை உருவாக்கியவர்கள் யார்? அவர்களது பின்புலம் யாது? அவர்களை இயக்குபவர்கள் யார்? அவர்கள் என்ன தேவைக்காகப் பாவிக்கப்படுகின்றனர்? போன்ற விடயங்கள் அனைத்தும் பகிரங்கமாகி விட்டன. இச்செயற்பாடுகளை முன்னெடுப்பவர்கள் இப்போது அமைதியாக வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் திரும்பவும் இயக்கப்பட மாட்டார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

அத்தோடு இது தேர்தல் காலமாக இருப்பதால் கடந்த காலத்தில் விட்ட தவறுகளை மீண்டும் விடவும் கூடாது. பொறுப்பற்ற முறையில் செயற்படவும் முடியாது. அரசியல் கட்சிகள் தமது நலன்களை அடைந்து கொள்வதற்காக முஸ்லிம்களின் உணர்வுகளை துரும்பாகப் பாவிக்கவும் இடமளிக்கவும் கூடாது.

அதனால் அண்மைய வருடங்களில் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் முஸ்லிம்கள் பொறுப்புணர்வுடனும், தூரநோக்கோடும் சிந்தித்து செயற்பட வேண்டும். இது காலத்தின் அவசியத் தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• தொகுப்பு:
முஹம்மத் பகீஹுத்தீன்

# இஸ்லாமிய அரசியல் பற்றிய சில சிந்தனைகள்



''சமூக மாற்றத்திற்கான வழிமுறை'' என்ற நூலின் இரண்டாம் பாகத்தில் உள்ள ஒன்பதாம் அத்தியாயத்திலிருந்து தொகுக்கப்பட்டதே இவ்வாக்கமாகும்.

இஸ்லாம் ஒரு சம்பூர்ண வாழ்க்கைத் திட்டம். அது முழுமையானது, எல்லாக் காலத்திற்கும் இடத்திற்கும் பொருத்தமானது. அதனைக் கூறுபோட முடியாது. அன்று தொட்டு இன்று வரை அல்லாஹ் பொருந்திக் கொண்ட மார்க்கமான தீனுல் இஸ்லாத்தை முஸ்லிம் உம்மத் முழுமையானதாகவே புரிந்து வைத்துள்ளது.

அந்த வகையில் இஸ்லாம் அரசியலை விட்டு மார்க்கத்தை வேறாக்கிப் பார்ப்பதில்லை. ''இஸ்லாம் ஒரு முழுமையான வாழ்வொழுங்காவும் வழிகாட்டியாகவும் மார்க்கமாகவும் அரசாகவும் சட்டவாக்கமாகவும் நடைமுறையாகவும் வந்திருக்கிறது'' என இமாம் ஹஸனுல் பன்னா குறிப்பிடுகிறார். எனவே இஸ்லாம் அரசாங்கத்தை தனது பிரதான தூண்களுள் ஒன்றாகக் கொண்டிருக்கிறது. அது வழிகாட்டலில் தங்கியிருப்பதுபோலவே நடைமுறைப்படுத்தலிலும் தங்கியிருக்கிறது.

அரசு தவிர்க்க முடியாத தேவை என்பதை உஸ்மான் (ரழி) இப்படிக் கூறியுள்ளார்கள். ''நிச்சயமாக அல்லாஹ் அல்-குர்ஆன் மூலமாகச் சாதிக்காததை அதிகாரத்தின் மூலமாகச் சாதிக்கிறான்.''

இமாம் பன்னாவின் பார்வையில் இஸ்லாத்தையும் அரசியலையும் வேறுபடுத்திப் பார்ப்பதானது: ''தான் மக்களுக்காகக் கொண்டுவந்த சமூகவியல் ஒழுங்கின் பிரதான தூண்களுள் ஒன்றாக அரசாங்கத்தை இஸ்லாம் கருதுகிறது. எனவே யார் மார்க்கத்தை அரசியலுடன் தொடர் பற்றதாக எண்ணுகிறாரோ, அவர் தனக்கும் இஸ்லாம் பற்றிய தனது அறிவுக் கும் அநியாயம் இழைத்தவராகிறார்'' என்று கூறியுள்ளார்.

இமாம் பன்னா தான் சாதிக்க விரும்பிய இஸ்லாமிய அரசை இவ்வாறு வர்ணிக்கிறார்: ''உண்மையிலேயே இஸ்லாமியத் தன்மை கொண்டதாக இருக்கும் வகையில் அரசாங்கத்தை மறுசீரமைத்தல். அதன்மூலமாக, உம்மாவின் பணியாள னாக, அதன் கூலிக்காரனாக, அதன் நலனுக்காக உழைப்பவனாக நின்று தனது பணியை அது நிறைவேற்றும்...''

பொறுப்புணர்வு, குடிமக்கள் மீது இரக்கம் காட்டுதல், மக்களுக்கு மத்தியில் நீதம் செலுத்துதல், பொதுச் சொத்தில் பேணுதலாகவும், சிக்கனமாகவும் நடந்துகொள்ளல் என்பன அதன் பண்புகளாக இருக்கும்.

பாதுகாப்பு வழங்குதல், சட்டத்தை செயற்படுத்தல், கல்வியைப் பரவலாக்குதல், உருவாக்கத்தில் ஈடுபடல், சுகாதாரத்தைப் பாதுகாத்தல், பொது நன்மைகளை கவனத்தில் கொள்ளல், தேச வளத்தைப் பெருக்குதல், தேசத்தின் செல்வங்களைப் பாதுகாத்தல், நற்பண்புகளைப் பலப்படுத்தல், தஃவாவைப் பரப்புதல் என்பன அது மேற்கொள்கின்ற கடமைகளாக அமைந்திருக்கும்.

மேலும் ஆட்சியொழுங்கு கட்டமைவதற்கான மூன்று பிரதான தூண்களை இமாம் பன்னா சுட்டிக் காட்டுகிறார்: ஆட்சியாளனது பொறுப்புணர்வு, உம்மாவின் ஐக்கியம், அதன் விருப்பத்தை மதித்தல்.

ஆட்சியில் உம்மா பிரதிநிதித்துவப் படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும், சரியான வகையில் அதன் பங்கேற்பு அமைய வேண்டியதன் அவசியத்தையும் இமாம் பன்னா சுட்டிக் காட்டுகிறார். சட்டக் கலை வல்லுனர்களைக் கொண்ட துறை சார்ந்த ஷூறா சபையொன்றும் அதில் காணப்படுதல் அவசியமானது.

யாப்பொழுங்கின் மீது ஆட்சி நிலை பெறுவதை இமாம் பன்னா ஆதரிக்கிறார்கள். இன்று உலகில் பிரபலமாகக் காணப்படுகின்ற யாப்பொழுங்கே இஸ்லாமிய ஆட்சிக் கொள்கைகளுக்கும், அதன் சீரிய ஒழுங்குக்கும் மிக அண்மித்த ஒழுங்கு என அவர் கருதுகின்றனர்.

இஸ்லாமிய பிக்ஹில் ''தனது பரந்த, நெகிழ்ந்த தன்மையின் காரணமாக அரசியல் செயற்பாட்டில் காணப்படுகின்ற இவ்வனைத்து யாப்பு வடிவங்களையும் உள்வாங்கியுள்ளது.'' எனவும் இமாம் பன்னா சுட்டிக் காட்டுகிறார்.

''அவ்வாறே, கருத்துச் சுதந்திரம், சிந்தித்தல், விளக்குதல், தெளிவுபடுத்தல், ஆலோசனை வழங்குதல், உபதேசம் புரிதல் முதலிய இஸ்லாம் கடமையாக்கியுள்ள அம்சங்களுக்கும், கொண்ட கருத்தில் வெறித்தனமாக இருத்தல், சமூகத்துக்கெதிராக கிளம்புதல், உம்மாவில் காணப்படும் பிளவை மேலும் ஆழப்படுத்துவதற்காக இடையறாது செயற்படல் என்பவற்றுக்கும் இடையில் வேறுபாடு இருப்பதாக இமாம் பன்னா கூறுகிறார்.

இந்தவகையில்தான், இஸ்லாமிய சமூகத்தினுள்ளேயான கட்சிப் பன்மைத்துவத்தில் நாம் விசுவாசம் கொண்டிருக்கிறோம். குழுக்களை அல்லது அரசியல் கட்சிகளை உருவாக்குதல் குறித்தோ அவற்றின் இயக்கம் குறித்தோ அதிகாரத்தரப்பு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய எந்தத் தேவையும் கிடையாது என்றும் நம்புகிறோம். ஒவ்வொரு குழுவும் தனது அழைப்பை பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தி, அதற்கான முறைவழியையும் தெளிவுபடுத்த இடமளிக்கப்பட வேண்டும். இஸ்லாமிய ஷரீஆவே மிக உயர்ந்த யாப்பாகவும், அனைத்து வகையான அதிகாரங்களையும் விட்டு விலகிய சுதந்திரமான நீதித் துறையொன்றால் செயற்படுத்துகின்ற சட்டமாகவும், அந்த நீதித்துறை சிந்தனா, அறிவியல், நியாயவியல் மற்றும் கல்வி ரீதியாகத் தகைமை பெற்றதாகவும் இருக்குமானால் சமூகத்தின் பாதுகாப்பையும், அது சீரான பாதையில் செல்வதையும் உத்தரவாதப்படுத்த அதுவே போதுமானதாகும்.

இவ்வடிப்படைக் கொள்கைகள் தொடர்பாக இஸ்லாமிய அறிஞர்களுக்கு மத்தியில் எவ்விதக் கருத்து வேறுபாடும் கிடையாது. மட்டுமன்றி, சமூகத்தின் பிரதான தாங்கு தூண்களாகவும் இவ்வடிப்படைகள் கருதப்படுகின்றன.

கட்சிகளையும் சங்கங்களையும் கழகங்களையும் உருவாக்கி, அவற்றை நோக்கி அழைப்பு விடுக்கும் உரிமை தேசத்திலுள்ள அனைத்து முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத பிரஜைகளுக்கும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் பாகுபாடின்றி வழங்கப்பட வேண்டும் எனவும் இமாம் பன்னா கூறுகிறார்.

ஷூறா என்பது ஆட்சிக்கான அடிப்படையாகவும், ஆட்சியாளனைக் கட்டுப்படுத்தும் அம்சமாகவும் அமைவதாக இஸ்லாம் வழிகாட்டுகிறது. நிறைவேற்று அதிகாரங்களின் மூலாதாரமாக உம்மா அமைந்திருப்பதோடு, ஆட்சியாளனை அது கண்காணிப்புக்கும் விசாரணைக்கும் உட்படுத்தும் கடமைப்பாடு கொண்டது எனவும் பன்னா கருதுகின்றார்.

இமாம் பன்னா கூறுகிறார்: ''ஆட்சியாளனை மிக நுணுக்கமாகக் கண்காணித்து நல்ல விடயங்களை அவனுக்கு ஆலோசனையாக முன்வைப்பது இஸ்லாமிய உம்மாவின் கடமையாகும். அவனும் உம்மாவிடம் ஆலோசனை கேட்பவனாகவும் அதன் விருப்பத்தை மதிப்பவனாகவும் இருக்க வேண்டும்''.

உம்மாதான் எல்லா அதிகாரங்களினதும் மூலாதாரமாக இருக்கும் என்பதே இதன் பொருளாகும். அந்தவகையில், எவரது மார்க்கம், அமானிதம், தேர்ச்சி, அறிவு, ஆற்றல்கள், தகைமை என்பவற்றில் அது நம்பிக்கை வைக்கிறதோ அவருக்கு தான் விரும்பும் பொறுப்புக்களை வழங்கும். அப் பொறுப்புக்களை அவர் நீதி, நன்மை, நடுநிலைமை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்வார்.''


தான் தவறுகளுக்கு அப்பாற்பட்டவன் என வாதிக்கும் உரிமை ஆட்சியாளனுக்குக் கிடையாது. ''அவன் தவறிழைக்கும்போது அவனைத் திருத்துவது உம்மாவின் அங்கத்தவர்களது கடமையாகும். அவசியமேற்பட்டால் வாள் முனையில் அவனது கோணலை நேராக்குவதற்குக் கூட அவர்களுக்கு உரிமையுள்ளது. அல்லாஹ்வுக்கும் அவனது தூதுருக்கும் மாறுசெய்யாத வகையில் அவனது கட்டளைகள் அமைந்திருப்பதே அவனுக்கு அவர்கள் கட்டுப்படுவதற்கான எல்லையாகும். அல்லாஹ்வின் சட்டத்தையும், இஸ்லாமிய ஷரீஆவையும் செயற்படுத்தும் வகையில், அல்லாஹ் அனுமதித்த எல்லைக்குள் மக்களது நலன்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அவனுக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டும்.''

கலீபா அபூபக்கர் ஸித்தீக் (ரழி) தனது பதவியேற்பின்போது உம்மாவை நோக்கிக் கூறினார்: ''உங்களுக்கு நான் பொறுப்பாக்கப்பட்டுள்ளேன். ஆனால் நான் உங்கள் அனைவரையும் விடச் சிறந்தவன் அல்ல. நான் சத்தியத்தில் இருப்பதாகக் கண்டால் எனக்கு உதவுங்கள். நான் அசத்தியத்தில் இருப்பதாகக் கண்டால், என்னைத் திருத்துங்கள். உங்கள் விடயத்தில் அல்லாஹ்வுக்கு நான் வழிபடும் காலமெல்லாம் எனக்கு கீழ்ப்படியுங்கள். அவனுக்கு நான் மாறு செய்தால், நீங்கள் எனக்குக் கட்டுப்பட வேண்டியதில்லை.'' (பக்.14)

---

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

# கூட்டு இஜ்திஹாத்-04
# அறிமுகமும் பிரயோகமும்



## கூட்டு இஜ்திஹாதின் வரலாறு

கூட்டு இஜ்திஹாதின் வரலாற்றைப் பார்க்கும்போது அது முக்கியமான நான்கு கட்டங்களைத் தாண்டி வந்திருப்பதை அவதானிக்கலாம். இது பற்றிய சிறிய ஒரு அறிமுகத்தை இங்கு பார்ப்போம்.

## முதலாவது கட்டம்: ஸஹாபாக்கள், மற்றும் ஸலபுகளின் காலம்

கூட்டு இஜ்திஹாதின் உண்மையான நடைமுறை வடிவம் காணப்பட்ட காலமாக ஸஹாபாக்களின் காலத்தையும், அவர்களுக்கு பின்னால் வந்த ஆரம்ப ஸலபுகளின் காலத்தையும் குறிப்பிட முடியும். இதிலும் குறிப்பாக முதல் இரண்டு கலீபாக்களாகிய அபூ பக்ர் (ரழி), உமர் (ரழி) ஆகியோரின் காலத்தை விஷேடமாகக் கருதலாம் என்ற கருத்தை உஸ்தாத் அப்துல் வஹ்ஹாப் கல்லாப் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார். (மஸாதிருஷ் தஷ்ரீஈ பீமா லா நஸ்ஸ பீஹி)

மய்மூன் இப்னு மஹ்ரான் (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : அபூ பக்ர் (ரழி) அவர்கள் தன்னிடம் ஏதாவது விவகாரங்கள் வரும் போது அதற்கான தீர்வை. அல்குர்ஆனில் பார்ப்பார்கள். அதில் தீர்வைக் கண்டால் அதனை தீர்ப்பாகச் சொல்வார்கள். அல்குர்ஆனில் தீர்வு கிடைக்காவிட்டால் சுன்னாவைப் பார்ப்பார்கள். அதில் தீர்வைக் கண்டு கொண்டால் அதனைத் தீர்ப்பாகச் சொல்வார்கள். இதிலும் தீர்வைக் காணாவிட்டால் முஸ்லிம்களைச் சந்தித்து இது பற்றி நபி (ஸல்) அவர்களின் தீர்வை அறிந்தவர்கள் இருந்தால் அதனைச் சொல்லுமாறு கூறுவார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் பலர் ஒன்றுகூடுவார்கள். ஒவ்வொருவரும் குறித்த விடயம் தொடர்பாக நபியவர்கள் மூலமாக தான் அறிந்த விடயங்களை அங்கு குறிப்பிடுவார்கள். இச்சந்தர்ப்பத்திலும் தீர்வைக் கண்டு கொள்ள முடியாது போனால் முக்கியமான பலரை அழைத்து அவர்களுடன் கலந்தாலோசனை செய்வார்கள். அதில் உடன்படக்கூடிய கருத்தை முடிவாக சொல்வார்கள். (சுனனுத் தாரமி).

உமர் (ரழி) அவர்களும் இதே வழிமுறையைக் கையாண்டார்கள். பொதுப் பிரச்சினைகள் வரும் போது ஆரம்பத்தில் குர்ஆனின் தீர்வை தேடி முன்வைப்பார்கள். இல்லாத போது ஹதீஸில் இடம்பெற்ற தீர்வை முன்வைப்பார்கள். இதிலும் கிடைக்காத சந்தர்ப்பத்தில் கலீபா அபூ பக்ர் (ரழி) அவர்கள் கூறிய தீர்வுகள் இருந்தால் அதனைத் தீர்வாக முன்வைப்பார்கள். இல்லாதபோது தலைவர்கள், அறிஞர்களை அழைத்து அவர்களிடம் கலந்தாலோசித்து அதன் முடிவை தீர்வாக சொல்வார்கள். (இஃலாமுல் முவக்கிஈன் - இப்னுல் கையிம் (ரஹ்).

இந்த சம்பவங்கள் ஸஹாபாக்கள் கூட்டு இஜ்திஹாதை பிரயோகித்தமைக்கான சில உதாரணங்களாகும். உஸ்தாத் அப்துல் வஹ்ஹாப் கல்லாப் (ரஹ்) இது பற்றிக் கூறும் கருத்து ஸஹாபிகளின் கூட்டு இஜ்திஹாத் எவ்வாறு நடைமுறையில் இருந்தது என்பதை இன்னும் விளக்குகின்றது.

''அபூ பக்ர் (ரழி), உமர் (ரழி) அவர்கள் பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஒன்றுகூட்டிய தலைவர்கள் மற்றும் சான்றோர்கள் மக்களில் அனைவருமாக இருக்கவில்லை. ஏனெனில் அதிகமான ஸஹாபாக்கள் மக்கா, ஷாம், யமன் போன்ற நாடுகளில் இருந்ததுடன், மற்றும் சிலர் போராட்டக் களத்தில் இருந்தார்கள். இப்படியாக பல நாடுகளில் இருந்த ஸஹாபிகள் வரும் வரை கலீபா அபூ பக்ர், உமர் (ரழி) அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்காமல் பிற்படுத்தினார்கள் என்ற செய்திகளை நாம் காணமுடியாது. வருகை தந்த ஸஹாபிகளின் கருத்துக்களின் அடிப்படையில் தீர்வு பெற்று அமுல் படுத்தினார்கள். ஏனெனில் ஒரு குழுவின் கருத்து தனிநபர் கருத்தை விட சத்தியத்திற்கு நெருக்கமானது. இதனைத் தான் 'இஜ்மாஉ' என சட்ட அறிஞர்கள் கூறுகின்றனர். உண்மையில் இது தனிநபரன்றி கூட்டத்தின் சட்டவாக்கமாகும்.

இரு கலீபாக்களும் கடைபிடித்த இந்த வழிமுறையானது, நபி (ஸல்) அவர்கள் புது விவகாரங்கள் ஏற்படும் போது அதற்கான தீர்வைப் பெறுவதற்குக் காட்டித் தந்த ஒழுங்காகும்.

அலி (ரழி) அவர்கள் கூறியதாக ஸஈத் இப்னுல் முஸய்யப் (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதரே, எமக்கு சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அது பற்றி குர்ஆன் இறங்கவுமில்லை. உங்களின் சுன்னாவும் தீர்வு சொல்லவில்லை. இச்சந்தர்ப்பத்தில் நாம் என்ன செய்வது என நான் கேட்டேன். அதற்கு நபியவர்கள்: அதற்கு நீங்கள் ஆலிம்களை அல்லது முஃமின்களில் வணக்கவாளிகளை ஒன்று சேர்த்து அவர்களுடன் கலந்தாலோசனை செய்யுங்கள். ஒருவரின் கருத்தை மாத்திரம் அது தொடர்பில் தீர்ப்பாகச் சொல்ல வேண்டாம். (தபரானி பில் அவ்ஸத்).

இந்த வழிமுறையை தனது கவர்னர்களும் பின்பற்ற வேண்டும் என்ற வகையில் கலீபா உமர் (ரழி) அவர்கள் காழி ஷுரைஹிற்கு இப்படி எழுதினார்கள்: ''நீங்கள் அல்லாஹ்வின் வேதத்தைப் பாருங்கள். அதில் உங்களுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் இறைதூதர் (ஸல்) அவர்களது சுன்னாவை தொடர்ந்து பாருங்கள். சுன்னாவிலும் தீர்வு கிடைக்காவிட்டால், இஜ்திஹாத் செய்யுங்கள். அறிஞர்கள், ஸாலிஹீன்களுடன் கலந்தாலோசனை செய்யுங்கள்''. மற்றோரு அறிவிப்பில் ''மக்கள் உடன்படும் கருத்தை தீர்ப்பாகக் கூறுங்கள்'' (இஃலாமுல் முவக்கிஈன் - இமாம் இப்னுல் கையிம்).

உஸ்மான் (ரழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஸஹாபாக்களில் அலி இப்னு அபீ தாலிப், தல்ஹா பின் உபைதில்லாஹ், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப், ஸுபைர் இப்னுல் அவாம் (ரழி) ஆகியோரை அழைத்து அவர்களிடம் கலந்தாலோசனை செய்வார்கள். அவர்கள் உடன்படும் கருத்தை மக்களுக்கு முன் வைப்பபார்கள். (தாரீஹுல் கழா பில் அந்தலுஸ்).

ஸஹாபாக்களின் இந்த கூட்டு இஜ்திஹாத் வழிமுறையை கலீபா உமர் இப்னுல் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் கடைபிடித்து வந்தார்கள். மதீனாவின் கவர்னர் பொறுப்பு சுமத்தப்பட்ட பின்னர் மதீனாவில் இருந்த பிரபலமான 10 சட்ட வல்லுனர்களை அழைத்துக் கூறினார்கள். ''நன்மை தரும் ஒரு பணிக்காக நான் உங்களை இங்கு அழைத்தேன். நீங்கள் சத்தியத்திற்கு உதவியாளர்களாக இருக்க வேண்டும். உங்கள் அனைவரின் கருத்தைப் பெறாமல், அல்லது உங்களில் சமுகம் தருகின்றவர்களின் கருத்தைப் பெறாமல் நான் முடிவுகளைப் பெற மாட்டேன்.'' (உஸூலுத் தஷ்டகஇல் இஸ்லாமி, உஸ்தாத் அலி ஹஸ்புல்லாஹ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி




(சென்ற இதழின் தொடர்ச்சி)

**7. குடும்ப அங்கத்தினரை மதித்தல் (Familial Respect)**

எல்லா விடயங்களிலும் குடும்பத்திற்கு முன்னுரிமை கொடு என்பது ஒரு பொன்விதி (Golden Rule). கணவன் மனைவியின் குடும்ப அங்கத்தவர்களையும் மனைவி கணவனின் குடும்ப அங்கத்தவர்களையும் மதிப்பதும் கண்ணியப்படுத்துவதும் அவசியம். கணவன் மனைவியின் குடும்பத்தைக் குறை கூறுவதும் விமர்சிப்பதும் அனாவசியமான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

எனவே, பரஸ்பரம் இருவரும் இரு குடும்பங்களையும் மதித்து நடக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். சில வேளை, ஒருவருடைய குடும்ப அங்கத்தவர்களது செயற்பாடுகள் திருப்தியுற்ற விதத்திலும் தவறானதாகவும் தோன்றலாம். அவற்றை மிகக் கவனமாகக் கையாள வேண்டும். சமயோசிதமும் புத்திசாதுர்யமும் இதற்கு அவசியம்.

**8. நிறைவேற்றல் (Fulfillment)**

நிறைவேற்றல், ஈடேற்றல், பூரணமாக்கல் என்பன குடும்ப வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றது. கணவனோ மனைவியோ பரஸ்பரம் ஒருவருக்கொருவர் வழங்கும் வாக்குறுதிகளை நிறை வேற்ற வேண்டும். தேவைகளையும் ஈடேற்ற வேண்டும். எவ்வித எதிர்பார்ப்புமின்றி எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். அவை உடல் சார்ந்த இச்சையாகவோ வீட்டு செலவீனமாகவோ ஆடை அலங்காரமாகவோ பரிசுப் பொருட்களாகவோ இருக்கலாம்.

**9. மன்னித்தல் (Forgiving)**

இறைவன் நம்மை மன்னிக்க வேண்டுமாயின், முதலில் நாம் அடுத்த மனிதனை மன்னிக்கப் பழக வேண்டும். தம்பதியினரில் ஒருவர் தவறு செய்யலாம். மனதைக் காயப்படுத்தலாம். எனினும், அங்கு மன்னிப்பு அவசியம். கணவன் மனைவியையும் மனைவி கணவனையும் மன்னித்து வாழ்ந்தால் மகிழ்ச்சி பெருகும். குடும்பம் சிலர் எண்ணுவது போன்று ஒரு நீதிமன்றமல்ல. அங்கு யார் தவறு செய்தார் என்பதை நிரூபிக்க யாரும் வழக்காடக் கூடாது. தர்க்கமும் விவாதமும் நிறைந்த நீதிமன்றமல்ல மனைகள். வாதி, எதிர்வாதி என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. யார் சரி, யார் பிழை என்று தீர்ப்பு வழங்கப்படுவதுமில்லை. தவறுகள், பிழைகள் இடம்பெறும் போது தீர்மானங்களை மேற்கொண்டு வாழ்வைத் தொடர மன்னிப்பே இன்றியமையாதது.

**10. நெகிழ்ச்சி (Flexibility)**

ஒவ்வொருவரும் தனித் தன்மையுள்ளவர்கள். எனினும் அடுத்தவரின் கருத்துக்கு செவி சாய்க்கும் நெகிழ்வு அவசியம். புதிய ஆரோக்கியமான மாற்றங்கள் தேவைப்படும்போது அவற்றை உள்வாங்குவதற்கு நெகிழ்ச்சி தேவை. எதற்கும் அசையாத ஒரு வரட்டுப் பிடிவாதம் (Regidness) தம்பதியினரிடையே நிலவுமானால் அங்கு சிறு சிறு உராய்வுகள் (Friction) பின்னர் வெடிப்புகள் (Explosion) ஏற்பட வழியமைகின்றது. உண்மைகளையும் சரி பிழைகளை யும் ஏற்று நடந்தால் அங்கு நெகிழ்விருக்கும்.

**11. மறத்தல் (Forget)**

சிலவேளை, தம்பதியினரில் ஒருவர் தமது பேச்சாலும், செயலாலும் அடுத்தவரை காயப்படுத்தியிருக்கலாம். கடந்த காலங்களில் ஏற்பட்ட இந்தக் கசப்பான அனுபவத்தை காலத்தின் மயில் இறகு வருடி, ஆற்றுப்படுத்தி விடவேண்டும். அவற்றை நாம் மறந்து விடலாம். கசப்புகளை மனதில் சேமித்து வைத்து அவ்வப்போது நினைவுபடுத்திக் கொண்டிருந்தால் அன்பும் பாசமும் சாத்தியமற்றதாகவே போய்விடும். எனவே, மன்னிப்பது போன்று நாம் சில விடயங்களை மறக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். இறந்த காலத்தை மறந்து போ, எதிர் காலத்தை நினைத்துப் பார் (Forget the past and remind the future) என்பது குடும்ப வாழ்வில் ஒரு பொன் விதி என்பதைப் புரிந்துகொள்.

**12. விசுவாசம் (Faithfulness)**

ஒருவர் ஒருவரை விசுவாசம் கொள்ள வேண்டும். இது நீடித்த குடும்ப வாழ்வின் அத்திவாரம் போன்றது. மற்றவரின் செயற்பாடுகளிலும் நகர்வுகளிலும் எப்போது சந்தேகம் உருவாகத் தொடங்குமோ அங்கே கசப்பும் பிணக்குகளும் தோன்றி மகிழ்ச்சியும் சந்தோஷமும் தொலைந்துவிடும். வெளிப்படைத் தன்மையும் ஒழிவு மறைவின்மையும் திறந்த கலந்துரையாடலும் விசுவாசத்தை வளர்க்கும் வழிகளாகும். வீண் சந்தேகம், முழு வாழ்வையும் அதன் மகிழ்ச்சியையும் சிதைத்துவிடும். ஒருவர் மற்றவரின் அமானிதப் பொருள். அவருக்குத் துரோகம் செய்தல் பெரும் குற்றம் என்ற உணர்வோடு வாழ்ந்தால் சொல்லிலும் செயலிலும் விசுவாசம் பிறக்கும்.

**13. நீதி (Fairness)**

வாழ்வின் சில சந்தர்ப்பங்களில் நமக்குக் கோபம் வரலாம். ஆத்திரங்கள் ஏற்படலாம். அத்தகைய பொழுதுகளில் கூட நாம் நீதியாகவும் நேர்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும். சிலபோது உண்மைகள் நமக்கு எதிராக இருக்கலாம். எனினும், அதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். நீதி என்பது ஒரு புறவயமான உண்மை. நமது விருப்பு, வெறுப்பு, நலன்களுக்கு அது எதிராகவும் இருக்கக் கூடும். மனைவியினதும் பிள்ளைகளினதும் விடயங்களில், செலவு செய்வதில், உரிமைகளை வழங்குவதில் எப்போதும் நேர்மையோடு நடந்துகொள்ள வேண்டும்.

**14. வெளிப்படைத் தன்மை (Frankness)**

தம்பதியினர் ஒருவருடன் ஒருவர் வெளிப்படையாகப் பழகாவிட்டால் அல்லது நடந்துகொள்ளா விட்டால் அவர்களிடையே தவறான எண்ணங்கள், சந்தேகங்கள் ஏற்படலாம். எனவே, மனதில் உள்ளவற்றை வெளிப்படையாகப் பேச வேண்டும். கலந்துரையாட வேண்டும். ஒழிவு மறைவுகள் அதிகரிக்கும்போது தப்பபிப்பிராயங்களும் அதிகரிக்கக் கூடும். அது அன்பையும் நெருக்கத்தையும் குறைக்கலாம். எனினும் சில விடயங்களை மனைவி தெரிந்து கொள்வது தம்பதியினரிடையே பிரச்சினைகளை ஏற்படும் என அஞ்சினால் கணவன் அவற்றை மறைப்பதே விரும்பத் தக்கது. அவற்றை மனைவி துருவி ஆராய வேண்டியதுமில்லை. எவ்வாறாயினும் தம்பதியினரின் 90% மான உறவுகள் வெளிப்படைத் தன்மையிலேயே கட்டியெழுப்பப்பட வேண்டும். விதிவிலக்காகவே ஒழிவு மறைவு இருக்கலாம்.

**15. அன்பு கலந்த அக்கறை (Flirtatiousness)**

ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துவதோடு மட்டுமன்றி அக்கறையுள்ளவராகவும் இருக்க வேண்டும். (Romance in Marriage). மணவாழ்வில் காதலே மகிழ்ச்சிக்குரிய வழி என்பர். இதை வெளிப்படுத்தும் வெவ்வேறு வழிகள் உள்ளன. ஒருவர் அடுத்தவரை ஓர் அன்பான பெயரால் அழைத்துக் கொள்ளலாம். பிறந்த நாளை முன்னிட்டு ஒரு சிறிய பரிசை வழங்கலாம். எதிர்பாராத விதமாய் ஓர் ஆடையணியை வாங்கிக் கொடுக்கலாம். அன்பான வார்த்தைகள், அலுவலகத்திலிருந்து ஒரு அழைப்பு என்று அன்பு கலந்த அக்கறையை வெளிப்படுத்தும் வழிகள் ஏராளாம்.

**16. அனுசரணை வழங்கல் (Facilitating)**

ஒருவர் தன்னை சுயமாகவும் தொழில் ரீதியாகவும் வளர்த்துக் கொள்ள பரஸ்பரம் உதவியாளராகவும் அனுசரணையாளராகவும் இருக்க வேண்டும். குறிப்பாக மனைவி தனது சமூக, சமய அறிவைப் பெருக்கிக் கொள்ள கருத்தரங்கிலோ வகுப்புகளிலோ கலந்து கொள்ள கணவன் உதவி ஒத்துழைப்பை வழங்கலாம். கணவன் தனது தொழின்மையை (Professional) வளர்க்க, தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்ள மனைவி முடியுமான வரை ஒத்துழைக்க வேண்டும்.

**17. புகழ்தல் (Flattering)**

புகழ்ச்சியை எதிர்பார்ப்பது மனிதனின் உளவியல் தேவைகளில் ஒன்று. அடுத்தவரின் உள்ளத்தை வெல்ல ஒருவரைப் புகழ்தல், பாராட்டுதல், தட்டிக் கொடுத்தல் என்பன ஒரு தாக்கமுள்ள வழி முறையாகும். பரஸ்பர பாராட்டும் புகழ்ச்சியும் தம்பதியினரிடையே நெருக்கமான உறவுகளை வளர்ப்பதற்கு பெரிதும் உதவும். எனவே, ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதன் அடையாளங்களில் ஒன்றாகவும் இதனைக் கருதலாம். மனைவியின் சுவையான உணவு, அழகான ஆடை, ஆக்கபூர்வமான செயற்பாடுகள், கணவனின் கம்பீரமான தோற்றம், உழைப்பு என்பனவும் புகழ்ச்சிக் குரியவையாக இருக்கலாம்.

**18. தவறு செய்யும் தன்மையை ஏற்றல் (Fallible)**

சிலபோது எமது எதிர்பார்ப்புகள் உயர்ந்ததாக இருக்கலாம். கள உண்மைகளை கருத்தில் எடுக்காததாகவும் இருக்கலாம். மனிதர்கள் தவறு செய்யக் கூடியவர்கள். அதேபோன்று வாழ்வில் கைகூடாத விடயங்களும் இருக்கவே செய்கின்றன. தம்பதியினர் சாத்தியமற்ற எதிர்பார்ப்புகளை முன்வைத்து அடம் பிடிப்பவர்களாக இருப்பார் களாயின், அது அனாவசியமான பிணக்குகளையும் முரண்பாடுகளையுமே உருவாக்கும். எனவே சாத்தியமான எதிர்பார்ப்புகளும் ஆசைகளுமே தம்பதியினரின் உறவை பலப்படுத்தும்; நெருக்கத்தை வலுப்படுத்தும்.

**19. உணர்தல் (Feel)**

ஒருவர் அடுத்தவரின் உணர்வுகளை சரியாகப் புரிந்துகொள்ளல் குடும்ப வாழ்வில் முக்கியமானது. உணர்வுகளை சரியாக விளங்கிக் கொள்ளாதபோது ஒருவர் ஒருவரை அடிக்கடி காயப்படுத்தும் நிலை உருவாகலாம். சிலபோது உணர்வுத் துஷ்பிரயோகமும் (Emotional Abuse) ஏற்படலாம். உணர்வுகளிலும் ஒருவருக்கொருவர் வேறுபட்டவர். இங்கு மனவெழுச்சி முரண்பாடுகளை விளங்கிக் கொள்ளும்போது அதை மதித்து நடக்க முடியும். உணர்வுத் துஷ்பிரயோகங்களையும் தவிர்க்க முடியும்.

**20. பாசம் (Be fond)**

ஏனையோரது கண்களினூடே தம்பதியினர் ஒருவரை ஒருவர் பார்க்க முற்படக் கூடாது. கணவன் தனது தாயின் கண்களினால் தன் மனைவியைப் பார்க்க முற்பட்டால் அன்புக்கும் பாசத்திற்கும் பதிலாக சந்தேகமும் அதிருப்தியுமே உருவாகும். சேர்ந்து வாழப் போகும் மனைவியோ கணவனோ அவர்களது சொந்தப் பார்வையினூடாகவே ஒருவரை ஒருவர் மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும். அடுத்தவர்கள் தம்பதியினரில் ஒருவர் குறித்து என்ன சொல்கிறார்கள் என்பதை விட தான் எப்படிப் பார்க்கின்றேன் என்பதே முக்கியமானது.

---

# வளர்ச்சி காணும் தனியார் துறையும் அரச கொள்கையும்

இலங்கையில் இணைந்த கல்லூரிகளின் எண்ணிக்கை அன்றாடம் பெருகி வருகின்றது. எனினும், அவற்றின் தரம் குறித்த அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானங்கள் மந்தமாக உள்ளன. சிவில் சமூகப் பங்காளர்கள் இந்நிறுவனங்களை ஆளும் சட்டம் மற்றும் அரச மேற்பார்வை குறித்த கேள்விகளை தொடர்ச்சியாக எழுப்பி வருகின்றனர்.

அரசாங்கத்தில் பதிவு செய்யப்படாத, உயர் கல்வி அமைச்சுக்கு வருடாந்த பதிவுக் கட்டணங்களை செலுத்தாத, தனியார் கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான, கண்காணிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லை. தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி, உயர் கல்வி குறித்த தேசிய கொள்கைச் சட்டம் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் (2009 இல்) சமர்ப்பிக்கப்பட்டது. அப்போது இந்நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டும் என்றும் இளமானி (Degree) மாணவர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டும் என்றும் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. எவ்வாறாயினும், இந்நிறுவனங்கள் மற்றும் அவற்றின் கற்கைநெறிகள் ஒழுங்குபடுத்தப்பட்ட பின்னரே இலங்கை அரசாங்கத்தின் அதாவது உயர் கல்வி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்றும் ஆலோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

உயர் கல்வி அமைச்சினால் இளமானிச் சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்ட, அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களுக்குக் கூட அவற்றின் அங்கீகாரம் குறித்த பிரச்சினைகள் இருந்து வருகின்றன. உயர் கல்வி அமைச்சு அனுமதி வழங்கிய முறையிலேயே குறிப்பிட்ட பாடநெறி, கற்கைகள் இடம்பெறுகின்றதா என்பது தொடர்பான அமைச்சின் கண்காணிப்புப் பொறிமுறை இல்லாத போது இதுபோன்ற பிரச்சினைகள் எழுவது இயல்பானது. சில நிறுவனங்கள் மொத்தமாகவே பெறும் அங்கீகாரத்தை ஒவ்வொரு கற்கைநெறிக்கும் பயன்படுத்திக் கொள்கின்றன.




தற்போது இலங்கையில் மிகப் பெரிய சர்ச்சையை உருவாக்கியுள்ள சைட்டம் (SAITM) நிறுவனம் பல்வேறு தரப்பினராலும் ஆட்சேபிக்கப்படுகின்றது. குறிப்பாக, இலங்கை மருத்துவர் சபை, சட்டம் நிறுவனத்தை மூடிவிடுமாறு கோரி வருகின்றது.

மருத்துவத் துறையை அல்லது கற்கைநெறியை ஒழுங்குபடுத்தும் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக் குழுவோ சபையோ [illegible] வழங்கும் மருத்துவக் கற்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதே இலங்கை மருத்துவக் கழகத்தின் வாதமாகும்.

தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத்திற்கான தெற்காசிய நிறுவனம் என்பதன் சுருக்கக் குறியீடே சைட்டம் ஆகும். 2009 இல் ஸ்தாபிக்கப்பட்ட இந்நிறுவனத்திற்கு இளமானிப் பட்டம் வழங்கும் அந்தஸ்து அதாவது MBBS பட்டம் வழங்கும் அதிகாரம் 2011 இன் 1721/19 ஆம் இலக்க அரச வர்த்தமானியின் மூலம் வழங்கப்பட்டது.

இவ்வர்த்தமானியில் சைட்டம் நிறைவேற்ற வேண்டிய ஏராளமான நிபந்தனைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் ஒன்றே சைட்டம் [illegible] போதனா வைத்தியசாலை யொன்றை (Teaching Hospital) ஸ்தாபிப்பதும் அடங்கும். 2013 இல் அத்தகைய போதனா வைத்தியசாலையை ஸ்தாபித்ததற்குப் பின்னர் சைட்டத்தினால் வழங்கப்பட்ட MBBS பட்டம் உயர் கல்வி அமைச்சினால் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டது. இதற்குரிய அங்கீகாரம் 2013 இன் 1829/36 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளிவந்தது.

எனினும் வேண்டப்பட்ட தராதரத்தை கற்கை நெறி பூர்த்தி செய்யவில்லை என்பதை காரணமாக வைத்து இலங்கை மருத்துவர் கழகம் அதன் MBBS பட்டத்தை ஏற்க மறுக்கின்றது. அதாவது சைட்டத்தின் போதனா வைத்தியசாலையில் மருத்துவ மாணவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை தொடர்பான பயிற்சி போதுமானதல்ல என்பதே மருத்துவர் கழகத்தின் பிரதான வாதமாகும். ஏனெனில், அங்கு அனுமதிக்கப்படும் நோயாளிகளின் தொகை மிகக் குறைவாகும்.

அதேவேளை, சமூக மருத்துவம் (Community Medicine) சட்ட மருத்துவம் (Foresik Medicine) என்பன சட்டத்தின் கற்கைநெறியில் பூரணமாக உள்ளடக்கப்படவில்லை. அரசாங்க வைத்திய சாலைகளோடு இணைந்து இவற்றைப் பூரணப்படுத்தலாம். இவ்விடைவெளியை நிரப்புவதற்கு அவிஸ்ஸாவெல்ல, கடுவெல அரசாங்க வைத்திய சாலைகளைப் பயன்படுத்திக் கொள்ள சைட்டம் வேண்டுகோள் விடுத்தது. அது இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்பது சைட்டத்தின் எதிர்பார்ப்பு.

ஆனால், இலங்கை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) சைட்டம் மாணவர்களுக்கு அவ்வாறு வழங்க முடியாது என்று ஆட்சேபித்து வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் தனியார்... (01 ஆம் பக்கத் தொடர்)

நீதியரசர் ஸலீம் மர்சூப் சார்பான குழுவினரும் 09 கையெழுத்துக்களுடன் தமது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர்.

எனினும் நீதியமைச்சர் தலதா அதுகோரளவிடம் கையளிக்கப்பட்ட இறுதி அறிக்கையில் ஜம்மியதுல் உலமா சார்பில் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் இருந்த விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது. அத்தோடு கூட்டங்களுக்கே சமுகமளிக்காத இருவரும், குழுவில் உத்தியோகபூர்வமாக அங்கம் வகிக்காத ஒருவரும் நீதியரசர் ஸலீம் மர்சூப் சார்பான அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளதாகவும் அறிய வருகிறது.

தவிரவும் நீதியமைச்சிடம் கையளிக்கப்பட்ட அறிக்கை குழுவில் போதுமான அங்கத்தவர்களுக்கு வாசித்துக் காட்டப்படவில்லை என்றும், அறிக்கையைக் கையளிப்பதற்கும் குழுவில் பலருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் குழுவில் சிலர் சுட்டிக் காட்டியுள்ளனர். ஆனாலும் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் தினத்தில் சில முஸ்லிம் பெண் சட்டத்தரணிகள் நீதிமன்ற வளாகத்துக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தியதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பெரும்பான்மையினரின் ஒப்புதலுடன் கைச்சாத்தான அறிக்கையில், சிப்லி அஸீஸ் PC, பாயிஸ் முஸ்தபா PC, முன்னாள் நீதிபதி அப்துஸ் ஸலாம், நீதிபதி மக்கி மொஹமட், சட்டத்தரணி பஸ்லத் சஹாப்தீன், அஷ். ரிஸ்வி முப்தி, அஷ். முபாரக் மதனி, கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, சட்டத்தரணி நத்வி பஹாஉதீன் ஆகியோர் அடங்குகின்றனர்.

ஒன்பது வருட முயற்சிக்குப் பின்னரும் ஒரு தீர்வினை எட்டாத நிலையிலேயே இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை முஸ்லிம் சமூகம் வெட்கிக்க வேண்டியதாகும்.

## இஸ்லாமிய... (12 ஆம் பக்கத் தொடர்)

இதன்மூலம் ஆட்சியாளன் தனது செயற்பாடுகளுக்காக உம்மாவுக்கு முன்னால் பொறுப்புக் கூற வேண்டியவனாக உள்ளான் என்பதும் அவனைக் கண்காணித்து விசாரணைக்கு உட்படுத்தும் உரிமை உம்மாவுக்கு உள்ளது என்பதும் உறுதியளிக்கின்றது. உம்மா இதனைச் சாதிப்பதற்காக காலத்துக்குப் பொருந்தக்கூடிய பொறிமுறைகளைக் கைக்கொள்ள முடியும்.

''நல்லாட்சிக்கு இன்றியமையாத இவ்வடிப்படை விதிகள் நிதர்சனமாகவும் ஒன்றிலொன்று அத்துமீறாத சமநிலையோடும் நிறைவேற்றும் பட்சத்தில், இஸ்லாமிய ஆட்சியொழுங்கானது வடிவங்களையோ நாமங்களையோ குறித்து அலட்டிக் கொள்வதில்லை.'' என பன்னா விளக்குகிறார்.

அவ்வாறே சபையில் பாராளுமன்றத்தில் பெண்களுக்குரிய இடமும் பிரதிநிதித்துவமும் வழங்கப்படல் வேண்டும்.

தேர்தல்கள் ஒழுங்குபடுத்தப்படுவதோடு உம்மாவை அவை சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான உத்தரவாதங்களும் நியமங்களும் இடப்பட வேண்டிய அவசியத்தையும் இமாம் பன்னா சுட்டிக்காட்டுகிறார். அப்போது தான், அது போலியான நடைமுறையாகவும், குறிப்பிட்ட சிலர் பொதுமக்களை ஏமாற்றுகின்ற தந்திர வழியாகவும் மாறுவது தவிர்க்கப்படும்.

வெறுமனே யாப்பில் வசனங்களை உறுதிப்படுத்துவதோடு மாத்திரம் நின்றுவிடாமல், அவற்றைச் செயற்படுத்தும் முறைமையின் முக்கியத்துவத்தையும் இமாம் பன்னா வலியுறுத்துகின்றார். உருவங்களும் வடிவங்களும் மாறுபட்டாலும் அடிப்படைகளும் மூல விதிகளும் எப்போதும் துணையாகக் கொள்ளப்பட வேண்டும்.

## பயங்கரவாத... (01 ஆம் பக்கத் தொடர்)

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஆசியப் பிராந்திய பணிப்பாளர் ப்ரட் அடம்ஸ், அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பில் சீரியஸாகச் சிந்திப்பதாக இருந்தால், சர்வதேச நியமங்களுக்குட்பட்ட சட்டங்களை அமுல்படுத்துவதில் அரசு முன்னுரிமை காட்ட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

''ஆதாரமின்றித் தடுத்து வைத்தல், இலங்கையின் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான துஷ்பிரயோகங்கள்'' என்ற தலைப்பிலான 46 பக்கங்கள் அடங்கிய இந்த அறிக்கையில் இலங்கையில் தொடரும் சித்திரவதைகளுக்கான குறிப்பிடத்தக்க பங்களிப்பை இந்தச் சட்டம் வகித்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1979 இல் உருவாக்கப்பட்ட இந்தச் சட்டம், குறிப்பாக எல்ரீரீஈ யை அடக்குவதற்குப் பயன்பட்டபோதும், 2009 மேயில் குறித்த யுத்தம் முடிவடைந்த பின்னரும் சட்டம் அமுலிலிருப்பதாகவும் அது சுட்டிக் காட்டியுள்ளது. இந்தச் சட்டத்தினூடாக பிடிவிறாந்து இன்றி யாரையும் கைது செய்யவும், நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்காமலே தொடர்ந்து 18 மாதங்கள் ஒருவரைத் தடுத்து வைக்கவும் முடியும்.

இந்தச் சட்டத்துக்குப் பதிலாக அரசு பல சட்டங்களை முன்மொழிந்த போதும் அவை எதுவும் சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டதாக அமையவில்லை என அந்த அறிக்கை மேலும் கூறுகிறது. ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரிலிருந்து, ஜீஎஸ்பி வரிச்சலுகை வரையிலும், சர்வதேச அளவிலான பயங்கரவாத முறியடிப்புச் சட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

## ராவய... (01 ஆம் பக்கத் தொடர்)

தனது பதவியை ராஜினாமாச் செய் துள்ளார். இவரது இடத்துக்கு முன்னர் இருதின, ஸத்ஹன்ட பத்திரிகைகளில் கடமையாற்றிய விமல்நாத் வீரரத்ன

விக்டர் ஐவனினால் நியமிக்கப்பட்டுள்ளார். ராவய ஊடகவியலாளர்களில் மஹிந்த ஆட்சியின் போது லப்டொப்பும், வட்டியில்லாக் கடனாக ஒரு மில்லியன் ரூபாவும் பெற்ற ஒரே ஊடகவியலாளராக இவர் தற்போது ராவயவில் இணைந்துள்ளார்.

பத்திரிகையாசிரியர் சுதந்திரத்தில் தலையிடுவதாக இருப்பதால் ஊடக அமைச்சர் என்ற வகையிலும், ராவய பப்ளிசர்ஸ் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ளதால் நிதியமைச்சர் என்ற வகையிலும் அமைச்சர் மங்கள சமரவீர இந்த விவகாரத்தில் தலையிட வேண்டுமென, ராவய நிதியத்துக்கு உதவியளித்தவர்கள் கோரி வருகின்றனர்.

இந்தவகையில் இது தொடர்பாக விசாரிப்பதற்கு ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவர் தனிநபர் ஆணைக்குழுவாக அமைச்சரினால் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வாக்காளர்களாகிய... (03 ஆம் பக்கத் தொடர்)

அபிலாஷைகளை நிறைவேற்றியதா அல்லது முஸ்லிம் சமூகத்தின் உரிமையை அடகு வைத்ததா, அதுபோன்று நாட்டின் பொது விவகாரங்களில் எவ்வாறான நிலைப்பாடுகளை நாட்டுக்கு நலன் பயக்கும் விதத்தில் முடிவு எடுத்தது, அக்கட்சி முக்கியப்படுத்தியது, நாட்டின் நலனை அல்லது தான் சேர்ந்துள்ள பெரும்பான்மைக் கட்சியின் தலைமையை அல்லது அக்கட்சியை அதிகாரம் மிக்கதாக மாற்றுவதற்காக நாம் தெரிவு செய்யும் கட்சி முஸ்லிம் அரசியலின் தேவையை நிறைவு செய்யும் வகையிலான என்ன திட்டங்களை முன்வைத்துள்ளன, அதன் பொருத்தப்பாடு அத்திட்டத்துக்கான சமூக அங்கீகாரம் என்பன பற்றியும் மிக சீரியஸாக நாம் கேள்விக்குட்படுத்த வேண்டும்.

இந்த இடத்தில் தான் நாம் எப்போதும் பெரும்பான்மைக் கட்சிக்கா வாக்களிப்பது, அல்லது எமது சிறுபான்மைக் கட்சிக்கா அல்லது புதிதாக வருகின்ற கட்சிகளுக்கா வாக்களிப்பது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். சில போது நாம் புதிய கட்சிகளை மாற்றத்துக்கான ஒரு அடையாளமாக தெரிவு செய்ய முற்படும் போது, பழைய எமது கட்சிகள் முன்வைக்கும் ஒருவாதம், எமது சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்தப் போகிறார்கள், முஸ்லிம் சமூகத்தின் அரசியலைப் பலவீனப்படுத்தப் போகிறார்கள் என்பதாகும்.

இந்த இடத்தில் வாக்காளர்களாகிய நாம் சிந்திக்க வேண்டிய இடம் தான், கடந்த பல தசாப்தங்களாக நாம் இவ்வாறு விமர்சிக்கும் கட்சிகளுக்கு வழங்கிய ஆதரவின் மூலம் சமூகமும் நாடும் பெற்றுக் கொண்ட நன்மைகள் என்ன என்பதாகும்.

எனவே தான் எமது சமூகத்தின் தற்போதுள்ள பழமை வாய்ந்த கட்சிகளுக்குள் எமக்கான தீர்வு இல்லை என்றால், புதிதாக வருகின்ற கட்சிகளைப் பலப்படுத்தி அதனூடாக எமது இலக்குகளை அடைய முற்பட வேண்டும். இதற்கும் எமக்கான சந்தர்ப்பம் இல்லை என்றால், முற்போக்கான பொதுவான நலன்களுக்கு, உரிமைகளுக்கு, நீதிக்கு முக்கியத்துவம் வழங்கிச் செயற்படும் பெரும்பான்மை சமூகத்தின் அடுத்த கட்சிகளை நாம் தெரிவு செய்வதனூடாக எமது சமூகத்தின், நாட்டின் அபிவிருத்தியை முற்படுத்துபவர்களாக நாம் இருக்க எமது தெரிவு இருக்க வேண்டும்.

வாக்காளர்களாகிய எமக்கு இன்னுமொரு முக்கியமான பணி காத்திருக்கிறது. நாம் எல்லோரும் ஒரு வேட்பாளரைத் தெரிவு செய்வது தான் நமது பணி என்று மட்டும் நினைத்து விடுகிறோம். இதன் காரணமாக யார் வேட்பாளராகப் போட்டியிடுகிறாரோ, அவர் தனது வெற்றிக்கான பிரச்சாரப் பணியை அவர்களிடம் மட்டுமே ஒப்படைத்து விடுகிறோம். இப்பத்தியை வாசிக்கும் வாசகர்களாகிய எமக்கு, ஒரு மகத்தான பணி இருக்கின்றது. அது என்ன? எம்மைப் போன்ற வாக்காளர்களை தெளிவுபடுத்தும் பிரச்சாரப் பணி.

ஏன் அது முக்கியத்துவம் பெறுகிறது என்றால், மக்களுக்கு அவர் களது வாக்கும் பலமும் பெறுமதியும் விளங்குவதில்லை. சாதாரண மக்கள் தமது வாக்குகளை பணத்துக்காகவும், தேர்தல் கால நன்கொடைகளுக்காகவும், அல்லது வேட்பாளர்களின் அச்சுறுத்த லுக்கும் பயந்து தமது பெறுமதியான வாக்குகளை நிர்ப்பந்தத்தின் காரணமாக வேட்பாளர்களுக்கு வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் இம்முறை நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் அதிகமாக இடம் பெற வாய்ப்புக்கள் உள்ளன. எனவே தான் நாம் ஏற்கனவே இப்பந்தியில் சுட்டிக் காட்டிய விடயங்களை எம்மைச் சார்ந்திருக்கின்ற எமது உறவுகள், நண்பர்கள், பொதுமக்களுக்கு சரியான புரிதல்களை நாம் வழங்க முயற்சிக்க வேண்டும். இது எமது பணி என்பதை நாம் மானசீகமாக உணர வேண்டும். இதற்காகப் பாடுபட வேண்டும். அப்போதுதான் எமது எதிர்பார்ப்பான நீதியான, நேர்மையான ஓர் அரசியலை நாம் எதிர்பார்க்க முடியும்.

எனவே வாக்காளர்களாகிய நாம், இம்முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவோமானால், மாற்றத்தின் அடையாளங்களை இத்தேர்தலில் மட்டுமல்ல, அடுத்தடுத்து வரப் போகும் எத்தனையோ தேர்தல்களிலும் தாக்கம் செலுத்தும் வகையில் இத்தேர்தலில் எமது தெரிவு கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் ஒரு செய்தியைச் சொல்வதாக அமைய வேண்டும். நேர்மையான எதிர்பார்ப்புக்களும் அதற்கான உழைப்புக்களும் அதற்கான பிரார்த்தனைகளும் வெற்றியைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கை, வாக்காளர்களாகிய நமக்கு வேண்டும். ஏனென்றால் சத்தியம், அசத்தியம் இவற்றின் இறுதி வெற்றி சத்தியத்துக்குத்தான் என்பதே வரலாற்று உண்மை என்பது யாராலும் மறுக்க முடியாது.

## வாக்காளனின்... (03 ஆம் பக்கத் தொடர்)

மஹிந்த ராஜபக்ஷவுடைய ஆட்சிக் காலம் என்பது இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மறக்க முடியாத கறைபடிந்த அத்தியாயங்கள் நிறைந்த காலப்பகுதி. அதன் உச்சகட்டமாகத் தான் அளுத்கம கலவரம் நடந்தது. தற்போது இந்தக் கலவரங்களுக்குத் தான் காரணமல்லவெனவும், அதன் சூத்திரதாரி தற்போதைய அரசில் அமைச்சராக இருக்கிறார் எனவும் முஸ்லிம்களின் வாயில் சூப்பியை அழுத்த மஹிந்த ராஜபக்ஷமுனைகிறார். இந்த சூத்திரதாரி தனது அமைச்சரவையிலும் அமைச்சராக இருந்தவர் என்பதை தனது ஊழல்களை மறைக்க முனைவது போலவே மறைக்க முனைகிறார். இவருடைய ஆட்சியில் முஸ்லிம்களுக்கு நடந்த அநியாயங்களின் நீட்சியாகத் தான் புதிய வட்டாரப் பிரிப்பு அதாவுல்லா உள்ளூராட்சி அமைச்சராக இருந்த காலப் பிரிவில் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வட்டாரப் பிரிப்பு முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதைத் தவிர வேறெந்த நன்மையையும் நாட்டுக்குக் கொண்டுவரவில்லை. இந்த நிலையிலேயே சுதந்திரக் கட்சியின் மற்றுமொரு அமைச்சரான பைஸர் முஸ்தபா மூலமாக மைத்திரி - ரணில் அரசு புதிய வட்டாரப் பிரிப்பின் அடிப்படையில் தேர்தலை நடத்துகிறது. இதுவும் வாக்காளன், குறிப்பாக முஸ்லிம் வாக்காளனுடைய நலனுக்காகக் கொண்டுவரப்பட்டதல்ல என்பது தேர்தல் முடிவடைகின்ற வேளையில் தெளிவாகத் தெரியவரும்.

இம்முறைய உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளனை விட அரசியல் கட்சிகள் முண்டு கட்டிக் கொண்டு இறங்கியிருப்பதன் காரணம் இதுதான். மூன்று வருட இழுத்தடிப்பின் பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுகிறது. 2015 ஆம் ஆண்டே நடைபெற்றிருக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்கள் அரசியல்வாதிகளினதும் அரசியல் கட்சிகளதும் தேவைக்காகவே பிற்போடப்பட்டது. இக்காலப்பிரிவில் தனது பிரதேசத்து அபிவிருத்திக்காக வாக்காளன் ஏங்க வேண்டியிருந்தது. மீத்தொட்டுமுல்ல குப்பை மேட்டு அழிவுகள் கூட உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு புதிய உள்ளூராட்சி சபை தெரிவு செய்யப்படாத நிலையிலேயே ஏற்பட்டன. அப்போதெல்லாம் வாக்காளனுக்கு உள்ளூர் அதிகார சபைகள் தேவைப்பட்டன. ஆனால், அரசியல்வாதிகளுக்குத் தேவையிருக்கவில்லை. இப்போது ஒவ்வொரு கட்சிக்கும் தம்மைத் தகவமைத்துக் கொள்ளவும், உரசிப் பார்த்துக் கொள்ளவும் ஒரு தேர்தல் தேவைப்படுகிறது. மஹிந்த அணிக்கு தமது ஊழல்களை மறைத்துக் கொள்ளவும், ஐதேகவுக்கு தமது ஊழல்களை ஒளிப்பதற்கும் இந்தத் தேர்தல் தேவைப்படுகிறது. இது வாக்காளன் வேண்டிப் பெற்ற தவமல்ல என்பதற்கு இவை நிர்மலமான சாட்சியங்கள்.

என்வே, வாக்காளன் துள்ளிக் குதிக்கின்ற அளவுக்கு இது பெரிய பொதியை அவனுக்குக் கொடுக்கப் போவதில்லை. வாக்காளனின் தலையில் மிளகாய் அரைத்து அவனின் வாயில் பொடியைத் திணிக்கின்றதாகத் தான் தேர்தல் அமையப் போகிறது. இந்த இடத்தில் வாக்காளன் தான் விழித்துக் கொள்ள வேண்டும். தனக்கு அநியாயம் இழைக்கக் கூடிய, தேர்தலுக்குப் பின் நீ யார் என்று தன்னையே கேள்வி கேட்கக் கூடிய அபேட்சகர்களைத் தெரிவு செய்து தனது கழுத்தில் தானே தொண்டைப் போட்டுக் கொள்ளும் பொதுமக்(கு)களாக வாக்காளர்கள் மாறிவிடக் கூடாது. அரசியல் கட்சிகள் தெரிவு செய்தவர்களைத் தான் தேர்தலில் தெரிந்தெடுக்க வேண்டும் என்ற அவசியம் வாக்காளனுக்கு இல்லை. வாக்காளன் இப்படித் தான் முட்டாள்தனமாக நினைப்பான் என்றெண்ணிக் கொண்டு தான் அரசியல் கட்சிகள் மோசமான அரசியல் கலாச்சாரத்துக்கு தூபமிடும் வகையில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. ஆகவே கட்சியையன்றி தனக்காக கச்சை கட்டுகின்ற, நேர்மையான, தூய்மையான வேட்பாளர்களைத் தெரிவு செய்வது இந்தத் தேர்தலில் புத்தியுள்ள வாக்காளனின் பணியாகவிருக்கப் போகிறது. கட்சிகளை நம்பி முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைச் சிதைவடையச் செய்யாமல், தமது வாக்குகளை கூட்டாகப் பயன்படுத்தி எமக்கெதிரான சூழ்ச்சிகளை முறியடிப்பது என்பது தான் வாக்காளன் சமூகத்துக்குக் கொடுக்கப் போகின்ற வாக்குறுதியாக இருக்கப் போகிறது.

## முஸ்லிம்கள்... (04 ஆம் பக்கத் தொடர்)

விஞ்ஞாபனங்களை ஏற்கெனவே வெளி யிட்டிருக்கின்றன. ஆனால், பிரதான முஸ்லிம் கட்சிகள் கொள்கைப் பிரகடனங்களை முன்னிலைப் படுத்தியிருந் தாலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு உரித்தான, அதாவது உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் கிடைத்தால், என்ன செய்வோம் என்ற அடிப்படை யில், தேசிய மட்டத்திலான ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடவில்லை என்பது கவனிப்புக்குரியது.

முஸ்லிம் கட்சிகள், ஒரு சின்னத்தில் அல்லாமல் இரண்டு முதல் ஆறு சின்னங்கள் வரை, பல அவதாரங்களை எடுத்திருப்பதால், தேசிய மட்டத்திலான ஒரு விஞ்ஞாபனத்தை வெளியிட முடியாத சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டிருக்கின்றன. இந்த இலட்சணத்திலும் தேர்தல் மேடைகளில் அள்ளிவீசப்படும் வாக்குறுதிகளுக்கு ஒன்றும் குறைச்சலில்லை. குறிப்பாக, இவ்வாறான வாக்குறுதிகளைக் கேட்கும்போதே தெரிகின்றது, அவை ஏட்டுச் சுரைகாய்கள் என்று.

இவ்வாறான வாக்குறுதிகளை அள்ளி வீசுவோரின் கடந்த காலத்தை வைத்து நோக்குகின்ற ஒவ்வோர் அடிமட்ட வாக்காளனுக்கும், இந்த வாக்குறுதிகள் எல்லாம் தம்மிடம் இருந்து வாக்குகளை எடுத்துச் செல்வதற்காக முன்வைக்கப்படும் பசப்பு வார்த்தைகளின் ரகத்தைச் சேர்ந்தவை என்பது நன்றாகவே புரிகின்றது. ஆனாலும், இதையெல்லாம் தாண்டியும் இந்தத் தேர்தலில் பொய் வாக்குறுதிகளால் ஒரு தொகுதி மக்கள் ஏமாறுவதற்கு நிறையவே வாய்ப்பிருக்கின்றது.

'பூனையைப் பார்த்தால் தெரியும் அது எலி பிடிக்குமா இல்லையா' என்று, சொல்வார்கள். எனவே, ஒவ்வோர் அரசியல்வாதியையும் நன்கு அளந்து பார்த்து, கடந்த காலத்தை நினைத்துப் பார்த்து, மக்கள் வாக்களிக்க வேண்டும். அளவுக்கதிகமாக நம்பிக்கை வைத்து, அளவுக்கதிகமாக ஏமாறக் கூடாது என்பதுடன், ''இதுதான் கடைசிமுறை; இந்த முறை மட்டும் அந்தக் கட்சிக்கு வாக்களித்துப் பார்ப்போம்'' என்று எண்ணி வாக்களித்து, முஸ்லிம்கள் மீண்டும் ஏமாளிகளாகி விடக் கூடாது.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline 0777 581 661 People's Bank A/c: 056100158078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கைதான் வாழ்க்கை

இது சுறுசுறுப்பு டானிக்... காலையில் ஒரு ஸ்பூன்... மாலையில் ஒரு ஸ்பூன் சாப்பிட்டால் போதும்... நாள் பூராவும் சுறுசுறுப்பு கிடைக்கும்!'' என்று கூவி விற்றான்.

நிறைய பேர் வந்தார்கள். வாங்கினார்கள்... சாப்பிட்டார்கள்...

சுறுசுறுப்பாகத்தான் இருந்தது. கொடுத்த காசு வீண் இல்லை. மருந்து தீர்ந்ததும் மறுபடியும் அந்த வியாபாரியைத் தேடினார்கள். கிடைக்கவில்லை.

இரண்டு ஆண்டுகள் கழித்து... அதே வியாபாரி பலூன் விற்றுக் கொண்டிருந்தான்.

''அடடா! உங்களை எங்கேயெல்லாம் தேடுவது... அந்த சுறுசுறுப்பு டானிக் இன்னும் தேவை... எங்கே இருந்தீர்கள் இதுவரைக்கும்...?''



''சிறையிலே இருந்தேன்!''

''ஏன்?''

''போலி மருந்து விற்பனை பண்ணினதுக்காக இரண்டு வருடம் தண்டனை!''

''உங்க மருந்து போலி மருந்தா? யார் சொன்னது அப்படி? உங்க மருந்தை சாப்பிட்டு நான் சுறுசுறுப்பு பெற்றது உண்மை!''

''அப்படி இல்லே! நான் வெறும் தண்ணியிலே உப்பு, மிளகு, சீரகம், வெந்தயத்தைப் பொடி பண்ணி கலந்து வித்தேன்.''

''அப்படின்னா... எங்களுக்கு சுறுசுறுப்பு கொடுத்தது...?''

''அது உங்கள் நம்பிக்கை! நம்பிக்கை தான் வாழ்க்கையின் உந்து சக்தி, மருந்து மாத்திரை அல்ல!''

மீள்பார்வை

தொகுப்பு: அஸாருதீன்

# பகைமை உணர்வும் பழி வாங்கும் குணமும்



ஒரு நாள் ஆசிரியர் வகுப்பறையில் பாடம் நடத்திகொண்டிருக்கும் போது மாணவர்களிடம் இந்த கேள்வியை கேட்டார். ''மன்னிக்க முடியாத கோபம் யார் மீதேனும் இருக்கிறதா உங்களுக்கு? சந்தர்ப்பம் கிடைத்தால் யாரையேனும் பழிவாங்கத் துடிக்கிறீர்களா, நீங்கள்?''

வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் 'ஆமாம்... சேர்' என்றார்கள். ஆசிரியருக்கு மிகுந்த வியப்பு, ஒவ்வொருவராக அழைத்து ''மன்னிக்கவும் மறக்கவும் முடியாத அளவுக்கு எத்தனை கோபங்கள் உள்ளன?'' என்று கேட்டார். ஒவ்வொருவரும் ஐந்து, பத்து என்று அடுக்கி கொண்டே சென்றார்கள்.

மாணவர்களுக்கு பழிவாங்கும் எண்ணம் தவறு என்று புரிய வைக்க நினைத்தார். ஒவ்வொரிடமும் ஒரு பையை கொடுத்தார். வகுப்பறைக்கு ஒரு கூடையில் தக்காளி கொண்டுவரப்பட்டது. யார் மீது எத்தனை பழிவாங்கும் எண்ணம் உள்ளதோ அத்தனை தக்காளிகளை தங்கள் பையில் எடுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இந்தத் தக்காளி பை எப்போதும் உன் கூடவே இருக்கவேண்டும், தூங்கும் போதும் அருகிலேயே வைத்திருக்க வேண்டும் எனக் கட்டளை யிட்டார். ஒன்றும் அறியாமல் தலையை ஆட்டினார்கள் மாணவர்கள். ஓரிரு நாட்கள் ஒரு குறையும் இல்லை. ஆனால், அடுத்தடுத்த நாட்களில் தக்காளிகள் அழுகி நாறத் துவங்கின. நாற்றம் அடிக்கும் பையுடன் வெளியே செல்ல மாணவர்கள் கூச்சப்பட்டனர். ஒரு கட்டத்தில்... ஆசிரியரிடம் சென்று, பைகளைத் தூக்கி எறிய அனுமதி கேட்டனர்.

மெல்லப் புன்னகைத்த ஆசிரியர், ''நாற்றம் வீசுபவை தக்காளி மட்டுமல்ல அந்த நாற்றத்தைப் போலவே, உங்கள் பகைமை உணர்வும் பழி வாங்கும் குணமும் மனதுக்குள் அழுகி நாறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, பகை-பழியை மறந்து மன்னித்து விடுவதாக இருந்தால், தக்காளிப் பையை தூக்கி எறியுங்கள்'' என்றார்!

அப்போது தான் மாணவர்களுக்கு மனத் தெளிவு பிறந்தது. அப்போதே தக்காளிப் பைகளை குப்பைத் தொட்டியில் வீசிய மாணவர்கள், பகை மறந்து ஒருவரை ஒருவர் ஆரத் தழுவிக் கொண்டு வகுப்பறைக்குத் திரும்பினர்.

நாம் ஒவ்வொருவரும் இப்படித்தான் பழிவாங்கும் எண்ணத்தோடு காத்திருக்கிறோம், தக்காளிப் பை நாற்றத்தோடு.

பகைமை மறப்போம்; பகுத்தறிவோடு பயில்வோம்.

# நேர்மை



ஒரு மிகப் பெரிய நிறுவனத்தின் முதலாளி தனக்கு வயதாகி விட்டதால் அவர் நிறுவனத்தின் பொறுப்பை அவரிடம் வேலை செய்யும் ஒரு திறமையானவரிடம் ஒப்படைக்க முடிவு செய்தார். எல்லாரும் தன் அறைக்கு வருமாறு கட்டளை இட்டார். உங்களில் ஒருவர் தான் என் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க வேண்டும், அதனால் உங்களுக்கு ஒரு போட்டி வைக்க போகிறேன். யார் வெற்றியடைகிறார்களோ அவர் தான் அடுத்த மேலாளர் என்றார்.

என் கையில் ஏராளமான விதைகள் இருக்கின்றன. இதை ஆளுக்கு ஒன்று கொடுப்பேன். இதை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு தொட்டியில் நட்டு, உரம் இட்டு தண்ணீர் ஊற்றி நன்றாக வளர்த்து அடுத்த வருடம் என்னிடம் காட்ட வேண்டும். யார் செடி நன்றாக வளர்ந்து இருக்கிறதோ அவரே என் கம்பனியின் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றார்.

அனைவரும் ஆளுக்கு ஒரு விதை வாங்கி சென்றனர். அந்த கம்பனியில் வேலை செய்யும் ரபீக்கும் ஒரு விதை வாங்கி சென்றான். தன் மனைவியிடம் முதலாளி சொன்ன அனைத்தையும் சொன்னான். அவன் மனைவி தொட்டியும் உரம் தண்ணீர் எல்லாம் அவனுக்கு கொடுத்து அந்த விதையை நடுவதற்கு உதவி செய்தாள்.

ஒரு வாரம் கழிந்தது நிறுவனத்தில் இருக்கும் அனைவரும் தங்கள் தொட்டியில் செடி வளர ஆரம்பித்து விட்டது என்று பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். ஆனால் ரபீக்கின் தொட்டியில் செடி இன்னும் வளரவே ஆரம்பிக்கவில்லை.

ஒரு மாதம் ஆனது செடி வளரவில்லை, நாட்கள் உருண்டோடின. ஆறு மாதங்கள் ஆனது. அப்பொழுதும் அவன் தொட்டியில் செடி வளரவே இல்லை. நான் விதையை வீணாக்கிவிட்டேனா என்று புலம்பினான். ஆனால் தினந்தோறும் செடிக்கு தண்ணீர் ஊற்றுவதை நிறுத்தவில்லை. தன் தொட்டியில் செடி வளரவில்லை என்று அலுவலகத்தில் யாரிடமும் சொல்லவில்லை.

ஒரு வருடம் முடிந்து விட்டது. எல்லாரும் தொட்டிகளை முதலாளியிடம் காட்டுவதற்காக எடுத்து வந்தார்கள். ரபீக் தன் மனைவியிடம் காலி தொட்டியை நான் எடுத்து போகமாட்டேன் என்று சொன்னான். அவன் மனைவி அவனை சமாதானப்படுத்தி நீங்கள் ஒரு வருடம் முழுக்க உங்கள் முதலாளி சொன்ன மாதிரி செய்தீர்கள். செடி வளராததற்கு நீங்கள் வருந்த வேண்டியதில்லை. நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். தொட்டியை எடுத்து சென்று முதலாளியிடம் காட்டுங்கள் என்றாள்.

ரபீக்கும் காலித் தொட்டியை அலுவலகத்திற்கு எடுத்து சென்றான். அடுத்தவர்களின் தொட்டிகளைப் பார்த்தான். விதவிதமான செடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயரத்தில் இருந்தன. இவன் தொட்டியை பார்த்த அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

முதலாளி அனைவரையும் தன்னுடைய அறைக்கு வருமாறு சொன்னார். அருமை, எல்லாரும் செம்மையாகச் செடியை வளர்த்து உள்ளீர்கள். உங்களில் ஒருவர் தான் இன்று பொறுப்பை ஏற்றுக் கொள்ளப் போகிறீர்கள் என்றார். எல்லாருடைய செடியையும் பார்வை இட்டார். ரபீக் கடைசி வரிசையில் நின்றிருந்தான். அவனை அருகே வருமாறு அழைத்தார்.

ரபீக் தன்னை வேலையை விட்டு நீக்கத்தான் கூப்பிடுகிறார் என்று பயந்து கொண்டே சென்றான். முதலாளி ரபீக்கிடம் உன் செடி எங்கே என்று கேட்டார். ஒரு வருடமாக அந்த விதையை நட்டு உரமிட்டு தண்ணீர் விட்டதை விலாவாரியாகச் சொன்னான்.

முதலாளி ரபீக்கை தவிர அனைவரும் உட்காருங்கள் என்றார். பிறகு ரபீக் தோளில் கையை போட்டு கொண்டு நமது கம்பனியின் நிர்வாகத்தை ஏற்று நடத்தப் போகிறவர் இவர்தான் என்றார். ரபீக்கிற்கு ஒரே அதிர்ச்சி. தன் தொட்டியில் செடி வளரவே இல்லை. பிறகு ஏன் நமக்கு இந்தப் பொறுப்பை கொடுக்கிறார் என்று குழம்பிபோனார்.

சென்ற வருடம் நான் உங்களில் ஆளுக்கு ஒரு விதை கொடுத்து வளர்க்கச் சொன்னேன் அல்லவா? அது அனைத்தும் அவிக்கப்பட்ட விதைகள். [Boiled seeds]. அந்த விதைகள் அவிக்கப்பட்டதால் அது முளைக்க இயலாது. நீங்கள் அனைவரும் நான் கொடுத்த விதை முளைக்காததால் அதற்குப் பதில் வேறு ஒரு விதையை நட்டு வளர்த்துக் கொண்டு வந்தீர்கள். ரபீக் மட்டுமே நேர்மையாக நடந்து கொண்டான், ஆகவே அவனே என் நிறுவனத்தை நிர்வகிக்க தகுதியானவன் என்றார்.

நாம் சொல்லும் சொல், நாம் பயணிக்கும் பாதை நேர்மையாக இருந்தால் வெற்றிகள் நம்மைத் தேடி வரும்...!

வாழ்க்கையில் நேர்மையாக இருக்க முயல்வதும் ஒரு போராட்டம் தான். உண்மையும் நேர்மையும் தர்மத்தை பாதுகாக்கும், நேர்மை ஒரு போதும் வீண்போகாது. நேர்மையை விதையுங்கள். பதவியும் பணமும் தேடிவரும்.

# மரணம்

மனித வாழ்வின்
முடிவுதான் மரணமா...?
இல்லை
அதுதான் ஆரம்பம்


பஞ்சமா பாதகங்களைப்
புரிந்து விடடு -சட்டத்தை
சட்டைப் பைக்குள் வைத்தவன்
பரிகாரம் காணும் நீதிமன்றம்

அதிகாரத்தை
அடுத்தவன் சுதந்திரத்தின் மீது
பாவித்தவன்
படைத்தவனின் முன்
அனைத்தையும் இழந்து
மண்டியிட்டுக் கிடக்கும்
சிறைக்கூடம்

அது
வாழ்க்கைப் பாடத்தின்
பரீட்சைக் கூடம்
உலகின் செயல்களுக்கு
அது அறுவடைக் காலம்


'ஆரம்பம்'
சென்ற கொள்கைக்கு
'முடிவு'
என்ற யதார்த்தம்

தொடங்கிய பயணத்தை
சென்றடைய வேண்டிய
சொந்த வீடு
ஆயத்தப்படுத்துவோம்,
எமது
நிஜ வாழ்வை நோக்கி...!



எம்.எஸ்.எம். சிறாஜ்
வெறும்மாதகம

# நெருங்கும் போது நொறுங்கும்



தேர்தல் நெருங்க நெருங்க
நெஞ்சங்கள் நொறுங்கும்

குழிதோண்டிப் புதைப்பர்
வண்டவாளங்களை
தோண்டி எடுத்து விளம்பரப்படுத்துவர்
சாதனை என.

என்றோ செத்துவிட்ட
நல்லாட்சிப் பாம்புக்கு
உயிர்கொடுக்க முன்வரலாம்
புதைக்கப்பட்ட சடலங்கள் கூட
தோண்டியெடுக்கப்படலாம்

மோசடிக் கும்பலுக்கு
சட்ட நடவடிக்கை எனும்
பழைய சித்திரத்துக்கு
புதுவர்ணம் பூசப்படலாம்
கிறீஸ் பேயை அழைத்துவந்து
அறிமுகப்படுத்தலாம்

பள்ளிவாசல் உடைப்பவர்கள்
நாங்கள் அல்ல என்று
பல்லிச் சாத்திரம்
பேசித் திரியலாம்
சிறுபான்மையின் பிரச்சினை,
வாழ்க்கைச் செலவு...
நல்ல சவப்பெட்டி செய்து
குழிதோண்டிப் புதைத்து விடலாம்
பொதுசனங்களும் சாம்பிராணி பிடித்து
சந்தோஷப்படலாம்

இவர்கள்...
மாயக்கல்லிமலை மாயக்கள்வர்களுக்கு
மாலை அணிவித்தவர்கள்.
அளுத்கமையை
அடக்கஞ்செய்தவர்கள்
கிந்தொட்டைக்கு வந்த
ஜின்கங்கை ஜின்கள்

இன்னும்
எதைத் தோண்டுவார்களோ ?
எதைப் புதைப்பார்களோ ?
நெஞ்சங்கள் நொறுங்குகின்றன
தேர்தல் நெருங்குகையில்

-கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்-

## சமஷ்டி என்ற... (01 ஆம் பக்கத் தொடர்)

சமஷ்டிக்கு பொருத்தமான பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக மத்தியிலும் மாகாணத்திலும் அந்தந்த பகுதியில் வாழும் மக்களின் இறைமையின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப் படவேண்டும். எனவே அதில் மாற்றங்கள் செய்யப் படவேண்டும். அது தொடர்பில் நாம் கவனமாகவும் பொறுப்புடனும் செயற்பட்டு வருகின்றோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டமொன்றில் அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது, முஸ்லிம் மக்களுடன் பேசி இணக்கப்பாட்டுக்கு வந்து பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய கடமைப் பாடு எமக்குள்ளது. அதில் நாம் எல்லோரும் பங்கெடுக்க வேண்டும். எல்லோரும் ஒன்றிணைய வேண்டும். தந்தை செல்வாவின் கருத்துக்கள் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சார்பாகவே இருந்தது. அதை முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

செல்வா - பண்டா ஒப்பந்தமாக இருந்தாலும் சரி, டட்லி - செல்வா ஒப்பந்தமாக இருந்தாலும் சரி வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்றே உள்ளது. ஆகவே, வடக்கு, கிழக்கை இணைப்பதற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒத்துழைத்து ஒருவரின் உரிமையை ஒருவர் மதித்து நல்லதொரு முடிவுக்கு வரவேண்டும் என்றும் தெரிவித்தார்.

## சிகரட்... (01 ஆம் பக்கத் தொடர்)

2017 ஆம் ஆண்டு இந்த வருமானம் 86 பில்லியனாக குறைந்துள்ளதாக அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

இலங்கையில் சிகரட் விற்பனையில் முன்னோடிகளான சிலோன் டுபாக்கோ கம்பனி, 2016 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட சிகரட் விலை அதிகரிப்பின் காரணமாக குறித்த ஆண்டில் தமது விற்பனை 40 வீதத்தால் வீழ்ச்சியடைந்ததாகவும் இதுவே அரசின் இந்த வருமான இழப்புக்குக் காரணமாக அமைந்திருக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடத்தல் மூலமாக நாட்டுக்குள் வரும் சிகரட்டுக்களை சட்ட ரீதியானதாக மாற்றும் வகையில் புதிய சிகரட் இறக்குமதி லைசென்ஸ் களை வழங்குவதற்கு அரசாங்கம் 2018 இன் வரவு செலவுத் திட்டத்தில் தீர்மானித்துள்ளது.

## நிதிசார்... (01 ஆம் பக்கத் தொடர்)

க.பொ.த சாதாரண தரத்தின் வியாபாரமும் கணக்கியல் கற்கையும் பாடத்திலும், உயர்தரத்தின் வியாபாரக் கற்கைகள் பாடத்திலும் உள்வாங்கப்பட்டுள்ள பங்குப் பரிவர்த்தனைச் செயற்பாடுகள், மொத்தமான பாடசாலைக் கல்விப் பாடத்திட்டத்துக்குள்ளாலும் உள்வாங்கப்படவுள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து மொத்தமாயுள்ள 98 கல்வி வலயங்களிலும் அடுத்து வரும் மூன்று வருடங்களுக்குள் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. 2018 ஆம் ஆண்டில் குறைந்தது 32 வலயங்களில் இதனை நடைமுறைப்படுத்த பங்குப் பரிவர்த்தனை நிலையம் தீர்மானித்துள்ளது.

இதன்படி தற்போது நிதிசார் கற்கைகளில் ஈடுபடுகின்ற வகுப்புக்களின் பாடவிதானம் மேம்படுத்தப்பட்டு, புதிய வகுப்புக்களுக்கும் இந்தக் கற்கைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு

## ஐ.பி.எல்.போட்டியில் ஏலம் போன இலங்கை வீரர்கள்



இந்தியாவில் இவ்வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெற்று முடிந்தது. இந்த ஏலத்தில் இலங்கை அணியைச் சேர்ந்த 18 வீரர்களின் பெயர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த நிலையில், அதில் இரண்டு வீரர்கள் மாத்திரமே அணிகளால் வாங்கப்பட்டுள்ளனர்.

இதில் இலங்கை அணியைச் சேர்ந்த மஹேல ஜயவர்தன பயிற்றுவிக்கும் மும்பை இந்தியன்ஸ் அணி, சுழற்பந்து வீச்சாளர் அகில தனஞ்சயவை தெரிவு செய்துள்ளது. இவரை இந்திய ரூபாய் பெறுமதியில் 50 இலட்சத்துக்கு மும்பை அணி வாங்கியுள்ளது.

இதேவேளை, இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளரான துஷ்மந்த சமீரவை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வாங்கியுள்ளது. இவர் ஆரம்பத்தில் எந்த அணிகளாலும் வாங்கப்படாத நிலையில், 3ம் தர ஏல வாசிப்பின் போதே ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியால் வாங்கப்பட்டுள்ளார். துஷ்மந்த சமீரவை இந்திய பெறுமதியில் ரூபாய் 50 இலட்சத்துக்கு ராஜஸ்தான் அணி வாங்கியிருந்தது.

குறித்த இருவரும் முதல் தடவை ஐ.பி.எல். ஏலத்தில் வாங்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இலங்கை அணியை சேர்ந்த முன்னணி வீரர்களான குசல் பெரேரா, லசித் மலிங்க, திசர பெரேரா மற்றும் நிரோஷன் டிக்வெல்ல ஆகியோரை எந்த அணிகளும் வாங்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் புதிதாக அமையவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம்




இலங்கை கிரிக்கெட் சபையின் அனுசரணையின் கீழ், யாழ்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கிரிக்கெட் மைதானத்தின் நிர்மாணப்பணிகள், விரைவில் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 2022ம் ஆண்டு நிறைவடையும் என கிரிக்கெட் சபையின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்த மைதானத்தை அமைப்பதற்காக சுமார் 100 மில்லியன் செலவிடப்படவுள்ளது. புதிய மைதானத்துக்கான நில அமைப்புகள் பார்வையிடப்பட்டுள்ளதாகவும், குறித்த இடத்தை இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளார்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கிரிக்கெட்டின் கட்டமைப்பை வளர்ச்சியடைய செய்யவும், குறிப்பாக வடக்கில் கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்காகவும் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. யாழில் சர்வதேச கிரிக்கெட் மைதான மொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் கடந்த வருட ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குளி/எஹட்டுமுள்ள மு.ம. வித்தியாலய இல்ல விளையாட்டு போட்டி:



குருநாகள் மாவட்டம் குளியாப்பிடிய கல்வி வலயத்தின் எஹட்டுமுள்ள முஸ்லிம் மஹா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் இல்மா இல்லம் 2018ஆம் ஆண்டிற்கான சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டது.

குளி/எஹட்டுமுள்ள முஸ்லிம் மஹா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டு போட்டி கடந்த மாதம் 29,30 ஆம் திகதிகளில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் எம்.எச்.எம். அபூதாலிப் தலைமையில் இடம்பெற்ற இறுதி நாள் நிகழ்வில் குளியாப்பிடிய வலய தமிழ் மொழி உதவி கல்விப்பணிப்பாளர் எம்.ஏ.ஜி அஷ்ரப் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இதன்போது மாணவர்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகள், அஞ்சலோட்டப் போட்டிகள், மாணவர்களின் அணிவகுப்பு மற்றும் விநோத உடைப் போட்டிகளும் இடம்பெற்றன.

## மூன்றாவது ஆண்டாகவும் சம்பியனான ஓல்ட் பென்ஸ்



எட்டாவது முறையாக நடைபெற்ற மூத்த கால்பந்து வீரர்களுக்கான திலக் பீரிஸ் சவால் கிண்ணத்தை ஓல்ட் பென்ஸ் (மூத்த வீரர்கள்) அணி தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் கைப்பற்றியது.

குரே பார்க் மைதானத்தில் கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஓல்ட் பென்ஸ் அணி கேகாலை மூத்த வீரர்களை 4-0 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தியது.

இலங்கை சொக்கர் மாஸ்டர்ஸ் சங்கம் (SLSMA) இந்த போட்டித் தொடரை ஏற்பாடு செய்தது.

பெரும் எதிர்பார்ப்போடு களமிறங்கிய கேகாலை மூத்த வீரர்கள் அணி துரதிஷ்டவசமாக ஐந்து கோல் வாய்ப்புகளை தவறவிட்ட நிலையிலேயே இறுதிப் போட்டியில் ஒரு கோல் கூட புகுத்தவில்லை.

மறுபுறம் ஓல்ட் பென்ஸ் மூத்த வீரர்கள் அணி கிடைத்த வாய்ப்புகளை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு எந்த சவாலும் இன்றி கோல்களை போட்டது.

சம்பியன் அணியான ஓல்ட் பென்ஸ் மூத்த அணிக்கு திலக் பீரிஸ் சவால் கிண்ணத்துடன் பதக்கங்கள் மற்றும் 100,000 ரூபாய் பணப்பரிசும் இரண்டாவது இடத்தை பிடித்த கேகாலை மூத்த வீரர்களுக்கு கிண்ணத்துடன், பதக்கங்கள் மற்றும் 50,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது.


வெளிவந்து விட்டது

**பயணம்**

**தர்பியா அமர்வுகளுக்கான இதழ் 53**




Published by:

**Salamah Publication**

No. 1 A, Hill Castle Place, Bandaranayaka Mawatha, Colombo 12


## இருபதுக்கு-20 துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் முதலிடத்துக்கு முன்னேறிய பாக். வீரர்



ஐ.சி.சி. புதிதாக வெளியிட்டுள்ள இருபதுக்கு-20 துடுப்பாட்ட வீரர்கள் தரப்படுத்தலின் படி பாகிஸ்தான் வீரர் பாபர் அஸாம் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

பாபர் அஸாம் இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி மற்றும் அவுஸ்திரேலிய அணியின் ஆரோன் பின்ச் ஆகியோரை பின்தள்ளி முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

நியூஸிலாந்துக்கு எதிரான இருபதுக்கு-20 தொடரை பாகிஸ்தான் அணி 2-1 என கைப்பற்றியது. இதில் பாபர் அஸாம் முதல் போட்டியில் 41 பந்துகளுக்கு 41 ஓட்டங்களையும், இரண்டாவது போட்டியில் 29 பந்துகளுக்கு 50 ஓட்டங்களையும், மூன்றாவது போட்டியில் 17 பந்துகளுக்கு 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்திருந்தார்.

இவ்வாறு சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வரும் பாபர் அஸாம் 786 புள்ளிகளுடன் முதல் இடத்தை பிடித்துள்ளார். இதற்கு அடுத்தப்படியாக ஆரோன் பின்ச் 784 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், 776 புள்ளிகளுடன் விராட் கோஹ்லி 3 வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

இதேவேளை இந்த பட்டியலில் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு வரிசைகளில் இலங்கை அணி வீரர்கள் இடம்பிடிக்கவில்லையென்பதுடன், சகலதுறை வீரர்கள் பட்டியலில் திசர பெரேரா 10வது இடத்தையும், மெத்தியூஸ் 16வது இடத்தையும் பிடித்துள்ளனர்.



இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் மாணவர் இயக்கமான ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் காத்தான்குடி கிளை உறுப்பினர்களில் இம்முறை 2017 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்கள், உயர் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்கள் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் காத்தான்குடி கிளையில் சிறப்பாக பணியாற்றியவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் காத்தான்குடி கிளை காரியாலயத்தில் இடம்பெற்றது.


Printed and Published by Focus Media (Pvt) Ltd. 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org